
விநோதங்களின் உதவிகொண்டே வாழ்க்கையோடு போராடும்

சாகஸக் கன்னியின் சாமர்த்தியமான கதை..............

அவளை அவன்
என்று எண்ணி
அவதிப்படுகிறாள்
கன்னி......



ஜூபிடரின்
கன்னியின் காதலி

ராம்நாத்-சேகர்
தயாரிப்பு
டைரக்ஷன் ராம்நாத்
வசனம் எஸ். டி. சுந்தரம்
ஸ்டூடியோ சென்ட்ரல்......

மஹாகவி ஷேக்ஸ்பியரின் 12-ம் இரவு கதையை தழுவியது

ராஜதானி பூராவும் 40 தியேட்டர்களில் நடைபெறுகிறது

சென்னை — பாரகன் & லக்ஷ்மியில் தினசரி மூன்று காட்சிகள்

இரண்டு


எடர்லு

கடியாரங்கள்

கனவான்களுக்கு

கீழே காணும் வட்டமான கைகெடியாரம்தான் எடர்லு நெ. 9542. ஸ்டீல் அடிப்பட்டை, சென்டர் செகன்டுடன் மிகவும் வசீகரமான ரோல்டு கோல்டு கெடியாரம் ரூ. 222/-





பக்கத்தில் காணும் நீண்ட சதுர கெடியாரம்தான் எடர்லு நெ. 9521 ஸ்டீல் அடிப்படையுடன், வெள்ளிப் பூச்சுக் கொண்ட முள்களும், சற்று உயர்ந்த எண்களும் கொண்டது. சாரிக் எண்களுடனும் இதே கெடியாரம் கிடைக்கும். விலை ரூ. 213/-

ஆண்களுக்குத் தேவையான இதர எடர்லு கெடியாரங்களும் பெண்டிருக்குப் பாங்கமான இதர பல ரக மாடல்களும் கிடைக்கும். கேட்லாக் தேவையானால் எழுதுங்கள்.

FAVRE-LEUBA

பேவர் - லூபா & கம்பெனி லிமிடெட் பம்பாய் & கல்கத்தா


அதிக பாதுகாப்பு அளிப்பவை

Firestone

பயர்ஸ்டோன்

ஸூபர்-பலூன்கள்

ஏனெனில் பாதையில் சரியாகப் பொருந்தி ரஸ்தாவில் அகலமாகப் பதிந்து ஓடுவதற்காகவே செய்திருக்கும் பயர்ஸ்டோன் "ஸ்கிட்—ரெஸிஸ்டர்கள்" டயரில் அமைத்திருப்பதால் சருக்கிவிடாமல் மகத்தான பாதுகாப்பு அளிக்கிறது.



இன்று சிறந்தது - நாளை இன்னும் சிரேஷ்டமானது

கல்கி பொருளடக்கம் ஐ

மலர் 9 | இதழ் 4 — ஆகஸ்டு 28 — விரோதி ஆவணி 12உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே


இப்பொழுது சென்னை
கிரௌன்
டாக்கீஸிலும் மற்றும்
அநேக முக்கிய நகரங்களிலும்
நடைபெறுகிறது
சென்னையில் தினசரி 3 காட்சிகள்
3, 6·15, 9·30
பாஸ்கர்ஸ்
நாட்டியராணி
டைரக்ஷன்: பி.என்.ராவ் • ஸ்டுடியோ: ஜெமினி • பாட்டுகள். டி.கே. பட்டம்மாள் • நடனம்: வி. மாதவன்

கல்கி

மலர் 9 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 4

என்ன செய்தி?

விடுதலையானவர்கள்

இந்தியா தேசத்தில் கடைசி கடைசியாகத் திவான் உத்தியோகத்திலிருந்து விடுதலை யடைந்தவர் ஸ்ரீ ஏ. ராமசாமி முதலியார். சென்ற இரண்டு வருஷத்தில் நூற்றுக் கணக்கான திவான்கள் நாடெங்கும் விடுதலை பெற்று வந்த போதிலும் ஸ்ரீ ஏ. ராமசாமி முதலியார் மட்டும் மைசூரிலேயே சிறைபட்டுக் கிடந்தார். இடையில் ஒரு சமயம் ஐக்கிய நாடுகளின் சபைக்குப் போவதற்காக அவருக்குப் 'பரோல்' விடுதலை கிடைத்திருந்தது. சென்ற வாரத்திலேதான் அவருக்கு நிரந்தர விடுதலை கிடைத்தது. மைசூரையும் திவான் பதவியையும் விட்டு முடிவாக அவர் விலகுவதற்கு முன்னால் "விடுதலை யடைந்த கைதிகள் சங்க"த்தில் அவர் பேசினார். "இதுதான் திவான் பதவியிலிருந்து கொண்டு நான் பேசும் கடைசிப் பேச்சு. அதற்காக மிகவும் சந்தோஷப்படுகிறேன்!" என்று சொன்னார். திவான் பதவியிலிருந்து விடுதலையாகிச் சென்னைக்கு வந்ததும் இங்கேயும் "விடுதலையானவர்களின் மகாசபை"யில் முதற் பிரசங்கம் செய்யும்படியான பாக்கியம் அவருக்குக் கிடைத்தது. காலேஜுகளிலிருந்து விடுதலையடைந்த பட்டதாரிகளின் 'கான்வொகேஷன்' மகா சபையில் பேசியதைத்தான் குறிப்பிடுகிறோம். மொத்தத்தில் ஸ்ரீ ஏ. ராமசாமி முதலியாருக்கும் விடுதலை யடைந்தவர்களுக்கும் பொருத்தம் அதிகமாயிருப்பதைக் குறித்து மகிழ்கிறோம்.

சிந்தனைக்கு வேலை

பட்டதாரிகளின் விடுதலைப் பெருவிழாவில் ஸ்ரீ ஏ. ராமசாமி முதலியார் இம்முறை நிகழ்த்திய பிரசங்கத்தில் பல அரிய கருத்துக்கள் திகழ்கின்றன. அவை அறிவுடையோரின் சிந்தனா சக்திக்கு வேலை தருகின்றன. இந்தியா சுதந்திரம் பெற்றதும் இந்திய சர்க்கார் சமாளிக்க வேண்டிய மலைபோன்ற பிரச்னைகளைப் பற்றி ஸ்ரீ ஏ. ராமசாமி முதலியார் குறிப்பிட்டு, "கடவுளுடைய அருளாலும் சில முக்கிய தலைவர்களின் உறுதியினாலும் அறிவு வன்மையினாலுமே அந்த மலை போன்ற அபாயங்களை இந்தியா சமாளித்துத் தப்பிப் பிழைத்தது! சரித்திரம் இதற்குச் சான்று கூறும்!" என்று சொன்னார். இந்தியா தேசத்தின் சிறந்த அறிவாளிகளில் ஒருவர் ஸ்ரீ ஏ. ராமசாமி முதலியார் என்பது அனைவரும் அறிந்த விஷயம். அரசியல் வாழ்க்கையில் நீடித்த அநுபவம் உள்ளவர். பட்டதாரிகளுக்கு சர்டிபிகேட் வழங்கும் சந்தர்ப்பத்தில் அவர் நம்முடைய காங்கிரஸ் மேலோர்களின் இராஜ தந்திரத் திறமைக்கு இந்த சர்டிபிகேட்டையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறார் என்றால், அதைப் பொது மக்கள் ஒரு தடவைக்குப் பத்து தடவையாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

உத்தியோகம் எங்கே?

காலேஜுகளில் படித்துப் பலவிதப் பட்டங்கள் பெற்றவர்களின் வருங்காலத்தைப் பற்றி ஸ்ரீ ஏ. ராமசாமி முதலியார் குறிப்பிடும்போது ஒரு கவலையைத் தெரிவித்திருக்கிறார்; அத்துடன் ஒரு எச்சரிக்கையும் விடுத்திருக்கிறார்.

"நாளுக்கு நாள் காலேஜுகள் அதிகமாகி வருகின்றன; படித்துப் பாஸ் செய்த பட்டதாரிகளும் பெருகி வருகிறார்கள். ஆனால் இவ்வளவு பட்டதாரிகளும் வாழ்க்கையில் என்ன செய்யப் போகிறார்கள்? பட்டம் பெற்றவர்களுக்கெல்லாம் நிச்சயமாக உத்தியோகம் கிடைத்த காலம் போய்விட்டதே! உத்தியோகம் கிடைக்காதவர்கள் எல்லாரும் என்ன செய்வார்கள்?" என்ற கவலையை அவர் வெளியிட்டிருக்கிறார்.

"படித்துப் பட்டம் பெற்றுவிட்டு உத்தியோகம் இன்றி மனக் கசப்புடன் திரிகிறவர்கள் சமூகத்தில் பல நாசகரமான வேலைகளில் ஈடுபடக் கூடுமல்லவா? அத்தகைய நிலைமைக்கு இடங் கொடுக்கலாமா?" என்று எச்சரித்திருக்கிறார்.

இந்த வித அபாயத்தை முன்னிட்டுக் காலேஜுகளை அதிகமாக்குவதை நிறுத்தி



ஆகஸ்டு 15உ முதல் ஒரு வாரம் தமிழ் நாடெங்குமுள்ள நகரங்களிலும் கிராமங்களிலும் குதூகலமாகச் சுதந்திரத் திருநாள் கொண்டாடப்பட்டது. ஆகஸ்டு மீ 20உ யன்று பேரம்பாக்கம் என்னும் கிராமத்தில் ஊரே திரண்டு வந்து சுதந்திர விழா நடத்திய காட்சியை மேலே காணலாம். விழாத் தலைவர் கனம் பக்தவத்ஸலம் அவர்கள்.

விடவேண்டும் என்று சிலர் சொல்லும் யோசனையை ஸ்ரீ ஏ. ராமசாமி முதலியார் பலமாக எதிர்க்கிறார்.

ஆக, செய்ய வேண்டியது என்ன? அபாயம் வராமல் தடுக்கும் உபாயம் என்ன? அதுதான் தெரியவில்லை. ஸ்ரீ ஏ. ராமசாமி முதலியாரும் தமது பிரசங்கத்தில் அதைப் பற்றிச் சொல்லவில்லை. கேட்பவர்களின் சிந்தனையைத் தூண்டி விடுவதுடன் அவர் நின்றுவிடுகிறார்.

நமது கல்வி முறையில் உள்ள சீர்கேடு இன்னும் பலருடைய மனதையும் வாட்டிக்கொண்டுதா னிருக்கிறது. அவர்கள் நமது சிந்தனைக்கு வேலை கொடுத்துத்தான் வருகிறார்கள். ஆனால் தெளிவான வழி மட்டும் யாரும் சொல்லவில்லை. தெரிந்திருந்தாலும் வெளியிட்டுச் சொல்வதற்குப் பயப்படுகிறார்கள்.

இந்தியாவின் கல்வி முறையின் அடிப்படையை அடியோடு மாற்றி அமைப்பது ஒன்றுதான் அந்த அபாயத்தைப் போக்க வழி; வேறு வழியே கிடையாது.

புதிய சாதிப் பிரிவினை

இந்தியாவில் பிரிட்டிஷார் ஏற்படுத்திய கல்வி முறை புதிய இரண்டு சாதிகளை இந்த நாட்டில் ஏற்படுத்தி விட்டது. (1) படித்துவிட்டுக் கச்சேரிக்குப் போய் உத்தியோகம் பார்க்கிறவர்கள்; (2) படிக்காமல் கையினால் உழைத்து வேலை செய்கிறவர்கள்—என்னும் இரண்டு சாதிகளை ஏற்படுத்தி விட்டது. இந்தச் சாதிப் பாகுபாட்டை முதலில் ஒழிக்க வேண்டும்.

ஆரம்பப் பள்ளிக்கூடத்தி லிருந்தே அந்தப் பாகுபாட்டை ஒழிக்கவேண்டும். "பிள்ளைகள் மூன்று நாள் வயலிலோ வீட்டிலோ வேலை செய்யவேண்டும்; மற்ற மூன்று நாளும் பள்ளிக்கூடத்தில் படிக்கவேண்டும்" என்று ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் உத்தியோகத்துக்காகப் படிப்பு என்ற மனப்பான்மை ஒழியும். பிறகு படிப்படியாக ஹைஸ்கூல்களிலும் காலேஜுகளிலும் அதே முறையை அனுஷ்டிக்க வேண்டும்.


தெருவில் பத்திரிகை விற்றுப் பிழைக்கிற பையன் சாயங்காலம் ஹைஸ்கூலில் படித்து மெட்ரிகுலேஷன் பரீட்சை தேற இடம் இருக்கவேண்டும்.

பகலில் ரயில்வே ஸ்டேஷனில் போர்ட்டர் வேலை செய்யும் தொழிலாளி இரவில் காலேஜுக்குச் சென்று பி. ஏ. பட்டம் பெறுவதற்கு வசதி செய்யவேண்டும்.

இங்கிலாந்து, அமெரிக்கா, ருஷியா முதலிய முன்னேற்ற தேசங்களில் இந்த மாதிரி தொழில் செய்து கொண்டே படிக்கும் முறை அனுஷ்டானத்தில் இருக்கிறது.

இந்தியா உலகத்தில் முன்னேற்றமான நாடுகளுடன் இணையாக இருக்கவேண்டுமானால் முதலில் கைத்தொழில், இரண்டாவது கல்வி என்ற முறை ஏற்படவேண்டும். கல்விச் சீர்திருத்தம் பற்றிய மற்றப் பேச்செல்லாம் வெறும் பேச்சாகவே முடியும்.

அம்மாடியோ! இன்னும் இரண்டு ஓநாய்களா!



ஏற்கனவே பொதுமக்களுக்கு இருக்கும் கஷ்டங்களோடு இப்பொழுது சர்க்கரையும் காப்பியும் விலை ஏறிக்கொண்டே போகின்றன.

நிகழ்ச்சிச் சித்திரம்

-சாஸ்திரி



அபத்த பட்ஜெட்டும் அவசர வரிவிதிப்பும்

நம்முடைய சென்னை மந்திரிமார்கள் நாலாபுறமும் சென்று சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள். போகிற இடங்களில் எல்லாம் பிரசங்கம் செய்கிறார்கள். முக்கியமாக, புதிய வரிகளைப் பற்றிப் பேசுகிறார்கள். புதிய வரிகள் போட வேண்டிய அவசியம் பற்றியும் அந்தப் புதிய வரிகளை ஜனங்கள் சுணங்காமல் கொடுக்க வேண்டிய கடமையைப் பற்றியும் பேசுகிறார்கள். புதிய வரிகளை எதிர்ப்பவர்களைப் பற்றி இடையிடையே கொஞ்சம் காரசாரமாகப் பேசியும் வருகிறார்கள்.

இதெல்லாம் திருப்திகரமான விஷயந்தான். இப்போது நம் நாட்டில் ஜனநாயக ஆட்சி நடைபெறுகிறது. ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைகள் சட்டங்களைச் செய்கின்றன. அவற்றை ஜனங்களால் அங்கீகரிக்கப்பட்ட மந்திரிகள் நடத்தி வைக்கிறார்கள். இந்த விஷயத்தைக் கொஞ்ச நாளைக்கு முன்பு நம் மந்திரிகள் அடியோடு மறந்துவிட்டது போலத் தோன்றியது. ''அப்படித்தான் வரி போடுவோம்; அது எங்கள் இஷ்டம்; நீங்கள் யார் கேட்பதற்கு?'' என்ற தோரணையில் மந்திரிமார்கள் சட்டசபையில் பேசினார்கள். அந்த மனோபாவத்தைக் கைவிட்டு ஜனங்களிடம் வந்து வரிபோடும் அவசியத்தை விளக்கிச் சொல்ல நம் மந்திரிகள் முன் வந்திருப்பது மிகவும் திருப்திகரமான விஷயம். பொதுஜனங்களுக்குப் பதில் சொல்ல வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை உணர்கிறார்கள் அல்லவா? அதைப் பெரிதும் பாராட்டுகிறோம். பாராட்டி விட்டு, புது வரிகளை ஆதரித்து அவர்கள் கூறும் வாதங்களைச் சற்றே ஆராய்ந்து பார்க்கலாம்.

* * *

புது வரிகளை எதிர்த்தவர்கள் மீது நம் மந்திரிமார்கள் எரிந்து விழுகிறார்களே?—அதில் அர்த்தம் ஒன்றுமில்லையென்பதை முதலில் குறிப்பிட விரும்புகிறோம். எதிர்த்தவர்கள் எதிர்த்ததற்குக் காரணம் இருக்கவே செய்தது. அதை மந்திரிகளே தங்களுடைய காரியங்களினால் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். நிதி மந்திரி கோபால் ரெட்டி மொத்தம் 12 பொருள்களுக்குப் புதிய வரி விதிக்கப் போவதாக முதலில் சொன்னார்; அவ்விதம் மசோதாவும் கொண்டு வந்தார். ஆனால் காரியத்தில் நடந்தது என்ன? பன்னிரண்டு பொருள்களில் பத்துப் பொருள்களை வரி விதிப்பிலிருந்து விலக்கிவிட்டார். இரண்டு பொருள்கள் தான் புது வரிக்கு உள்ளாயின.

ஆகவே, என்ன ஏற்படுகிறது? எதிர்த்தவர்களின் எதிர்ப்பு நியாயமானது என்று ஏற்படுகிறது. நிதி மந்திரி அவசரப்பட்டும் அநாவசியமாகவும் பல பொருள்களின் மீது வரி விதிப்பதாக மசோதாக் கொண்டு வந்தார் என்று ஏற்படுகிறது. அப்படிக் கொண்டு வந்தது பெருந் தவறு என்றும் ஏற்படுகிறது. அவரே அதை ஒப்புக் கொண்டுதானே பன்னிரண்டில் பத்தை நீக்கி விட்டிருக்கிறார்? அப்படி யிருக்கும்போது புது வரிகளை எதிர்த்தவர்களைப் பொதுப் படையாகத் திட்டுவதில் என்ன பயன்?

* * *

புது வரிகள் போட வேண்டியிருக்கும் அவசியத்தைப் பற்றி நம் மந்திரிகள் பேசியிருக்கிறார்கள் அல்லவா? அவர்கள் அந்த அவசியத்துக்குக் கூறியுள்ள காரணங்கள் இரண்டு:—

1. மதுவிலக்கினால் இந்த மாகாண சர்க்காருக்கு 17 கோடி ரூபாய் வருமானம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

2. பொதுஜனங்களுக்கு நன்மையான பல நிர்மாணத் திட்டங்களை நடத்தி வைப்பதற்குப் பணம் தேவையாக இருக்கிறது.

மந்திரிகள் கூறும் இந்த இரண்டு காரணங்களும் சரியான காரணங்கள் அல்லவென்று நாம் சொல்லுகிறோம்.

1. மதுவிலக்கினால் ஏற்பட்ட 17 கோடி ரூபாய் வருமான நஷ்டமும் ஏற்கெனவே வசூலிக்கப்பட்டு வரும் புது வரிகள் மூலம் சரியாகி விட்டது.

2. பொது ஜனங்களுக்கு நன்மையான திட்டங்களைச் சென்னை சர்க்கார் நடத்துவதற்கு வேண்டிய பணம் சர்க்காரின் கையிருப்பில் இருக்கிறது.

பொது நன்மைக்குரிய திட்டங்களைச் சென்னை சர்க்கார் நடத்த முடியாமலிருப்பதற்குக் காரணம் அவர்களின் கையில் அத்தகைய திட்டம் இல்லாமையே தவிரப் பணம் இல்லாமையல்ல.

இதை நிதி மந்திரி கனம் கோபால ரெட்டியாரின் பட்ஜெட் பிரசங்கங்களிலிருந்தே நிரூபிக்கலாம்.

* * *

நாளது ஆகஸ்டு மாதம் முதல் வாரத்தில் நிதி மந்திரி கனம் கோபால ரெட்டி கூறியதாகத் தினப் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. நிதி மந்திரி ஆனந்தக் களிப்புடன் வெளியிட்ட செய்தி இது. 1948–49ல் சென்னை மாகாண வரவும் செலவும் சரிக்கட்டிப் போய்விட்டதாம்! வரவுக்கும் செலவுக்கும் சரிக்கட்டாமல் துண்டு விழும் என்று பட்ஜெட்டில் எதிர்பார்த்தபடி துண்டு விழவில்லையாம்! "பூரண மது விலக்குச் செய்திருந்தும் வரவுக்கும் செலவுக்கும் சரியாகி 36 லட்சம் மிச்சமும் கிடைத்திருப்பது எவ்வளவு திருப்திகரமான விஷயம்!" என்று கூறி நிதி மந்திரி மகிழ்ந்திருக்கிறார்.

உண்மையில் இது மகிழ்ச்சி தரும் விஷயமும் அல்ல; பெருமைப்பட வேண்டிய காரியமும் அல்ல; நம்முடைய மாகாண பட்ஜெட் தயார் செய்கிறவர்களைப் பற்றி ரொம்பவும் கவலைப்பட வேண்டிய காரியம்.

ஒரு அரசாங்கத்தின் பட்ஜெட்டைத் தயாரிப்பவர்கள் வரவையும் செலவையும் சரியாக மதிப்பிட்டு பட்ஜெட்டைத் தயாரிக்க வேண்டும்.

அப்படிச் செய்யாவிட்டால் பட்ஜெட்டுக்கு அர்த்தமேயில்லை.

வரவைக் குறைவாகவும் செலவை அதிகமாகவும் காட்டி பட்ஜெட் தயாரிக்கக் கூடாது. அப்படித் தயாரித்தால் அதன் விளைவு என்ன? ஜனங்கள் தலையில் அநாவசியமாக வரியைச் சுமத்துவதுதான்.

1947—48 பட்ஜெட்

நிதி மந்திரி கோபால ரெட்டி சென்ற இரண்டு வருஷத்துக்கும் நடை முதல் வருஷத்துக்கும் பட்ஜெட் தயாரித்ததற்குப் பொறுப்பாளியாவார்.

அவருடைய பட்ஜெட் இலட்சணத்தைக் கொஞ்சம் கேளுங்கள்.

1947-48க்கு (அதாவது 1947 ஏப்ரல் முதல் 1948 மார்ச்சு முடிய) நிதி மந்திரி பட்ஜெட் தயாரித்து 1947 மார்ச்சில் சமர்ப்பித்தார்.

அந்தப் பட்ஜெட்டில் காட்டிய உத்தேச வரவு செலவு வருமாறு :—

உத்தேச வரவு	ரூ. 48,24,38,000
உத்தேசச் செலவு	ரூ. 49,73,38,000
வரவுக்குமேல் செலவு	1,49 00,000

இவ்விதம் துண்டு விழும் ஒரு கோடி நாற்பத்தொன்பது லட்சம் ரூபாயையும் சென்னை சர்க்காரின் ரிசர்வ் நிதியிலிருந்து எடுத்து சரி செய்யப் போவதாக அப்போது சொன்னார்.

அடுத்த வருஷம் மார்ச்சில் 1948-49 பட்ஜெட்டை ஆஜர் செய்தபோது முந்தைய வருஷத்துக்குத் திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தைக் குறிப்பிட்டார். அப்போது அவர் என்ன சொன்னார் தெரியுமா? எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிக வருமானம் வந்து விட்டபடியால்,

ரிஸர்வ் நிதியிலிருந்து செலவுக்கு எடுப்பதற்குப் பதிலாக ரிஸர்வ் நிதியில் 2 கோடி 55 லட்சம் சேர்க்கப்படும் என்று சொன்னார்.

(இந்த விவரங்களை நிதி மந்திரியின் 1948-49 பட்ஜெட் பிரசங்கத்தில் 35-ம் பக்கத்தில் காண்க.)

ஆனால், முடிவில் நடந்தது என்ன? இதையும் நாளது 1949-50 பட்ஜெட் பிரசங்கத்தில் நாலாம் பக்கத்தில் அவரேதான் சொல்லியிருக்கிறார்:

"1947-48ம் வருஷத்து முடிவான வரவு செலவுக் கணக்கின் பிரகாரம், செலவைக் காட்டிலும் அதிக வரவு 5 கோடி 10 லட்சம் ரூபாய்; இந்த 5 கோடி 10 லட்சத்தையும் ரிஸர்வ் நிதிக்கு மாற்றியிருக்கிறது."

அதாவது 1947-48-ம் ஆண்டில் சர்க்காரின் அவசியத்தைக் காட்டிலும் 5 கோடி 10 லட்சம் ரூபாய் ஜனங்களிடமிருந்து அதிகமாக வரி வசூலிக்கப்பட்டது என்று ஆகிறது.

1947-48ம் ஆண்டு பட்ஜெட்டின்படி ஒரு கோடி 49 லட்சம் துண்டு விழ வேண்டியிருக்க, உண்மையில் 5 கோடி 10 லட்சம் அதிக வருமானம் வந்திருக்கிறது என்று சொன்னால், பட்ஜெட் தயாரிப்பில் 6 கோடி 59 லட்சம் வித்தியாசமாகத் தயாரித்திருக்கிறார்கள் என்று ஏற்படுகிறது.

இப்படித் தவறான பட்ஜெட் தயாரித்ததற்குப் பொறுப்பாளர்கள் வரவு செலவு இலாகாவில் ஒரு நிமிஷமும் இருப்பதற்கு அருகதையற்றவர்கள் என்று தயக்கமின்றிச் சொல்லலாம்.

1948-49 பட்ஜெட்

ஞானம் கோபால ரெட்டி 1947-ல் புதிதாக நிதி மந்திரியானவர். ஆகையால் அந்த வருஷத்து பட்ஜெட் தயாரிப்பில் அவருக்கு அவ்வளவு பொறுப்பில்லை என்று சொல்லலாம்.

அடுத்த வருஷத்துக் கதையைக் கேளுங்கள். 1948-49 பட்ஜெட்டை 1948 மார்ச்சு மாதத்தில் நிதி மந்திரி ஆஜர் செய்தார். அதன் விவரம்:

உத்தேச வரவு	ரூ.	50,32,31,000
உத்தேசச் செலவு	ரூ.	55,94,31,000
வரவுக்கு மேல் செலவு	ரூ.	5,62,00,000

ஆகையால் 1948—49 க்கு சென்னை சர்க்காரின் ரிஸர்வ் நிதியிலிருந்து ரூ. 5 கோடி 62 லட்சம் எடுத்துக் கொள்ளப்படும் என்று சென்ற வருஷம் மார்ச்சில் நிதி மந்திரி கூறினார்.

அவரே இந்த வருஷம் மார்ச்சில் திருத்தப்பட்ட உத்தேச பட்ஜெட்டின்படி ரிஸர்வ் நிதியிலிருந்து அவ்வளவு எடுக்கவேண்டியிராது என்றும் ரூ. 3 கோடி 66 லட்சம் எடுத்தால் போதும் என்றும் தெரிவித்தார்.

(நிகழும் 1949—50 ம் வருஷத்திய நிதி மந்திரியின் பட்ஜெட் பிரசங்கத்தைப் பார்க்கவும். பக்கம் 44.)

இந்த மாதத்தில் என்ன தெரிவித்திருக்கிறார்? 1948—49 ம் வருஷத்து முடிவான கணக்கின்படி துண்டு விழாது என்றும், 46 லட்சம் மிச்சமாகும் என்றும் தெரிவிக்கிறார்!

ஆகவே சென்ற 1948—49 பட்ஜெட் தயாரித்தவர்களும் சுமார் 6 கோடி ரூபாய் முன்பின்னாகக் கணக்குத் தயாரித்துச் சென்னை சர்க்காரையும் பொது மக்களையும் அநாவசியமாகப் பயமுறுத்தியிருக்கிறார்கள் என்று ஏற்படுகிறதா, இல்லையா?

அதே ஆசாமிகள்தான் இந்த 1949—50 பட்ஜெட்டையும் தயாரித்திருக்கிறார்கள். அதை ஆதாரமாகக் கொண்டுதான் நம்முடைய மந்திரிகள் ''வரவுக்கும் செலவுக்கும் சரிக்கட்ட முடியவில்லை: ஆகையால் புதிய வரிகளைப் போட்டேயாக வேண்டும்! இல்லாவிட்டால் அரசாங்கம் 'இன்ஸால்வெண்ட்' ஆகிவிடும்!'' என்று முறையிடுகிறார்கள்!!

பட்ஜெட்டில் துண்டுவிழுகிற விஷயத்தைப் பற்றி சென்ற ஜூலை மாதம் 10உ ''கல்கி'' இதழில் ''வரி போட வழி சொல்லுகிறோம்'' என்ற தலையங்கத்தில் எழுதியிருந்ததை நேயர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம். அந்தப் பகுதி பின்வருமாறு:—

''தற்சமயம் சென்னை மாகாணத்திற்கு வருஷ வருமானம் ரூபாய் ஐம்பது கோடிக்கு மேல் வருகிறது. வீண் செலவுகளைக் குறைத்துச் சிக்கனமாக நிர்வாகத்தை நடத்தினால் இந்த ஐம்பது கோடி ரூபாய்க்குள் அரசாங்கம் நடக்கும்.

பூரண மதுவிலக்கினால் ஏற்பட்ட வருமான நஷ்டத்துக்குப் பலவகை விற்பனை வரிகளும் சென்ற மூன்று வருஷத்தில் விதித்திருக்கும் மற்றப் புதுவரிகளும் சரிசெய்து விட்டன.

நாலுகோடி ரூபாய் வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் என்று சொல்வதும் பிசகுதான்.

வரவேண்டியதைக் குறைத்தும் செலவினங்களை மிகைப்படுத்தியும் கணக்குப் போட்டதனால் இந்தத் துண்டு விழுந்திருக்கிறது.

புதிய வரிகளைப் போட்டு வருமானத்தை அதிகப்படுத்துவதும் வருமானம் அதிகமாயிருக்கிறதே என்று சர்க்கார் உத்தியோகங்களையும் சம்பளங்களையும் அதிகப்படுத்துவதும் சர்க்கார் பொருளாதார நிபுணர்கள் அனுசரிக்கும் ஒரு தந்திரம். இந்தத் தந்திரத்துக்கு நம்முடைய மந்திமந்திரிகள் இரையாகி வருகிறார்கள்.''

இவ்விதம் ஜூலை 10உ நாம் எழுதினோம். நாம் எழுதியதற்கு முடிவான அத்தாட்சி ஆகஸ்டு மாதம் 3உ ஞானம் கோபாலரெட்டி கூறியிருக்கிறார்.

• • •

நம்முடைய மந்திரிகள் ''பொது நன்மைத் திட்டங்களை நடத்தப் பணம் வேண்டியிருக்கிறது. அதற்காகவே புது வரிகளைப் போடுகிறோம்'' என்று சொல்கிறார்கள் அல்லவா?

ரொம்ப சரி; பொது நன்மைக்குரிய திட்டங்களுக்குப் பணம் வேண்டியதுதான். அதற்காக வரி போடுவதும் முறைதான். போடும் வரியைத் தாங்கக் கூடிய கைகளாகப் பார்த்துப் போட வேண்டும். ஏற்கெனவே வாழ்க்கைச் செலவைத் தாங்க முடியாமல் தவிப்பவர்களுடைய தலையில் மறுபடியும் கையை வைக்கக் கூடாது.

புது வரி யார் தலையில் போடுவதாயிருந்தாலும், ''அது அவசியந்தானா? அவசியம் என்பதை நிரூபியுங்கள்!'' என்று கேட்க மக்களுக்கு உரிமை உண்டு. ''பொது நன்மைக்குரிய என்ன திட்டங்களை நடத்தப் போகிறீர்கள்? அதற்கு எவ்வளவு பணம் வேண்டும்?'' என்று கேட்க உரிமை உண்டு. ''முதலில் உங்கள் பட்ஜெட்டை ஒரு வருஷம் சரியாகப்

போட்டுக் காட்டுங்கள்! பிறகு புதிய வரிகளைப் போடுங்கள்!'' என்று வற்புறுத்தவும் தமக்கு உரிமை உண்டு.

இந்த வருஷத்தில் அப்படியே சர்க்கார் பல புதிய பொது நன்மைத் திட்டங்களை நடத்தி, அதன் காரணமாக வரவுக்குமேல் செலவு அதிகமாகி விடுகிறது என்று வைத்துக் கொள்வோம். அதனால் மோசம் ஒன்றும் இல்லை.

அட்வைஸரி சர்க்கார் விற்பனை வரி மூலம் வந்ததைச் செலவு செய்யாமல் வைத்து விட்டுப் போன 30 கோடி ரூபாய் ரிஸர்வ் நிதியில் இருக்கிறது.

1947—48ல் ஒன்றரைக் கோடி ரூபாய் கையிருப்பு நிதியிலிருந்து எடுப்பதற்குப் பதிலாக ஐந்து கோடி ரூபாய் அதில் சேர்த்திருக்கிறோம்.

சென்ற 1948—49ல் ஐந்து கோடி 62 லட்சம் கையிருப்பு நிதியிலிருந்து எடுப்பதாகத் திட்டம் போட்டு அதன்படி எடுத்துக் கொள்ளவில்லை.

நடைமுதல் வருஷத்தில் துண்டு விழுந்தால் இட்டு நிரப்புவதற்கு மேற்படி தொகைகள் எல்லாம் இருக்கின்றன. இந்த வருஷம் கையிருப்பிலிருந்து எடுத்துக் கொண்டு அடுத்த வருஷத்திலிருந்து அவசியத்துக்குத் தக்கபடி புது வரிகள் போடலாம்.

அவசரப்பட்டு இந்த வருஷமே புது வரிகளைப் போட வேண்டிய அவசியம் கிடையவே கிடையாது.

* * *

பொதுஜன நன்மைத் திட்டங்களைப் பற்றி இன்னொரு விஷயம் சொல்ல வேண்டும்.

அணைக்கட்டு முதலிய பெரிய நீர்ப்பாசனத்திட்டங்களுக்கெல்லாம் கடன் வாங்கித்தான் சர்க்கார் செலவு செய்ய வேண்டுமே தவிர வரி வசூலிலிருந்து செலவு செய்யக் கூடாது. இது உலகம் முழுவதிலும் அறிவுடைய மனிதர்கள் நடத்தும் எல்லா சர்க்கார்களிலும் கையாளும் முறை.

இதைத் தவிர, பொதுஜன நன்மைக்கான திட்டங்களுக்கு இந்திய சர்க்கார் பெரிய நன்கொடைகள் தருகின்றனர்.

சென்ற வருஷத்திலும் அதற்கு முந்தைய வருஷத்திலும் இந்திய சர்க்கார் எத்தனை தொகை மான்யம் கொடுப்பதாகச் சொன்னார்கள், அதில் சென்னை சர்க்கார் எவ்வளவு வாங்கிக் கொண்டார்கள் என்ற விவரம் வெளியாகுமானால் மிக ரஸமாயிருக்கும்.

நாம் அறிந்திருப்பது இது :—

சென்ற 1948—49ம் வருஷத்தில் பல பொது நன்மைத் திட்டங்களுக்கு இந்திய சர்க்கார் சென்னைக்கு ஐந்து கோடி ரூபாய் நன்கொடை அனுமதித்தார்கள். ஆனால் சென்னை சர்க்கார் திட்டம் போட்டு அனுப்பி மேற்படி தொகையைப் பெற்றுக் கொள்ளவில்லை!

இப்படி இந்திய சர்க்காரிடமிருந்து வந்திருக்கவேண்டிய ஐந்து கோடி ரூபாயைத் திட்டம் போட்டு அனுப்பி வாங்குவதற்குக் கையினால் ஆகாதவர்கள்தான் ''பொது நன்மைத் திட்டத்துக்குப் பணம் வேண்டும்'' என்று சொல்லிப் புது வரி போடுகிறார்கள்! அதை நியாயம் என்று ஸ்தாபிக்கப் படாத பாடு படுகிறார்கள்!

* * *

உலகத்தில் பல தேசங்களில் வரிக் கொடுமை தாங்காததினாலேயே சுதந்திரப் போராட்டங்கள் எழுந்து அரசாங்கங்கள் கவிழ்ந்திருக்கின்றன.

இங்கிலாந்தில் சார்லஸ் அரசன் விதித்த வரிக் கொடுமையினாலேயே மக்கள் கொதித்தெழுந்து புரட்சி செய்தார்கள். முதலாவது சார்லஸ் அரசனின் தலையே போய்விட்டது.

அமெரிக்க மக்கள்மீது மூன்றும் ஜார்ஜ் மன்னன் விதித்த வரிகளின் கொடுமையினாலேயே அமெரிக்க சுதந்திரப் போர் மூண்டது. அதன் முடிவில் பிரிட்டிஷ் தொடர்பையே அமெரிக்கா கத்திரித்துக் கொண்டது.

இந்தியாவிலும் காந்தி மகாத்மா உப்பு வரியை அடிப்படையாகக் கொண்டு சுதந்திரப் போர் நடத்தினார். காங்கிரஸ் வாதிகள் பிரசாரம் செய்யும் போதெல்லாம் பிரிட்டிஷார் தீப்பெட்டி முதல் இடுப்புத் துணிவரையில் பற்பல வரிகள் விதிப்பதைப் பற்றிச் சண்டப் பிரசண்டமாய்ப் பிரசாரம் செய்திருக்கிறார்கள்.

இதையெல்லாம் சென்னை மந்திரிகளுக்கு ஞாபகப்படுத்துகிறோம்.

ஜனநாயக சர்க்கார் வரி போடக் கூடாது என்றோ புதுவரிகளே போடக் கூடாது என்றோ நாம் சொல்லவில்லை.

முதலில், சரியாக பட்ஜெட் தயாரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்! இரண்டாவது, பொது நன்மைக்குரிய திட்டங்களைப் போட்டு ஒரு வருஷம் நடத்திக் காட்டுங்கள்! பிற்பாடு, உங்கள் புது வரிகளைப் போடுங்கள்! பட்ட காலிலேயே படச்செய்யாமல் தாங்கக்கூடிய புள்ளிகளுக்குப் போடுங்கள்!—என்று தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

அட்டைப்பட விளக்கம்

ஆந்திர கேசரி பிரகாசம்

ஜனநாயக ஆட்சி நடைபெறும் தேசங்களில் கனம் பிரதம மந்திரிக்கு அடுத்தபடியான கௌரவம் எதிர்க்கட்சித் தலைவருக்குக் கொடுப்பது சம்பிரதாயம். எதிர்க்கட்சித் தலைவருக்குப் பிரதம மந்திரிக்குக் கொடுப்பது போலச் சம்பளம் கொடுப்பதும் உண்டு. பிரதம மந்திரி நாட்டுக்கு எவ்வளவு முக்கியமான பொறுப்பு வாய்ந்த தொண்டைச் செய்கிறாரோ அவ்வளவு முக்கியமான பொறுப்பு வாய்ந்த தொண்டை எதிர்க்கட்சித் தலைவரும் செய்கிறார். இருவரும் தங்கள் முழு நேரத்தையும் அரசியல் தொண்டுக்கே செலவு செய்தாக வேண்டும். பிரதமர் உத்தியோகம் பார்ப்பது எவ்வளவு தேசத்துக்கு முக்கியமோ அவ்விதமே அரசாங்கத் திட்டங்களில் உள்ள குறைகளை எடுத்துக் காட்டித் திருத்த முயல்வதும் முக்கியமாகும். பிரதம மந்திரியைத் தலைவராகக் கொண்ட கட்சியார் தோல்வியடைந்தால், அதாவது மெஜாரிட்டி பலம் இழந்தால் உடனே எதிர்க்கட்சித் தலைவரைப் பிரதமராகும்படி அழைப்பார்கள்.

இந்த ஜனநாயக சம்பிரதாயத்தை யொட்டியே சென்ற இதழ் அட்டையில் பிரதமர் ஸ்ரீ பி. என். குமாரஸ்வாமி ராஜா அவர்கள் படத்தை வெளியிட்ட பிறகு இந்த இதழில் ஆந்திர கேசரி டி. பிரகாசம் அவர்களின் படத்தை வெளியிட்டிருக்கிறோம்.

வெளிப்படையான சட்ட விதி முறைகளை யொட்டிப் பார்க்கும்போது ஸ்ரீ டி. பிரகாசம் எதிர்க் கட்சித் தலைவர் அல்ல; அவருக்குக் கட்சி ஒன்று தனியாகக் கிடையாது. கனம் குமாரஸ்வாமி ராஜா எந்தக் காங்கிரஸ் கட்சியின் தலைவரோ அதே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்தான் ஸ்ரீ டி. பிரகாசம். அந்தக் கட்சியின் தலைவராகவும் பிரதமராகவும் ஒரு வருஷம் அவர் பதவி வகித்திருக்கிறார். பிரதம மந்திரி பதவி போன பிறகு ஸ்ரீ டி. பிரகாசம் காங்கிரஸ் கட்சியை விட்டு விலகி விடவும் இல்லை.

ஆயினும் காரியாம்சத்தில், சென்னை மாகாணத்தின் ஆட்சிப் பொறுப்பைத் தற்போது வகிக்கும் மந்திரி சபைக்கு ஸ்ரீ டி. பிரகாசம் எதிர்க் கட்சித் தலைவரைப் போல் விளங்குகிறார் என்பது வெளிப்படை.

விசேஷத் திறமையாளர் சிலரைக் குறித்துப் பேசும்போது "இவர் அதிகார பீடத்தில் உள்ள போதைக் காட்டிலும் வெளியில் இருக்கும்போது அதிக சக்தியுடன் விளங்குவார்!" என்று சொல்லுவதுண்டு. அந்தச் சொல்லுக்கு இன்று ஆந்திர கேசரி சிறந்த உதாரண புருஷராக விளங்குகிறார்.

பிரதம மந்திரி ஸ்தானத்திலிருந்து ஸ்ரீ டி. பிரகாசம் விலகியது முதல் மிகச் சக்தி வாய்ந்தவராகி யிருக்கிறார். சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே ஒரு எதிர்ப்புக் கட்சியை உண்டுபண்ணியிருக்கிறார். ஏதேனும் ஒரு வியாஜத்தைக் கொண்டு இப்போதுள்ள மந்திரி சபையை எதிர்ப்பவர்களை யெல்லாம் தம்மைச் சுற்றிலும் திரட்டிக் கொள்கிறார். வருஷா வருஷம் கட்சித் தலைமைக்குப் போட்டி உண்டு பண்ணுகிறார். சென்னை சர்க்காரிலுள்ள ஆந்திர மந்திரிகள் சிலருக்கு ஆந்திர கேசரி பிரகாசம் என்றால் 'சிம்ம சொப்பனம்' என்ற நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லலாம்.

ஸ்ரீ டி. பிரகாசம் ஒரு கால் நூற்றாண்டு தியாக வாழ்க்கை நடத்தி நாட்டுக்கு மிக உயர்ந்த தொண்டுகள் புரிந்தவர். அதிகாரவர்க்கத்துடன் பல தீரப் போராட்டங்களை நடத்தியவர். உப்பு சத்தியாக்கிரஹ இயக்கத்தின் போது சென்னைக் கடற்கரையில் அவர் நிகழ்த்திய சாகஸச் செயல்கள் சரித்திரத்தில் பொறிக்க வேண்டியவை.

ஆந்திர கேசரியின் எண்பதாவது பிறந்த நாளைச் சென்ற வாரத்தில் ஆந்திர மகா ஜனங்கள் கொண்டாடினார்கள். வயது எண்பது ஆகியும் ஸ்ரீ பிரகாசம் மனோவல்லமையும் தேக வலிமையும் குன்றாமலிருக்கிறார்; அவருடைய போர்த்திறமையும் குறையவில்லை என்பதைப் பிரத்யட்சமாகக் காண்கிறோம். அத்தகைய பழம் பெரும் தேசபக்தருடைய சக்தியெல்லாம் இப்போது நாட்டுக்கு உபயோகமான முறையில் பயன்படவில்லையே யென்பதை நினைக்க வருத்தமா யிருக்கிறது. காங்கிரஸுக்குள் கட்சி கட்டுவதிலும் புகார் எழுப்புவதிலும் புகார்களைச் சுமந்துகொண்டு டில்லிக்குப் போவதிலும் ஆந்திர கேசரியின் சக்தி விரயமாகி வருகிறது.



ராயபுரம் பரதவர் மகாஜன சங்கத்தின் ஆதரவில் நாளது ஆகஸ்டுமீ 21உ முதியோர் கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. முதியோர் கல்விப் பிரசாரத்துக்கே தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கும் ஸ்ரீ வேணுகோபால செட்டியார் இந்த நிலையத்தை நடத்துகிறார்.

காங்கிரஸ் மேலோரின் ஆணையின்படி சென்ற ஒரு மாதமாக ஆந்திரகேசரி பிரகாசமும் கனம் பிரதமர் குமாரசாமி ராஜாவும் ஒரு காரியத்தில் ஒத்துழைத்து வருகிறார்கள். மந்திரிகளின் பேரிலுள்ள புகார்களைப் பற்றிய தஸ்தவேஜுகளை இருவரும் சேர்ந்து பரிசீலனை செய்தார்கள். இருவரும் சேர்ந்து அறிக்கை அனுப்பப் போகிறார்கள்.

இந்த ஆராய்ச்சியினாலும் விசாரணையினாலும் சென்னை மாகாணத்தில் பூகம்பமோ அல்லது வேறு பெரும் விளைவோ ஏற்பட்டு விடுமென்று நாம் கருதவில்லை.

இந்தப் புகார்ப் பரிசீலனையில் காட்டிய ஒத்துழைப்பிலிருந்தும் கூட்டு முயற்சியிலிருந்தும் ஒரு நல்ல விளைவு ஏற்பட வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

இத்தகைய ஒத்துழைப்பையும் சமரசப் பான்மையையும் இந்தச் சென்னை மாகாணத்துக்குத் தொண்டு செய்வதிலும் காட்டினால் எவ்வளவு நலமாயிருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா? சென்னை மாகாணம் அவ்வளவு அதிர்ஷ்டம் செய்திருக்குமா என்று பார்க்கலாம்.

ஸ்ரீ டி. பிரகாசத்தின் தேசபக்தி, தியாகம், தொண்டு இவையெல்லாம் ஒரு புறமிருக்க, ஆந்திர மாகாணத்தைத் தனி மாகாணமாக்கும் முயற்சியில் அவர் முன்னணியில் நிற்கிறார். இதனால், மறைந்து போன பழைய விஜயநகர சாம்ராஜ்யத்தை நினைத்து அதை மறுபடியும் உயிர்ப்பிக்க வேண்டும் என்று கனவு காண்கிற ஆந்திரர்களுக்கு ஸ்ரீ டி. பிரகாசத்தின்மீது தனிப் பெரும் அபிமானம் ஏற்படக் காரணம் இருக்கிறது. இன்றைய தினம் ஆந்திர மாகாணத்தில் ஸ்ரீ டி. பிரகாசத்துக்கு உள்ள செல்வாக்கு வேறு யாருக்கும் இல்லை என்று சொல்வது மிகையாகாது.

• • •

ஆந்திர கேசரி ஸ்ரீ டி. பிரகாசத்தின் படத்துடன் மறைந்துபோன விஜயநகர சாம்ராஜ்ய சின்னங்களையும் சேர்த்து நமது அட்டைப் படத்தில் வெளியிட்டிருக்கிறோம்.



அத்தியாயம் 38

மணி அடித்தது!

இந்த அத்தியாயத்தை எழுதுவதற்கு மிகவும் தயக்கமாயிருக்கிறது. மனம் வேதனைப்படுகிறது. கையும் கூசுகிறது. எனினும், எழுதியேயாக வேண்டும். கதையை முடிக்க வேண்டிய கடமை ஒன்று இருக்கிறதல்லவா?

பத்திரிகையில் தொடர்ச்சியாகக் கதை எழுதுவதில் இந்த ஒரு கஷ்டம் இருக்கிறது. ஆசிரியனோடு சேர்ந்து வாசகர்களும் கதையைக் கற்பனை செய்துகொண்டு வருகிறார்கள். மேலே இப்படித்தான் நடக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். கதையின் முடிவு இப்படித்தான் இருக்க வேண்டும் என்று முடிவு கட்டுகிறார்கள். கதாநாயகி இறந்துவிடக் கூடாதென்று சிலரும் கதாநாயகி இறந்துதான் ஆகவேண்டும் என்று சிலரும் வற்புறுத்துகிறார்கள். கதாநாயகனுக்குத் தண்டனை கிடைக்க வேண்டுமென்று சிலரும் அவனுக்குப் பட்டாபிஷேகம் நடக்க வேண்டும் என்று சிலரும் எதிர்பார்க்கிறார்கள். இப்படியே ஒவ்வொரு பாத்திரத்தின் முடிவும் இப்படி இருக்க வேண்டும் என்று அபிப்பிராயம் சொல்கிறார்கள்.

ஆனால் கதை ஆசிரியன்,—முக்கியமாக, தொடர் கதை எழுதும் ஆசிரியன்,—பெரிய தர்மசங்கடத்தில் அகப்பட்டுக் கொள்கிறான். கதாபாத்திரங்களுக்கு உண்மையாக நிகழ்ந்த முடிவை உண்மையுடன் கூறுவதா, அல்லது வாசகர்களின் விருப்பத்தையொட்டி மாற்றிச் சொல்லுவதா என்ற கடினமான பிரச்னை ஏற்படுகிறது. எவ்வளவு கசப்பான உண்மையாயிருந்தாலும், அது எழுதுவதற்கும் படிப்பதற்கும் எவ்வளவு மன வருத்தம் தருவதாயிருந்தாலும், நடந்தது நடந்தபடி சொல்லி விடுவதே கதை ஆசிரியனுடைய தர்மமும் கடமையும் ஆகுமல்லவா?

இங்கே இவ்வளவு நீண்ட பீடிகை போடுவதற்குக் காரணம் என்னவென்

பதை வாசகர்கள் ஊகித்தறிந்திருப் பார்கள். மேலே வருவதை எழுது வதற்குத் தயக்கந்தான் காரணம். ஆனால் எத்தனை நேரந்தான் தயங்க வும் தள்ளிப் போடவும் முடியும்?

• • •

தாரிணி சௌந்தர ராகவனைப் பார்த்து "நீங்கள்தான் யோசித்துச் சொல்ல வேண்டும்" என்று கூறிய தும், ராகவன் சிறிது எரிச்சலுடன், "மறுபடியும் 'யோசிக்க வேண்டும், யோசிக்க வேண்டும்' என்றே சொல் லிக்கொண் டிருக்கிறாயே? யோசிப்ப தற்கு என்ன இருக்கிறது?" என்றான்.

"நீங்கள் இப்படித்தான் சொல்லு வீர்கள். ஆயினும் நான் என்னுடைய கடமையைச் செய்தாக வேண்டும். உங்களுடைய தாயாரும் தகப்பனாரும் உற்றார் உறவினரும் என்ன சொல்லு வார்கள் என்று யோசியுங்கள்."

"சுத்தப் பைத்தியக்காரத்தனம்! அவர்களை யெல்லாம் நான் மறந்து எத்தனையோ நாளாயிற்று. என் னுடைய பெற்றோர்கள் தற்சமயம் அவர்களுடைய மூத்த பிள்ளையுடனும் மூத்த மாட்டுப் பெண்ணுடனும் சௌக்கியமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறார்கள். என்னை அவர்கள் கவனிப்பதில்லை; அவர்களை இப்போ தெல்லாம் நானும் நினைப்பதில்லை..."

"இப்போது நினைப்பதில்லை யென் றால் எப்போதும் விட்டுப் போய் விடுமா? இரத்த பாசம் ஒருநாளும் விடாது. அதற்கு என்னுடைய தகப் பனாரைக் காட்டிலும் வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?"

"நல்ல தகப்பனார் உன் தகப்பனார்! பெற்ற பெண்கள் இருவருக்கும் சத்துருவா யிருந்தார்......"

"உங்கள் பெற்றோர்களை நீங்கள் கவனிக்கா விட்டால் போகட்டும். இந்தப் புதுடில்லியில் நீங்கள் உத்தி யோகம் செய்து வாழ்க்கை நடத்த வேண்டுமல்லவா? என்னை நீங்கள் கலியாணம் செய்து கொண்டால் எல் லாரும் என்ன நினைப்பார்கள்?"

"ஒன்றும் நினைக்கமாட்டார்கள். அப்படி ஏதாவது நினைத்தால் என்னைக் கொடுத்துவைத்த அதிர்ஷ்ட சாலி என்று நினைப்பார்கள். தாரிணி! இந்தப் புதுடில்லியில் உன்னைப் போன்ற அழகி ஒருத்தி உண்டா? நாகரிகத்திலும் நடை உடை பாவனை யிலும் உன்னை மிஞ்சக்கூடிய பெண் பிள்ளை எவளேனும் உண்டா? கிளப்புகளுக்கும் பார்ட்டிகளுக்கும் உன்னை என்னுடன் அழைத்துக் கொண்டு போவதைக் காட்டிலும் எனக்குப் பெருமை தரும் விஷயம் உண்டா?......"

தாரிணியை மூடியிருந்த உடைக் குள்ளிருந்து அமுங்கி ஒலித்த சிரிப் பின் சத்தம் வந்தது. அதைக் கேட்ட தும் ஏனோ சௌந்தர ராகவனுக்கு உடல் சிலிர்த்தது; விவரமில்லாத பீதி ஒன்று உண்டாயிற்று.

"தாரிணி! இது என்ன சிரிப்பு! இந்த வேளையில்தான், இந்த சந்தர்ப் பத்தில்தான் சிரிப்பது என்பது கிடை யாதா?" என்றான்.

தாரிணி எழுந்து நின்றாள்.

"சிரித்தது பிசகுதான்; மன்னித் துக் கொள்ளுங்கள். நீங்கள் என்ன தான் சொன்னாலும் இன்னும் ஒரு நாள்,—இருபத்திநாலு மணி நேரம்,— உங்களுக்கு யோசிக்கச் சாவகாசம் கொடுக்கிறேன். நாளைக்கு இதே நேரத்துக்குக் குழந்தையை அழைத்துக் கொண்டு வருகிறேன்" என்றாள்.

"உன்னுடைய பிடிவாத குணம் முன்னைப் போலவேதான் இன்னும் இருக்கிறது. தாரிணி! போனால் போகட்டும். உன் இஷ்டப்படியே நாளைச் சாயங்காலம் வஸந்தியை அழைத்துக் கொண்டு வா! ஆனால் போவதற்கு முன்னால் இந்தப் பயங்கர மான பர்தா உடையை எடுத்துவிட்டு உன் முகத்தையாவது காட்டி விட்டுப் போ! இல்லாவிட்டால் உன்னைப் போக விடமாட்டேன். நானே பலாத் காரமாக உன் முகமூடியை அகற்றி விடுவேன்!" என்றான்.

இந்தக் கடைசி வார்த்தையைச் சொல்லும்போது ராகவனுக்குச் சீதா அடிக்கடி பாடும் வழக்கமான ஒரு பாடல் நினைவுக்கு வந்தது.

"தில்லித்துருக்கர் செய்த வழக்கமடி!—பெண்கள்
திரையிட்டு முகமலர் மறைத்துவைத்தல்"

என்ற பாரதியாரின் கண்ணன் பாட்டு சீதாவுக்குத் தெரியும். டில்லியில் முக மூடி தரித்த பர்தா முஸ்லிம் ஸ்திரீ களைப் பார்க்கும்போதெல்லாம் சீதா அந்தப் பாட்டைப் பாடிக் காட்டு வாள். ராகவனும் அதை ரஸித்துக் கற்பனை உலகத்தில் சஞ்சரிப்பான்.

அந்தப் பாட்டு இப்போது ராகவ னுக்கு நினைவு வந்ததும் அவனுடைய உடம்பு மீண்டும் சிலிர்த்தது.

ராகவனுடைய அந்த வார்த்தை களைக் கேட்ட தாரிணி சிறிது நேரம் நின்ற இடத்திலேயே நின்றாள். அவ ளுடைய மனதுக்குள் ஏதோ போராட் டம் நடந்தது போலும்.

ஒரு நிமிஷம் தயங்கி நின்ற பிறகு, "தங்கள் விருப்பத்தை இப்போதே நிறைவேற்றுகிறேன். என் பேரில் குற்றம் சொல்லவேண்டாம்!" என்று தாரிணி சொல்லிவிட்டு அவளை மூடி யிருந்த பர்தா உடையைக் கழற்றிக் கீழே நழுவி விழச் செய்தாள்.

உல்லாசமாக இயற்கை வனப்பு களைப் பார்த்துக்கொண்டு மலைச் சாரல் வழியாகப் போய்க் கொண் டிருந்த ஒருவனுடைய தலையில் திடீ ரென்று பாராங்கல் விழுந்து, கண் ணிலே கொள்ளிக்கட்டை குத்தி, காலிலே ஆயிரம் தேள்கள் கொட்டி, எதிரே பயங்கரமான பிசாசு ஒன்று தோன்றி அவனுடைய கழுத்தைப் பிடித்து அமுக்கினால் எப்படியிருக் குமோ அப்படியிருந்தது ராகவனுக்கு.

பர்தா உடையைக் கழற்றியதும் எதிரில் தோன்றிய உருவம், சௌந் தர ராகவன் பல முறை பார்த்து இரு தயத்தில் பதித்து வைத்துக் கொண் டிருந்த தாரிணியின் மோகன உருவம் அல்ல; அவன் பார்க்க வேண்டு மென்று ஆவல் கொண்டிருந்த சௌந் தரிய வடிவம் அல்ல; சீதாவுக்கு உடன் பிறந்த சகோதரியின் பூரண சந்திரனை யொத்த முகம் அல்ல.

அவன் பார்த்தது ஒரு கோர ஸ்வ ரூபம். ஒரு கை துண்டிக்கப்பட்ட பெண்ணின் உருவம். ஒரு கண் இருந்த இடத்தில் வெறுங் குழி இருந்த உருவம். முகத்தில் ஒரு நீண்ட பெரிய பிளவு, வலது நெற்றிப் பொட்டிலிருந்து இடது கன்னத்தின் ஓரம் வரையில் ஓடியிருந்த பயங்கர வடிவம். மகா சிற்பி ஒருவன் அமைத் திருந்த தெய்விகச் சிலையை வெறி கொண்ட கஜினி முகம்மது தாக்கி உடைத்த பிறகு அந்தச் சிதைந்து போன சிலை எப்படி இருக்குமோ அப்படித் தோற்றமளித்த பரிதாப உருவம்.

சௌந்தரராகவன் பீதியினாலும் பயங்கரத்தினாலும் பரிதாபத்தினாலும் அருவருப்பினாலும் கதி கலங்கியவ னாய்த் திகைத்து நின்றான்.

சற்று நேரம் திறந்த கண்கள் திறந்தபடி, திறந்த வாய் திறந்தபடி, பார்த்துக் கொண்டே நின்றான். அப் புறம் நிற்க வலிவற்றவனாய்த் தொப் பென்று ஸோபாவில் விழுந்தான்.

அந்த உருவம் வாய் திறந்து பேசி யது. முன் பல் இரண்டு இல்லாதபடி யால் வாயைத் திறந்தபோது அந்த கோர ஸ்வரூபம் மேலும் பயங்கர மாகக் காட்சி தந்தது.

"ஐயா! மன்னிக்கவேண்டும். தங் களுக்கு இந்தத் துன்பத்தை இன்று தரவேண்டாம் என்றுதான் நினைத் தேன். ஆனால் நீங்கள் கேட்கவில்லை. உடையை எடுக்கும்படி பிடிவாதம் பிடித்தீர்கள்!" என்று தாரிணி கூறினாள்.

ஆம், அது தாரிணியின் குரல்தான்; சந்தேகமில்லை. எவ்வளவு சின்னா பின்ன மடைந்திருந்தாலும் அந்த முகமும் தாரிணியின் முகந்தான்!

ஆனாலும் சௌந்தரராகவன் அதை நம்புவது எளிதாக இல்லை. இது வேறு யாராகவாவது இருக்கலாகாதா என்றும் தன்னை இந்தப் பயங்கர ஏமாற்றத்துக்கு உள்ளாக்க யாரோ செய்த சூழ்ச்சியாக இருக்கக் கூடாதா என்றும் எண்ணினான்.

"நான் போய் வருகிறேன். ஒரு நாள் முழுதும் யோசித்துப் பதில் சொல்லுங்கள். ஒரு நாள் என்ன? ஒரு வாரம் வேண்டுமானாலும் யோசித் துச் சொல்லுங்கள். அவசரம் ஒன்றும் இல்லை!" என்றாள் தாரிணி.

சௌந்தர ராகவனுடைய தலைக்கு உட்புறம் நூறு குட்டிப் பிசாசுகள் புகுந்துகொண்டு ஹஹஹா, ஹஹஹா என்று பரிகசித்துச் சிரித்தன.

" போகாதே, தாரிணி! போகாதே! ஏதாவது சொல்லிவிட்டுப் போ! இல்லாவிட்டால் எனக்கு இப்போதே பைத்தியம் பிடித்துவிடும்!" என்று ராகவன் கதறினான்.

தாரிணி உட்கார்ந்தாள். "தயவு செய்து பதறுகிறீர்கள்; விணாக அலட்டிக் கொள்ளாதீர்கள். நான் என்ன சொல்ல வேண்டும்? கேளுங்கள், சொல்கிறேன்!" என்றாள்.

ராகவன் தாரிணியை ஒருதடவை காலோடு தலை உற்றுப் பார்த்துவிட்டு மேஜைமீது தன் முகத்தைச் சேர்த்து வைத்துக் கொண்டு விம்மினான்.

"ஐயா! தாங்கள் எத்தனையோ தத்துவங்கள் படித்தவர். படித்த தத்துவங்களை யெல்லாம் இப்போது தயவுசெய்து ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். விதியை வெல்ல யாரால் முடியும்? நடந்து போனதை நினைத்துத் துக்கப்பட்டு ஆவ தென்ன?" என்று சொன்னாள் தாரிணி.

சௌந்தரராகவன் தலை நிமிர்ந்தான். "தாரிணி! அந்த விதி என்னை எதற்காக உயிரோடு வைத்திருக்கிறது? இந்தக் கோரக் காட்சியைக் காண்பதற்காகத்தானா? கல்கத்தாவில் சுரம் அடித்துக் கிடந்தபோதே நான் இறந்து போயிருக்கக்கூடாதா?" என்று கதறினான்.

"விதியை வெல்லும் சக்தியை நமக்குக் கடவுள் கொடுக்கவில்லை. ஆனால் எப்பேர்ப்பட்ட கஷ்டத்தையும் துக்கத்தையும் வெல்லும் சக்தியைக் கொடுத்திருக்கிறார். இன்றைக்குக் காந்தி மகான் இறந்ததை நினைந்து இந்தத் தேசமெல்லாம் வருத்தப்படுகிறது. இன்னும் ஒரு மாதம் போனால் எல்லாரும் மகாத்மாவை மறந்துவிடப் போகிறார்கள். அவரவர்களின் காரியத்தைப் பார்க்கப் போகிறார்கள். இந்த உலகத்தில் எந்தவிதமான சுகமும் இன்பமும் சாசுவதமல்ல; அது போலவே கஷ்டமும் துன்பமும் சாசுவதம் அல்ல. துன்பத்தை மறந்துவிடும் சக்தியைக் கடவுள் நமக்கு அளித்திருக்கிறார்" என்றாள் தாரிணி.

"கடவுள் என்று சொல்லாதே! கடவுளே இல்லை என்று நான் சத்தியம் செய்வேன். உன்னை இந்தக் கோலத்தில் பார்த்த பிறகு கடவுளிடம் எப்படி எனக்கு நம்பிக்கை உண்டாகும்?" என்றான் ராகவன்.

"நான் இந்தக் கோலமான பிறகுதான் கடவுளிடம் எனக்குப் பரிபூரண நம்பிக்கை உண்டாகியிருக்கிறது. ஐயா! என்னை வளர்த்த தாயையும் உங்கள் குழந்தை வஸந்தியையும் நான் காப்பாற்றினேன். நல்ல சமயத்தில் கடவுள் என்னை அவர்கள் இருந்த இடத்தில் கொண்டுபோய் விட்டார். அந்தப் பிரயத்தனத்திலேதான் என்னுடைய ஒரு கை போயிற்று; ஒரு கண் போயிற்று; முகத்தில் இந்தக் கத்திக் காயம் ஏற்பட்டது. ஆனால் என்னை வளர்த்த தாயை நான் காப்பாற்ற முடிந்தது; என் உயிருக்குயிரான சகோதரியின் குழந்தையை நான் காப்பாற்ற முடிந்தது. இது கடவுளின் கருணை அல்லவா?" என்றாள் தாரிணி.

பிறகு, ரஜனிபூர் ராஜ்யத்தில் ஒரு முஸ்லிம் மசூதியில் பல ஸ்திரீகள் அடைக்கப் பட்டிருந்ததையும் அந்த மசூதியைக் கொளுத்திவிட்டு அதில் இருந்தவர்களை யெல்லாம் கொன்றுவிடச் சில வெறியர்கள் முயன்றதையும் தான் தன்னந்தனியாக அவர்களை எதிர்த்து நின்றதையும் அதற்குள் ரஜனிபூர் மகாராணி படைகளுடன் வந்து தன்னையும் மசூதியில் இருந்த ஸ்திரீகள் எல்லாரையும் காப்பாற்றியதையும் பற்றித் தாரிணி கூறினாள்.

சௌந்தர ராகவன் ஏற்கெனவே அந்த விவரங்களை யெல்லாம் பத்திரிகையில் படித்திருந்தான். அப்போது அந்த முஸ்லிம் மசூதியை இந்த ரஜனிபூர் மகாராணி எதற்காகக் காப்பாற்றினாள் என்று ஆத்திரப்பட்டான். இப்போது தாரிணி கூறிய செய்தி அவனுடைய உள்ளத்தில் சொல்லமுடியாத குழப்பத்தை உண்டு பண்ணியது. கடவுளே! அந்த மசூதியில் இருந்தல்லவா தன்னுடைய குழந்தை காப்பாற்றப் பட்டிருக்கிறாள்? ரஜனிபூர் மகாராணி நல்ல சமயத்தில் வந்து காப்பாற்றியிரா விட்டால்? அரை மணி நேரம் கழித்துச் சென்றிருந்தால்? — ஒருவேளை இது கடவுளின் கருணைதானோ?......

அந்தச் சமயத்தில் 'கண கண கண' வென்று டெலிபோன் மணி அடித்தது.

கடவுளின் கருணை

மனிதர்களைச் சிற்றறிவினர் என்றும் கடவுளைப் பேரறிவாளன் என்றும் நம் நாட்டுப் பெரியோர்கள் வரையறுத்துக் கூறியிருக்கிறார்கள்.

கடவுளுடைய செயல்களையும் அச் செயல்களின் காரணங்களையும் நாம் அறிய முடிவதில்லை. அறிந்தால் நாம் மனிதத்தன்மையைக் கடந்து சென்று தெய்வத்தன்மைக்கே உரியவர்களாகி விடுவோம் அல்லவா?

உலகத்தில் பிறப்பவர்கள் பலர் பிறந்ததிலிருந்து இறக்கும் வரையில் துன்பப்பட்டே மடிந்து போகிறார்கள். ஒரு சுகத்தையும் காணாமல் கண்ணை மூடி விடுகிறார்கள். அக்கிரமக்காரர்களின் அநியாயக் கொடுமைகளுக்கு ஆளாகிச் சாகிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது நமக்கு நெஞ்சு கொதிக்கிறது. கடவுள் ஒருவர் இருந்தால் அவர் இத்தகைய கொடுமைகளைப் பார்த்துக்கொண்டு ஏன் சும்மா இருக்கிறார் என்று எண்ணுகிறோம். கடவுள் ஒருவர் இருப்பினும் அவரைத் 'தீனபந்து' என்று சொல்வது பெரும் பொய் என்று முடிவு செய்கிறோம்.

இதே உலகத்தில் பிறக்கும் வேறு சிலர் என்றைக்கும் சுக போகிகளாய் இருந்துவிட்டுப் போவதைப் பார்க்கும் போது, "ஆஹா! கடவுள் ஒருவர் இருந்தால் அவர் எத்தகைய பாரபட்சமுடையவராயிருக்க வேண்டும்?" என்று வியப்புறுகிறோம்.

இதெல்லாம் நம்முடைய சிற்றறிவைக் கொண்டு பேரறிவாளனாகிய இறைவனுடைய செயல்களைக் கணிக்கப் பார்ப்பதினால் ஏற்படும் விபரீதங்கள் என்று பெரியோர்கள் நமக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

அன்னை ஒருத்திக்கு நாலு குழந்தைகள் இருக்கின்றன. மூன்று குழந்தைகள் சுகமாயிருக்கின்றன. ஒரு குழந்தை மட்டும் நோய்ப்பட்டு மெலிந்து போயிருக்கிறது. அதன் ஜீரண சக்தி குன்றியிருக்கிறது. நடப்பதற்கும் முடியாமல் அக் குழந்தை படுத்த படுக்கையாயிருக்கிறது.

தாயார் மற்ற மூன்று குழந்தைகளுக்கும் நல்ல வளமான உணவு கொடுக்கிறாள். சோறும் கறி வகைகளும் பட்சணங்களும் பாலும் பழமும் அக் குழந்தைகளுக்கு ஊட்டுகிறாள்.

மெலிந்த நோயாளிக் குழந்தைக்கு அத்தகைய நல்ல உணவு கொடுக்காமல் வெறும் கஞ்சி கொடுக்கிறாள்.

நோயாளிக் குழந்தை என்ன நினைக்கிறது? "பார்! நம்முடைய தாயாருக்குத்தான் எத்தனை பட்ச பாதம்? நான் மெலிந்தவன்; எனக்கு நல்ல போஷாக்கு வேண்டும்; ஆயினும் எனக்கு வெறும் கஞ்சியைக் கொடுக்கிறாள். என்னுடைய அண்ணன்மார் நல்ல தடியர்களாயிருக்கிறார்கள். அவர்களுக்கு என் அன்னை நல்ல புஷ்டியான உணவைக் கொடுக்கிறாள்! இது என்ன அநியாயம்? இது என்ன பட்சபாதம்!" என்று எண்ணமிடுகிறது.

குழந்தை சிற்றறிவு படைத்தது. அதனால் அதற்குத் தன் தாயின் செயல் அர்த்தமாகவில்லை. தன்பேரில் உள்ள அன்பினாலேதான் அன்னை அவ்விதம் தனக்குப் பத்தியமாகக் கஞ்சி கொடுக்கிறாள் என்பதை அக் குழந்தை அறிந்துகொள்ள முடியவில்லை. உண்மையில் தன் தாயார் மற்ற மூன்று குழந்தைகளையும் விடத் தன்னையே நேசிக்கிறாள், தன்னிடம் அவள் உயிரையே வைத்திருக்கிறாள், தன்னைப் பற்றியே ஓயாக் கவலை கொண்டிருக்கிறாள் என்பதையெல்லாம் அக் குழந்தை அறியவில்லை.

கடவுளைப்பற்றிப் புகார் கூறும் மாந்தர்கள் அந்தக் குழந்தையின் நிலையில் உள்ளவர்களே! கடவுளின் கருணையையோ, அக் கருணையை அடிப்படையாகக் கொண்ட அவருடைய செயல்களையோ அறிந்து கொள்ளும் சக்தி நம்முடைய சிற்றறிவுக்குக் கிடையாது. ஆகையினாலேயே குறைப்படுகிறோம்; குற்றம் கூறுகிறோம். அது காரணமாகவே நம் துன்பத்தையும் அதிகப்படுத்திக் கொள்கிறோம்.

நோய்ப்பட்ட குழந்தைக்குத் தன் அன்னையிடம் பூரண நம்பிக்கையிருக்

தால், அது மேற் சொன்னபடி யெல்லாம் எண்ணி மனம் வெம்ப வேண்டியதில்லை. குழந்தையின் உடல் நோய்ப்பட்டிருந்தாலும் அதன் மனமாவது நிம்மதியா யிருக்கும்.

அதுபோலவே கடவுளுடைய செயல்களின் காரண காரியங்களை அறிந்து கொள்ளுவதற்கு வேண்டிய அறிவு நமக்கில்லா விட்டால் பாதகம் இல்லை. கடவுளிடம் நம்பிக்கை யிருந்தால் போதும். அந்த நம்பிக்கையானது வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் எல்லா விதமான துன்பங்களையும் சகித்துக் கொள்ளும் ஆற்றலைக் கொடுக்கிறது. எவ்வளவு கஷ்டங்கள் சூழ்ந்திருக்கும் போதும் மன நிம்மதியுடன் வாழ்வதற்கு வேண்டிய தைரியத்தை அளிக்கிறது. மன நிம்மதியைக் காட்டிலும் ஒரு மனிதன் இந்த உலகத்தில் வேண்டிப் பெறக்கூடிய பேறு வேறு என்ன இருக்கிறது?......

இந்த வேதாந்த விசாரணைகளையெல்லாம் இவ்விடத்தில் நுழைத்திருப்பதற்கு அவ்வளவு முக்கியமான காரணம் ஒன்றுமில்லைதான். இனிச் சொல்ல வேண்டியிருப்பதைச் சொல்லுவதில் நமக்கு ஏற்படும் தயக்கந்தான் உண்மைக் காரணமாகும். வாசகர்கள் தயவுசெய்து மன்னிக்கவும்.

• • •

தாரிணி சொன்னதை யெல்லாம் கேட்டு அளவில்லாத மனக் குழப்பத்துக்கு உள்ளாகி யிருந்த சௌந்தர ராகவனுக்கு அந்த டெலிபோன் அடித்த மணி ஒரு வரப் பிரசாதமாகத் தோன்றியது. பேச்சை மாற்றவும் எண்ணத்தை மாற்றவும் அது ஒரு சாதனம் ஆகுமல்லவா?

"இந்த வேளையில் யார் டெலிபோனில் கூப்பிடுகிறார்கள்?" என்று எரிச்சலாகச் சொல்லிக் கொண்டே சௌந்தர ராகவன், டெலிபோனை எடுத்துக் காதில் வைத்துக் கொண்டு, "யார் அது!" என்று கேட்டான்.

டெலிபோனில் அவனுக்குக் கிடைத்த செய்தி மிக அதிசயமான செய்தியா யிருக்கவேண்டும். அவனுடைய முகத் தோற்றத்தில் அவ்வளவு மாறுதல் காணப்பட்டது.

டெலிபோனை வைத்து விட்டுத் தாரிணியைத் திரும்பிப் பார்த்து, "கேட்டாயா, தாரிணி! சீதா ஆற்றில் மூழ்கி இறந்துவிட்டாள் என்பது பெரும் பொய். சூரியா அந்த மாதிரி என்னிடம் எதற்காகப் புளுகினான் என்று தெரியவில்லை. உனக்குத் தெரியுமே, மாஜி திவானுடைய மகள் பாமாவை! அவளுடைய வீட்டில் இப்போது சீதா இருக்கிறாளாம். அங்கே சூரியாவும் இருக்கிறானாம். பாமா என்னை உடனே புறப்பட்டு வரச் சொல்லுகிறாள்! நீயும் வரு......?" என்று சொன்னவன், சொல்ல வந்த வார்த்தையைப் பூர்த்தி செய்யாமல் சட்டென்று நடுவில் நிறுத்தினான்.

அவனுடைய குரலில் தொனித்த குதூகலத்தைத் தாரிணி நன்றாக அர்த்தம் செய்து கொண்டாள். சீதா உயிரோடிருக்கிறாள் என்பதனால் மட்டும் ஏற்பட்ட குதூகலம் அல்ல அது. ஒரு கையும் ஒரு கண்ணும் இழந்த இந்த கோரஸ்வரூபத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியம் இனி அவனுக்கு இல்லையல்லவா? தாரிணி கேட்ட கலியாண சம்பந்தமான கேள்விக்குப் பதில் சொல்லவேண்டிய அவசியம் இனிமேல் இல்லையல்லவா?

"ஆமாம், நானும் வருகிறேன்!" என்றாள் தாரிணி.

அவளைத் தன்னுடன் அழைத்துப் போக ராகவனுக்கு அவ்வளவு விருப்பமில்லை யென்பது தாரிணிக்குத் தெரிந்துதானிருந்தது. ஆயினும் சீதா உயிரோடிருக்கும் செய்தியை அறிந்த பிறகு அவளை உடனே போய்ப் பார்க்காமல் எப்படி இருக்க முடியும்?

ராகவன் விரைந்து சென்று காரை எடுத்தான். தாரிணி பின் ஸீட்டில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். வண்டி போய்க் கொண்டிருந்தபோது ராகவன், டெலிபோன் பேச்சில் தான் அறிந்த சில விவரங்களைக் கூறினான்:—"சீதாவும் அவள் தகப்பனும் இத்தனை நாளும் பானிபத்தில் இருந்தார்களாம். இன்றைக்குக் காந்திஜியின் கடைசி ஊர்வலத்துக்காகச் சீதாவைச் சூரியா அழைத்து வந்தானாம். கூட்டத்தில் இருவரும் பிரிந்து போய்விட்டார்களாம். கூட்டம் கலையும் சமயத்தில் சூரியா பாமாவைத் தற்செயலாகச் சந்தித்து சீதாவைப் பிரிந்தது பற்றிச் சொன்னானாம். போலீஸுக்கு டெலிபோன் பண்ணித்

தேடச் செய்யலாம் என்று இருவரும் பாமாவின் வீட்டுக்கு வந்தார்களாம். அங்கே அந்த வீட்டு வாசலிலேயே சீதா பிரக்ஞையற்றுக் கிடந்தாளாம். உள்ளே எடுத்துப் போய்ச் சிகிச்சை செய்து வருகிறார்களாம். டாக்டரும் வந்திருக்கிறாராம். இந்த சூரியா எதற்காக என்னிடம் அவ்வளவு பெரிய பொய்யைச் சொன்னான் என்று தெரியவில்லை. சீதா ஆற்றில் முழுகி இறந்து விட்டாள் என்று சொன்னானே? எவ்வளவு பெரிய அயோக்யன் அவன்?......"

தாரிணி, அப்போது, "வீணாக ஏன் வைகிறீர்கள்? அவரைக் கேட்டால் அல்லவா உண்மை தெரியும்? ஒரு வேளை உங்களைச் சந்தித்தபோது சீதா உயிரோடிருப்பது அவருக்குத் தெரியாமலிருக்கலாம்!" என்றாள்.

"இருந்தாலும் இருக்கலாம். ஆனாலும் என்ன அதிசயம் பார், தாரிணி! சீதா இன்றைக்கு அகப்பட்டது ஒரு அற்புதம் இல்லையா? கடவுளுடைய கருணை என்றுதான் சொல்ல வேண்டும்!" என்றான் ராகவன்.

வண்டி பாமா வீட்டு வாசலில் போய் நின்றது. வண்டிச் சத்தம் கேட்டதும் பாமாவும் சூரியாவும் தயாராக வாசற்பக்கம் வந்தார்கள். வண்டியிலிருந்து இறங்கிய ராகவனைப் பாமா கையைப் பிடித்து "சீக்கிரம் வாருங்கள்!" என்று அழைத்துக் கொண்டு உள்ளே போனாள். போகும் போதே ராகவன், "சூரியா! நன்றாக என்னை ஏமாற்றினாய். போனால் போகட்டும் வண்டியில் தாரிணி இருக்கிறாள். அவளைக் கவனித்துக்கொள்!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே போனான். தாரிணியின் கோர ஸ்வரூபத்தைப் பார்த்ததும் சூரியாவின் மனப்போக்கு எப்படியிருக்கும் என்று செளந்தர ராகவனுடைய மனம் அச்சமயம் எண்ணமிட்டது.

* * *

பரபரப்புடன் மோட்டார் வண்டியை அணுகி வந்த சூரியாவைப் பார்த்துத் தாரிணி, "என் அருகில் நெருங்க வேண்டாம், சூரியா! நான் அசுத்தமானவள்!" என்றாள்.


"அதை நான் ஒருநாளும் நம்ப மாட்டேன், தாரிணி! எது எப்படியிருந்தாலும் உன்னைப்போல் புனிதமான பொருள் இந்த உலகில் வேறொன்று இருக்க முடியும் என்று ஒப்புக்கொள்ள மாட்டேன்!" என்று சொன்னான் சூரியா.

"அதைப்பற்றி அப்புறம் பேசலாம். சீதாவுக்கு உடம்பு எப்படியிருக்கிறது?" என்று தாரிணி கேட்டாள்.

"பிழைக்க மாட்டாள் என்று டாக்டர் சொல்லுகிறார். இப்போதுதான் கொஞ்சம் பிரக்ஞை வந்திருக்கிறது. பிரக்ஞை வந்ததும் உன் பெயரையும் வஸந்தியின் பெயரையும் சொன்னாள்" என்றான் சூரியா.

"ஐயோ! அப்படியானால் உடனே போய்க் குழந்தையை அழைத்து வரவேண்டும். நம்முடைய பழைய வீட்டில் இருக்கிறாள்! நீங்கள் என்னுடன் வருவீர்களா?" என்றாள் தாரிணி.

"அவசியம் வருகிறேன். பாவம்! ராகவன சீதாவின் அந்திய காலத்திலாவது அவளுடன் சிறிது நேரம் தனியாக இருந்து அவளுடைய மனம் குளிரச் செய்யட்டும்" என்றான் சூரியா.



ஒருவர்:—நம்மாழ்வார் தெருவுக்கு வழி கேட்டீர்களே? அதோ வருகிறாரே, அவரை வேணுமானால் கேட்டுப் பாருங்கள். ஒரு வேளை அவருக்குத் தெரிந்திருக்கலாம்!

மற்றவர்:—என்ன ஸார்! அவரைக் கேட்டால் பரிகாசம் செய்கிறேனென்று நினைத்துக்கொள்ள மாட்டாரா?



பொது மக்களின் தேவை அதிகரிப்பை சமாளிக்க
ஒரு புதிய 'ஆஸ்ப்ரோ' பாக்கிங்
இந்தியா முழுவதிலும் 'ஆஸ்ப்ரோ' வலிகளையும் ஜுரத்தையும் சீக்கிரமாகவும் ஊர்ஜிதமாகவும் குணப்படுத்தும் மருந்தென பிரசித்திபெற்று வருகிறது. பொதுமக்களின் தேவை ஏராளமாக அதிகரித்து விட்டபடியால் அதை சமாளிக்கவேண்டி, 'ஆஸ்ப்ரோ' 1½ அணா சைஸ்களை இனி உறைகளில் வைக்காமல் தனித்தனி 'ஸீல்டைட்' துண்டுகளாகவே சப்ளைசெய்து விற்கப்படும். சுகாதார முறைப்படியும், வில்லைகளில் தூசியோ, ஈரமோ படாதபடியும் பாக்கிங்செய்யப்படும். இத்துண்டுகளின் பேரில் வர்ண எழுத்துக்கள் பொறிக்கப்படும். இது மிகவும் சௌகரியமான பாக்கிங். எல்லாவிடங்களுக்கும் எடுத்துச்செல்லலாம். எங்கும் உபயோகிக்கலாம். 'ஆஸ்ப்ரோ'வின் வலி நிவாரணசக்தி மாறவேயில்லை என்பதை மறந்து விடாதீர்கள். பாக்கிங் மட்டுமே மாறுதலடைந்துள்ளது.
புதுவகை 3 வில்லைகளின் காட்சிப்பெட்டி
உங்கள் வியாபாரியிடம் இப்புதிய காட்சிப் பெட்டியை கவனித்துப்பாருங்கள். உண்மையான 'ஆஸ்ப்ரோ'வையே வாங்குகிறீர்களென்பதை உறுதிப்படுத்தும். இன்னும் கொஞ்சகாலத்திற்கு 'ஆஸ்ப்ரோ' கீழ்க்குறித்தபழைய உறைகளில் கிடைத்துக் கொண்டிருக்கும்.
3 வில்லைகள் 1½ அணா
எடுத்துச்செல்லவும் உபயோகிக்கவும் — சௌகரியமானது
அதே வலி நிவாரணம்
அதே துரிதமான குணம்
அதே வில்லை எண்ணிக்கை
அதே சுகாதாரமுள்ள ஸ்ட்ரிப்
ஆனால் தனி உறைமட்டுமில்லை
ASPRO
FOR PAINS AND COLDS
ஒவ்வொரு 'ஆஸ்ப்ரோ' வில்லையின் பேரிலும் 'ASPRO' என்று தெளிவாக முத்திரையிடப்பட்டிருக்கும்
டோஸ்: 1 முதல் 3 வில்லைகள்
30 வில்லைகள் 15 அணா
94 TAM

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ரா. கி.

16. பஞ்சாப் படுகொலை

ஒவ்வொரு வருஷமும் ஏப்ரல் மீ 6உ முதல் 13உ வரையில் தேசிய வாரம் என்பதாக இந்தியா தேசமெங்கும் கொண்டாடுகிறோம். இதற்குக் காரணம் 1919-ம் வருஷத்தில் ஏப்ரல் 6உ முதல் 13உ வரையில் இந்த நாட்டில் நடந்த மிக முக்கியமான சம்பவங்கள்தான்.

அந்த வாரத்தில் காந்தி மகாத்மா இந்தியா சுதந்திரம் அடைவதற்கு ஒரு புதிய வழியைக் காட்டினார். இந்திய மக்கள் நீண்ட கால உறக்கத்திலிருந்து விழித்து எழுந்தனர். ஆத்ம சக்தியாகிய ஆயுதத்தின் பெருமையை உணர்ந்தனர்.

அதே வாரத்திலேதான் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் அசுரத்தன்மை அதன் உச்ச நிலைமையை அடைந்தது. ஜாலியன்வாலாபாக் படுகொலையும் மற்றும் பஞ்சாப்பில் ஆரம்பமான இராணுவச் சட்டக் கொடுமைகளும் பிரிட்டிஷ் அதிகாரவர்க்க ஆட்சிக்கு என்றும் மாறாத அபகீர்த்தியை உண்டு பண்ணின.

அந்தக் கொடுமைகளிலிருந்தே இந்தியாவின் விடுதலை இயக்கம் முன்னைப் போதுமில்லாத பலம்பெற்று வளர்ந்தது. அதற்குப் பிறகு பல வருஷ காலம் தேசபக்தர்கள் பதினாயிரக் கணக்கான பொதுக் கூட்டங்களில் "பஞ்சாப் படுகொலை"யைப் பற்றி ஆவேசமாகப் பேசினார்கள். மக்கள் கொதித்து எழுந்து "பிரிட்டிஷ் ஆட்சியை ஒழித்தே தீர்வோம்" என்று உறுதி கொண்டார்கள்.

காந்தி மகாத்மா அடுத்த ஆண்டில் தொடங்கிய ஒத்துழையாமை என்னும் மாபெரும் இயக்கம் பஞ்சாப் கொடுமைக்குப் பரிகாரம் கோருவதை முக்கிய காரணமாகக் கொண்டு எழுந்தது. அந்த இயக்கம் நாடெங்கும் பரவி நாளுக்கு நாள் வலுப்பெற்று வளர்ந்து 1921-ம் வருஷக் கடைசியில் வைஸராய் லார்ட் ரெடிங், "நான் செய்வதறியாமல் திகைக்கிறேன்; திணறுகிறேன்" என்று பகிரங்கமாக ஒப்புக் கொள்ளும்படி செய்தது.

இவ்வளவு முக்கியமான விளைவுகளுக்கெல்லாம் மூல காரணமாயிருந்த பஞ்சாப் நிகழ்ச்சிகளைப் பற்றி இந்த அத்தியாயத்தில் தெரிந்து கொள்வோம்.

* * *

பாஞ்சால தேசம் சீக்கியர்களுடைய தாயகம். பொதுவாக, வீரத்துக்குப் பெயர் போனது. 1914 முதல் 1918 வரையில் நடந்த முதலாவது உலக மகா யுத்தத்தில் பஞ்சாப்பியர் அடங்கிய பட்டாளங்கள் பல பிரிட்டனுக்கு உதவியாகச் சென்றிருந்தன. பிரிட்டிஷ் கட்சியின் வெற்றிக்குப் பஞ்சாப் பட்டாளங்கள் செய்த உதவியை ஆங்கில இராஜ தந்திரிகள் பெரிதும் பாராட்டினார்கள். அந்தக் காலத்தில் பிரிட்டிஷார் இந்தியாவில் உள்ள மக்களை இரண்டு விதமாகப் பிரித்துக் குறிப்பிடுவது வழக்கம். போர்க் குணம் படைத்த சாதியார் என்றும் போர்க்குணமில்லாத சாதியார் என்றும் பிரித்தார்கள். பஞ்சாப்பிலுள்ளவர்கள் போர்க் குணம் படைத்தவர்கள். ஆகையால் இந்திய சைன்யத்துக்குப் பஞ்சாப்பிலிருந்து அதிகமாக ஆள் திரட்டுவது வழக்கம். இதே காரணத்தினால் பஞ்சாப் மாகாணத்தைத் தேசியக்காற்றுப் படாமல் காப்பாற்றுவதில் பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் அதிகமான கவலை கொண்டிருந்தது.*

அப்போது பஞ்சாப் மாகாணம் ஸர் மைக்கேல் ஓட்வியர் என்னும் லெப்டினண்ட் கவர்னரின் ஆட்சியில் இருந்தது. பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் பொறுக்கி எடுத்த 'இரும்பு மனிதர்'களுக்

* இம்மாதிரி இந்தியர்களைப் போர்க்குணம் உள்ளவர்கள், போர்க்குண மில்லாதவர்கள் என்று பிரிப்பது எவ்வளவு பிசகானது என்பது இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது நன்கு வெளியாயிற்று. உலகத்துப் போர் முனைகளிலும் சமீபத்தில் காஷ்மீரிலும் சென்னை வீரர்களின் போர்த் திறமை நடைபெற்று விட்டுப் பிரகாசித்தது.

குள்ளே ஸர் மைக்கேல் ஓட்வியர் ஒருவர். 'இந்திய சுதந்திரம்' என்ற பேச்சுக் காதில் விழுந்தால் அவருடைய கண்கள் சிவக்கும். 'வந்தே மாதரம்' என்ற மந்திரம் காதில் விழுந்தால் அவருடைய இரத்தம் கொதிக்கத் தொடங்கும். அந்தக் காலத்து இந்திய தேசியத் தலைவர்களுடைய பெயர்களைக் கேட்டால் அவருடைய நரம்புகள் புடைத்துக் கொள்ளும். இந்தியாவுக்குச் சுயராஜ்யம் வேண்டும் என்று சொல்லும் தேசியத் தலைவர்களையெல்லாம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பரம விரோதிகள் என்று அவர் கருதினார். பொதுவாக இந்திய அரசியல் வாதிகளையே அவருக்குப் பிடிப்பதில்லை. மிதவாதிகள், அமித வாதிகள், காங்கிரஸ் வாதிகள், வெடி குண்டு வாதிகள். — யாரா யிருந்தாலும் இவருக்கு ஒன்றுதான்.

இத்தகைய அபூர்வ மனிதரின் ஆட்சியில் அப்போது பஞ்சாப் மாகாணம் இருந்தது. இவருக்குக் கீழே இருந்த பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தினரும் அதே மனோபாவம் கொண்டவர்களாயிருந்தார்கள்.

அந்த 1919-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் அமிருதஸரஸில் காங்கிரஸ் மகா சபையை நடத்துவது என்று தீர்மானமாகியிருந்தது. இந்தச் செய்தி ஸர் மைக்கேல் ஓட்வியரின் ஆங்காரம் சுடர் விடுவதற்குக் காரணமாயிற்று.

* * *

இத்தகைய நிலைமையிலேதான் பஞ்சாபில் பல நகரங்களில் மார்ச்சுமீ 30உ யன்றும் ஏப்ரல் 6உ யன்றும் மகாத்மாவின் கோரிக்கைப்படி ஹர்த்தால்கள் நடந்தன. இந்த ஹர்த்தால்களின்போது பொது ஜனங்களுக்கும் சர்க்கார் அதிகாரிகளுக்கும் தகராறுகள் ஏற்பட்டு விட்டன. போலீஸார் கலையச் சொன்னதும் ஜனங்கள் கலையவில்லை. சில இடங்களில் கல்லெறிதல்கள் நடந்தன; பதிலுக்குத் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்தன. ஆயினும் ஜனங்களுடைய வேகமும் உற்சாகமும் குன்றவில்லை. அதிகமாகி வருவதாகக் காணப்பட்டது. இதையெல்லாம் ஸர் மைக்கேல் ஓட்வியர் பார்த்தார். நிமிஷத்துக்கு நிமிஷம் அவருடைய ஆத்திரம் பொங்கிற்று. "பஞ்சாப்பில் பிரிட்டிஷ் அதிகாரத்தை மக்கள் அலட்சியம் செய்வதா? அதை நாம் பார்த்துக்கொண்டிருப்பதா?'' என்று அவருடைய உள்ளம் கொதித்தது. "இந்த ஜனங்களுக்குச் சரியான பாடங் கற்பிக்கா விட்டால் நான் ஸர் மைக்கேல் ஓட்வியர் அல்ல; இந்தப் பொதுஜன உத்வேகத்தை அடக்காவிட்டால் நான் இரும்பு வர்க்கத்தைச் சேர்ந்த லெப்டினண்ட் கவர்னர் அல்ல'' என்று உறுதி கொண்டார்.

உடனே தம் கீழிருந்த அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் "உங்களுடைய கைவரிசையைக் காட்டுங்கள்!'' என்று உத்தரவு அனுப்பி வைத்தார்.

அதே சமயத்தில்தான் அமிருதஸரஸிலிருந்து மகாத்மா காந்திக்கு அழைப்புப் போயிருந்தது. காந்திஜியும் வருவதாகச் செய்தி அனுப்பியிருந்தார். இதையறிந்த ஸர் மைக்கேல் ஓட்வியர் "காந்திஜி பஞ்சாப்புக்குள் நுழையக் கூடாது'' என்று உத்தரவு போட்டார். அந்த உத்தரவை ரயிலிலேயே காந்திஜியிடம் சேர்ப்பித்து அவரை வழி மறித்துத் திருப்பி அழைத்துச் செல்லப் போலீஸ் உத்தியோகஸ்தரையும் அனுப்பினார்.

ரயில் வண்டியிலேயே காந்திஜிக்குத் தடை உத்தரவைக் கொடுத்து அவரை டில்லி ரயிலிலிருந்து இறங்கிப் பம்பாய் ரயிலில் ஏற்றித் திருப்பி அழைத்துக் கொண்டு போனார்கள் அல்லவா?

அதே தினத்தில் அதாவது ஏப்ரல் 10-ந் தேதி அமிருதஸரஸில் ஒரு முக்கியமான சம்பவம் நேர்ந்தது. அமிருதஸரஸில் அப்போது ஜனத் தலைவர்களாயிருந்தவர்கள் இரண்டு பேர். ஒருவர் டாக்டர் சத்தியபால் என்னும் பிரபல வைத்தியர். இன்னொருவர் டாக்டர் ஸைபுடீன் கிச்லூ என்னும் பிரபல பாரிஸ்டர். இந்த இரு தலைவர்களும் அச்சமயத்தில் அமிருதஸரஸின் 'முடிசூடா மன்னர்'களாக விளங்கினார்கள். ஏப்ரல் 10-ந் தேதி காலையில் மேற்கூறிய இரு தலைவர்களையும் அமிருதஸரஸ் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் தம்முடைய வீட்டுக்கு வந்து போகும்படி சொல்லி அனுப்பினார். நகரத்தில் அமைதி காப்பதன் சம்பந்தமாகக் கலந்து ஆலோசிக்க அழைப்பதாக அவர்கள் நினைத்து உடனே புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் வந்ததும் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் "உங்களைக் கைது செய்திருக்கிறேன்!'' என்றார். மூடிய போலீஸ் வண்டிக்குள் அவர்களை ஏற்றி யாருக்கும் தெரியாத இடத்துக்கு அனுப்பி விட்டார்!

ஜில்லா மாஜிஸ்ட்ரேட் வீட்டுக்குச் சென்ற தலைவர்கள் திரும்பி வரவில்லை என்ற செய்தி அமிருதஸரஸ் நகரத்தில் அதி விரைவாகப் பரவியது. ஜனங்கள் சிறு சிறு கூட்டமாகச் சேர்ந்து கடைசியில் ஒரு பெருங் கூட்டமானார்கள். "எங்கள் தலைவர்களை என்ன செய்தீர்கள்?'' என்று கேட்பதற்காக ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டின் வீடு நோக்கிச் சென்றார்கள்.

ஜனங்கள் வசித்த அமிருதஸரஸ் நகரத்துக்கும் உத்தியோகஸ்தர்கள் வசித்த 'ஸிவில் லைன்ஸ்' என்னும் பகுதிக்கும் நடுவில் ரயில் பாதை கேட் ஒன்று இருந்தது. அங்கே இராணுவப் படை வீரர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார்கள். ஜனங்களை மேலே போகக் கூடாது என்று அவர்கள் தடுத்தார்கள். உடனே கற்கள் பல வந்து விழத் தொடங்கின. பொது ஜனங்களுக்கும் அதிகாரிகளுக்கும் இம்மாதிரி 'லடாய்' ஏற்படும்போதெல்லாம் கூட்டத்தில் உள்ளவர்களில் சில உற்சாகிகள் கல்லெறிவதைக் கையாளுவது அந்த நாளில் சாதாரணமாயிருந்தது. ஜனங்களிடம் வேறு ஆயுதம் கிடையாது. காந்தி மகாத்மாவின் அஹிம்சா தர்மத்தைப் பற்றியும் இன்னும் ஜனங்கள் சரியாக அறிந்து கொள்ளவில்லை. ஆகவே யாரேனும் சிலர் கல்லெறிய ஆரம்பித்து விடுவது வழக்கம். அவ்வளவுதான்; வெறும் வாயை மெல்லுகிறவர்களுக்கு அவல் கிடைத்தாற்போல் ஆகிவிடும். போலீஸாரும் இராணுவத்தாரும் கல்லுக்குப் பதில் ஜனங்கள்மீது குண்டு எறிய ஆரம்பித்து விடுவார்கள்.

அநேக இடங்களில் நடந்த துப்பாக்கிப் பிரயோகங்களுக்குக் 'கல்லெறி' ஒரு வியாஜமாகவே இருக்கும். 'கல்லெறிதல்' சில இடங்களில் பொய்யாகக் கற்பிக்கப்படுவதும் உண்டு. அதிகாரிகளே ஜனக் கூட்டத்தில் சில கையாள்களை நியமித்துக் கல்லெறியச் செய்வதும் உண்டு. துப்பாக்கிப் பிரயோகத்துக்கு ஏதேனும் காரணம் வேண்டும் அல்லவா?

அமிருதஸரஸ் ஜனங்கள்மீது ரயில்வே கேட்டில் நின்ற பட்டாளத்தார் சுட்டதில் இரண்டு பேர் செத்து விழுந்தார்கள். செத்தவர்களின் உடல்களைத் தூக்கிக் கொண்டு அந்தப் பெருங் கூட்டம் நகரத்தை நோக்கித் திரும்பியது. திரும்பிப் போகும்போது வெறி கொண்ட மக்கள் பல அட்டூழியங்களைப் புரிந்தார்கள். ஒரு பாங்கியையும் ரயில்வே கூட்ஸ் கொட்டகையையும் இன்னும் சில சர்க்கார் காரியாலயங்களையும் கொளுத்தினார்கள். அந்த 'கலாட்டா'வில் ஐந்து ஐரோப்பியர்கள் கொல்லப் பட்டார்கள்.


இந்த வருஷ நாகரிகம்!



அன்றைய சாயங்காலமே அமிருதஸரஸ் நகரத்தின் நிர்வாகத்தை ஸிவில் உத்தியோகஸ்தர்கள் இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

ஒரு பிரதேசத்தில் கலகமும் குழப்பமும் அதிகமானால் அந்தப் பிரதேசத்தில் ஸிவில் சட்டங்களையும் சாதாரண ஆட்சி முறையையும் நிறுத்தி வைத்து இராணுவச் சட்ட ஆட்சியை அமுலுக்குக் கொண்டு வருவது வழக்கம். இராணுவச் சட்டம் அமுலில் இருக்கும்போது சாதாரண கோர்ட்டுகளுக்கு அதிகாரம் ஒன்றும் கிடையாது. இராணுவ அதிகாரிகள் இட்டதுதான் சட்டம். இராணுவ அதிகாரிகளின் உத்தரவை மீறினால் உடனே கடுந் தண்டனை. சாதாரண சட்டம் அமுலில் இருக்கையில் ஒருவன் குற்றம் செய்தால் அவனைக் கைது செய்வது, ரிமாண்டில் வைப்பது, ஜாமீனில் விடுவது, வக்கீல் வைத்துக் கேஸ் நடத்துவது, விசாரணை, தீர்ப்பு, அப்பீல்,—இப்படியெல்லாம் நியாயம் பெறுவதற்குப் பலமுறைகள் உண்டல்லவா? இராணுவச் சட்ட அமுலின் கீழ் இதெல்லாம் ஒன்றுமில்லை. இராணுவ உத்தரவைமீறுவோர் உடனே தண்டனைக் குள்ளாவார்கள். உத்தரவை மீறும்போதே சுட்டுக் கொல்லப்படலாம். அதில் தவறினால் இராணுவக் கோர்ட்டுகளில் உடனுக்குடன் 'விசாரணை' நடக்கும். கசையடி, தூக்குத் தண்டனை, ஆயுள் தண்டனை எது வேண்டுமானாலும் கொடுக்கலாம். அப்பீல் கிடையாது.

ஏப்ரல் மாதம் 10-ந் தேதி அமிருதஸரஸ் ஸிவில் அதிகாரிகள் நிலைமையைத் தங்களால் இனிச் சமாளிக்க முடியாது என்று சொல்லி இராணுவச் சட்ட அமுலைக் கோரினார்கள். இராணுவச் சட்ட அமுலுக்கு இந்திய சர்க்காரின் அநுமதி தேவையாயிருந்தது. இந்த அநுமதி ஏப்ரல் மாதம் 14-ந் தேதிதான் வந்தது. ஆனால் இந்திய சர்க்காரின் அநுமதி வரும் என்று எதிர்பார்த்து ஏப்ரல் மாதம் 10-ந் தேதியே அமிருதஸரஸை இராணுவ அதிகாரிகள் ஒப்புக்கொண்டு விட்டார்கள். இந்தக் காரியத்துக்கு பஞ்சாப் லெப்டினண்ட் கவர்னர் ஸர் மைக்கேல் ஓட்வியரின் ஆதரவு பரிபூரணமாக இருந்தது. அதிகாரிகளுக்கு வேறு என்ன கவலை!



அன்று இந்தியா சத்தியாக்கிரக தீபத்தை ஏந்தி பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அந்தகாரமாகிற ஆபத்தை விரட்டி ஒழித்தது.
இன்று இந்தியா தானியக் களஞ்சியத்தைப் பெருக்கிப் பஞ்சப் பேயை விரட்டி ஒழிக்குமாக!

போகிற போக்கில்...

ஸோமாஸ்

கந்தப்பனின் குழந்தைக்குக் கடுமையான ஜுரம் அடித்துக் கொண்டிருந்தது. இரண்டொரு மாதங்களாகவே குழந்தைக்கு அடிக்கடி ஜுரம் வந்து கொண்டிருந்தது. இப்பொழுது ஒரு வாரமாக ஜுரம் விடாமல் நெருப்பாய்க் காய்ந்தது. 'விடாத ஜுரத்துக்கு வீரப்பன்' என்று அந்தப் பக்கங்களில் பிரசித்தி பெற்றிருந்த நாட்டு வைத்தியன் வீரப்பனுடைய மாத்திரைக்குக் கூட அந்த ஜுரம் கட்டுப்படவில்லை. கார்ப்பொரேஷன் தர்ம ஆஸ்பத்திரி மருந்துக்கும் அது தணியவில்லை.

குழந்தையின் உடல் நிலை கந்தப்பனை மிகவும் கவலையில் ஆழ்த்தி விட்டது. அவனிடம் இயல்பாக உள்ள உற்சாகமெல்லாம் எங்கோ மறைந்து விட்டது. கன்னத்தில் ஊன்றிய கையோடு அவன் சிந்தனையில் ஆழ்ந்து விட்டான்.

"நீயும் இப்படி இடிந்து போய்க் குந்திக்கிட்டு இருந்தா வீடு எப்படி நடக்கும்? நீ வண்டியை எடுத்துக்கிட்டுப்போ! வைத்தியர் வீரப்பன் வருவாரு; நானும் குழந்தையைக் கவனிச்சுக்கிறேன். வீட்டுக்கு வேண்டிய பணத்தை நீ சம்பாதிக்கிறதுக்கு முன்னாலே வண்டிக்கார எஜமானின் வாடகைக்கு ஏற்பாடு செய்யணுமில்லே? இரண்டு மூணு நாளா நல்ல சவாரியே இல்லேன்னு சொன்னயே!" என்று அவன் மனைவி செங்கமலம் சொன்னது. கந்தப்பனுக்குத் தான் முன்பு எப்போதோ பார்த்த ஒரு நாடகத்தில் நடந்த சம்பாஷணை மாதிரி காதினில் விழுந்தது.

அவனும் நாடகபாணியிலேயே மௌனமாக எழுந்திருந்து, அவளைப் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு வெளியே போய் ரிக்ஷாவை இழுத்துக்கொண்டு கிளம்பினான். போகும்போது அவனை யறியாமல் அவன் கண்கள் குடிசைப் பக்கம் திரும்பித் திரும்பிப் பார்த்து மளமள வென்று கண்ணீர் பெருக்கின.

அன்றைக்கும் கந்தப்பனுக்குச் சரியான கிராக்கி ஒன்றும் கிடைக்கவில்லை. ரயில்வே ஸ்டேஷன், கடைத்தெரு முதலிய இடங்களிலெல்லாம் சுற்றி வந்தான். ஆனால் அவன் மனம் மட்டும் குழந்தையைப் பற்றிய நினைவிலேயே சுழன்று சுழன்று வந்தது.

"ஏய், ரிக்ஷா! இங்கே வா!" என்று கூப்பிட்டு யாரோ கைதட்டவே கந்தப்பன் அந்தத் திக்கை நோக்கி வண்டியை இழுத்துக்கொண்டு ஓடினான். அங்கிருந்த பங்களாவிலிருந்து கையில் ஒரு சின்னப் பெட்டி சகிதம் ஒரு டாக்டர் வெளியே வந்து அவசரமாக வண்டியில் ஏறிக் கொண்டு எதிரே கையைக் காட்டி, "ஓட்டு!" என்று கம்பீரமாகச் சொன்னார். கந்தப்பன் அவர் காட்டிய திசையை நோக்கிக் காற்றாய்ப் பறந்தான்.

பலப் பல நினைவுப் பின்னலிடையே சிக்கிக் கொண்டிருந்த அவன் மனமும் விரைந்து சஞ்சரிக்க ஆரம்பித்தது. 'பணக்காரர்களுக்கும் நோய் வருகிறது; வாழ வழியற்ற ஏழைக்கும் நோய் வருகிறது. ஆனால் பணக்காரர்களுக்கு அந்த நோயுடன் போராடப் பணம் இருக்கிறது. ஏழைக்கு அது இல்லை. நம் குழந்தையை எல்லா ஏழை வைத்தியர்களும் பார்த்துக் கைவிட்டு விட்டார்கள். இவர் மாதிரி ஒரு பெரிய டாக்டரை அழைத்துக் காட்டலாம் என்றால் நம்மிடம் பணம் இல்லை. நோயாளிக் குழந்தையைப் பற்றி டாக்டரிடம் பேசி யோசனை கேட்டால் அதற்கும் பணம் கொடுக்க வேண்டுமாம். அப்புறம் அவர் வீட்டுக்கு வந்து குழந்தையைப் பார்த்தால் பணம், மருந்துக்குப் டணம், குழந்தை சௌக்யமடைந்துவிட்ட பிறகு டாக்டர் பீஸ் வேறு கொடுக்க வேணுமாம். இதற்கெல்லாம் நாம் எங்கே போவது? ஏழைக் குடும்பம், ராஜ வைத்தியம் என்கிறார்களே அது சரியாயிருக்கிறது' என்று நினைத்துக் கொண்டே கந்தப்பன் தன் வேலையையும் கண்ணாகக் கவனித்துக் கொண்டே போனான். அவன் வண்டியைக் கவனிக்காமலே மோதிக் கொள்ள வரும் ஜனங்களைப் பார்த்து அவனுடைய வாய் "ஓரம்! ஓரம்! ஓரமாய்ப் போ, ஐயா!" என்று ஓயாமல் கத்திக் கொண்டிருந்தது.

* * *

ஆதியும் அந்தமும் இல்லாத ஆண்டவன், கந்தப்பனையும் தன் மாதிரியே தாயும் தந்தையும் இல்லாதவனாகச் சிருஷ்டித்திருக்கான். சின்ன வயதிலேயே—ஆறு மாதக் குழந்தையாயிருக்கும் போதே—பெற்றோரை இழந்த கந்-

தப்பன் ஒரு தோட்டக்காரன் வீட்டில் தன் குழந்தைப் பருவத்தைக் கழித்தான். வயது வளர வளர, கந்தப்பன் 'வாட்ட சாட்ட'மாக வளர்ந்தான். கந்தப்பனுடைய வளர்ப்புத் தந்தையான தோட்டக்காரனும் வேகமாக முன்னேறி வயோதிகப் பருவத்தை அடைந்தான். அவனால் தோட்ட வேலை செய்ய முடியவில்லை. கந்தப்பனுக்குச் சிறு வயது முதல் தோட்ட வேலையில் சிரத்தை இல்லை. மேலும் கிழவனுக்கிருந்த பொறுமை அவனுக்கு இல்லை. குடும்ப பாரம் கந்தப்பன் தலையில் விழுந்தது. அதை நிர்வகிக்க அவன் ரிக்ஷா இழுக்கும் வேலையை மேற் கொண்டான்.

கந்தப்பன் இந்தத் தொழிலை மேற் கொண்ட ஒரு வருஷத்துக்குள் தோட்டக்காரக் கிழவன், அவன் இழுத்து வந்த குடும்ப வண்டிப் பாரத்தை நீக்கி வைத்தான். ஆமாம், தோட்டக்காரனும் அவன் மனைவியும் ஒரே நாளில் விஷஜுரத்துக்கு இரையாகி விட்டனர்.

கந்தப்பன் தன்னந்தனியனானான். அந்தச் சிறு குடிசையில் தானே பொங்கித் தின்று ஒருவாறு வாழ்க்கையைத் தள்ளி வந்தான். காலையில் எழுந்ததும் நீரும் சோறும் சாப்பிட்டு விட்டுப் புறப்பட்டால் மாலையில்தான் வீட்டுக்கு வருவான். இரவு நேரம்தான் அவன் சமையல் செய்வான்; பகல் சாப்பாட்டைப் பற்றி அவன் கவலைப்படுவதில்லை. வழியில் ஏதாவது வாங்கிச் சாப்பிட்டுத் தன் வயிற்றுக் கவலையைத் தீர்த்துக் கொள்ளுவான்.

நாடகத்தில் அடிக்கடி காட்சி மாறுகிறதல்லவா? காட்சி மாறாவிட்டால் நாடகத்தில் என்ன இருக்கிறது? அதே மாதிரி நம் வாழ்க்கை நாடகத்திலும் காட்சி மாறுதல் ஏற்படத்தான் செய்கிறது. அந்தக் காட்சி மாறும் கட்டம் கந்தப்பனின் வாழ்க்கையிலும் ஏற்பட்டது; இல்லாவிட்டால் அவன் அன்றைக்கு அந்த நேரத்தில் புரசபாக்கம் ஹைரோட்டில் ஏன் வரப் போகிறான்? அப்படியே அவன் வந்தாலும் செங்கமலம் ஏன் விபத்தில் சிக்கியிருக்கப் போகிறாள்? செங்கமலந்தான் விபத்தில் சிக்கிக் கொண்டாள் என்றால் அவ்வளவு ஜன நெருக்கடியான இடத்தில் கந்தப்பனைத் தவிர வேறு ஒரு ரிக்ஷாக்காரனும் வராமல் இருப்பானேன்?



புரசபாக்கம் வழியாக வெறும் ரிக்ஷாவை இழுத்துக் கொண்டே கந்தப்பன் மெதுவாக வந்து கொண்டிருந்தான். அவன் கவனம் திடீரென்று எதிரே கொஞ்ச தூரத்தில் நடு ரஸ்தாவில் கூடியிருந்த ஜனக்கூட்டத்தின் மீது சென்றது. விஷயம் என்னவென்று அறிந்து கொள்ள வேண்டும் என்னும் ஆர்வமும், கூட்டத்தில் ஏதாவது சவாரி கிடைக்கலாம் என்னும் ஆவலும் அவனையும் அவன் ரிக்ஷாவையும் பிடித்து உந்தி விட்டன.

"இதோ, ரிக்ஷா வண்டி வந்திருக்கிறது. இதிலே ஏற்றி இந்தப் பெண்ணை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்து விடலாம்!" என்று கூட்டத்தில் ஒருவன் கணீர் என்று சொன்னான்.

உடனே கூட்டம் விலகி வழி விட்டது. கந்தப்பன் நடந்தது என்னவென்று ஆவலுடன் கவனித்தான். ரஸ்தாவில் ஒரு பெண்—இருபது வயது இருக்கும்—தலையில் பலமான அடிபட்டு உதிரம் பெருக நினைவு இழந்து கிடந்தாள். டிராம் மோதிக் கீழே விழுந்து விட்டாள் என்ற செய்தியைக் கூட்டத்தினர் பேச்சிலிருந்து கந்தப்பன் தெரிந்து கொண்டான். கூட்டத்தில் விஷயம் தெரிந்த ஒருவன் தன் மேல் துண்டைக் கிழித்து ஜலத்தில் நனைத்து அவள் தலையில் கட்

டுப் போட்டான். பிறகு இரண்டொருவர் அவனைத் தூக்கி ரிக்ஷாவில் ஏற்றினார்கள். கந்தப்பன் வண்டியுடன் வேகமாய்ப் பறந்தான்.

ஜெனரல் ஆஸ்பத்திரி டாக்டர் அவள் காயத்தைப் பரிசோதித்துப் பார்த்து மருந்து வைத்துக் கட்டினார். "உயிருக்கு ஆபத்தில்லை. ஆனால் அவள் எழுந்து நடமாட ஒரு மாதத்துக்கு மேல் ஆகும்" என்று கூறின செய்தி கந்தப்பன் மனசுக்கு ஆறுதல் அளித்தது.

இப்போதெல்லாம் கந்தப்பனுக்கு வழக்கப்படி உள்ள வேலைகளைத் தவிர, கூட இரண்டு வேலைகளும் சேர்ந்து கொண்டன. அது, காலையிலும் மாலையிலும் அந்தப் பெண்ணைப் போய்ப் பார்த்து வருவதுதான்.

அந்தப் பெண்ணுக்கு ஒருநாள் முழுவதும் ஞாபகம் இல்லாமல் இருந்தது. மறுநாள் காலை கந்தப்பன் வந்து பார்த்த போது, அவள் விழித்துக்கொண்டு படுத்திருந்தாள். கந்தப்பனைக் கண்டதும் அவளுக்கு முதலில் ஒன்றும் விளங்கவில்லை. அவனது வாலிபத் தோற்றமும் கட்டுமஸ்தான தேகமும் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்க்க முடியாதபடி அவளை நாணம் அடையச் செய்தன.

"தலை ரொம்ப நோவுதா? ஆகாரம் எதினாச்சியும் சாப்பிட்டாயா?" என்று கவலையுடன் கேட்டு, கந்தப்பனே முதலில் சம்பாஷணையை ஆரம்பித்து வைத்தான்.

"இப்போது அத்தனை தெரியவில்லை!" என்று சிரமத்துடன் சொன்னாள் அவள்.

அதற்குமேல் கந்தப்பன் ஒன்றும் பேசவில்லை.

தினம் ஆஸ்பத்திரிக்கு அவன் வரும்போதெல்லாம் அவள் புன்னகை பூத்த முகத்துடன் அவனை வரவேற்பாள். அதைக் கண்டதும் அவனுக்கு உடம்பெல்லாம் புல்லரிக்கும்.

கந்தப்பன் ஒரு நாள், "உன் பெயரென்ன?" என்று கேட்டபோது, அவள் தன் இனிமையான குரலில் "செங்கமலம்" என்று சொன்னாள். அதை எண்ணும் போதெல்லாம் கந்தப்பனுக்குப் புதியதோர் மகிழ்ச்சி உண்டாயிற்று. அவன் ரிக்ஷா இழுக்கும் போது கூட, அவன் காதில் அந்த வார்த்தை கேட்டுக் கொண்டே யிருந்தது.

* * *


கந்தப்பனைப் போலவே செங்கமலமும் ஓர் அநாதைதான். மில் தொழிலாளர் இரண்டொருவருக்குச் சாப்பாடு எடுத்துப் பிழைப்பை நடத்தி வந்தாள். அவள் தன் வேலையை முடித்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பும்போதுதான் அன்று மாலை புரசபாக்கத்தில் டிராம் விபத்தில் சிக்கிக் கொண்டாள். இதற்கு மேல் செங்கமலத்தைப் பற்றிச் சொல்ல விவரம் ஒன்றுமில்லை.

ஒரு மாத காலத்துக்கெல்லாம் செங்கமலம் முற்றிலும் குணமடைந்து விட்டாள். ஆஸ்பத்திரியிலும் வீட்டுக்குப் போகச் சொல்லி விட்டார்கள். ஆஸ்பத்திரியிலிருந்த ஒரு மாத காலந்தான் அவள் வாழ்க்கையிலேயே சௌக்யமான நாட்கள் என்று சொல்ல வேண்டும். அங்கிருந்தவரை தங்கும் இடத்தைப் பற்றி அவள் துளிக் கூடக் கவலைப்படவில்லை. இப்பொழுதோ அவளை எல்லாக் கவலைகளும் வந்து சூழ்ந்து கொண்டன.

"நீ கவலைப்படாதே, செங்கமலம்! நீ விரும்பினால் என்னோடு என் குடிசையிலேயே தங்கிவிடலாம்!" என்று கந்தப்பன் அவளுக்கு அபயம் அளித்தான்.

ஆனால் செங்கமலத்தின் மனதில் இது ஒரு பெரிய போராட்டத்தைக் கிளப்பியது. 'இவர் யாரோ, எப்படிப் பட்டவரோ என்று தெரிந்து கொள்ளாமல் இவரோடு போய்த் தங்குவதா?'

ஓய்வு நேரத்திலே!



என்னும் எண்ணம் அவள் மனத்தை அலைக்கழித்தது.

இதைக் கந்தப்பன் ஒருவாறு ஊகித்துக் கொண்டான்.

"இதோ பார், செங்கமலம்! உனக்கும் யாருமில்லே, எனக்கும் யாருமில்லே. உன்னைப் பார்த்தது முதல் உன் ஞாபகமாகவே இருக்கிறது. உன்னை நான் கல்யாணம் செய்துகிட்டா, சண்டைக்கு வரவங்க யாரு இருக்காங்க? நாளைக்கே மரத்தடியான் எதிரிலே தாலி கட்டிப் போடுறேன். நீ என்ன சொல்லுறே? சம்மதந்தானே?" என்று கேட்டுக் கண்ணைச் சிமிட்டினான்.

ஏறக்குறைய, கந்தப்பனின் மன நிலையைத்தான் செங்கமலத்தின் மனமும் பிரதிபலித்தது. அவனை விட்டு வாழ முடியாது என்றுதான் அவளுக்கும் தோன்றியது. ஒரு மௌனப் புன்னகையினால் செங்கமலம் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். அவ்வளவுதான்; கந்தப்பனும் செங்கமலமும் புருஷன் மனைவி ஆனார்கள். அவர்களுடைய இன்ப வாழ்க்கையின் சின்னமாகத்தான் அந்தக் குழந்தை பிறந்திருந்தது. அதற்குத்தான் இப்பொழுது ஜுரம். கந்தப்பனின் கவலைக்குக் கேட்க வேண்டுமா?

* * *

ரிக்ஷா வண்டி மந்தைவெளியை அடைந்ததும், "இங்கே கந்தப்பனின் குடிசை எது என்று விசாரித்து அங்கே கொண்டு போ, பார்க்கலாம்!" என்றார் டாக்டர்.

கந்தப்பனுக்கு ஒரு நிமிஷம் ஒரே திகைப்பாயிருந்தது. நேரே தன் வீட்டுக்குப் போக அவன் விசாரிக்க வேண்டுமா, என்ன? கம்பீரமாக அவன் தன் வீட்டு வாசலில் கொண்டுபோய் ரிக்ஷாவை நிறுத்தினான். டாக்டர் குழந்தையைப் பரிசோதித்துப் பார்த்து இன்ஜெக்ஷன் கொடுத்துவிட்டு மீண்டும் ரிக்ஷாவில் ஏறிக் கொண்டார். அங்கிருந்து டாக்டர் வீட்டுக்குப் போகவேண்டிய ஒன்றரை மைல் தூரத்தையும் ஒரு நொடியில் ஓடித் தீர்த்துவிட்டான் கந்தப்பன்.

வீட்டுக்குத் திரும்பிய 'கந்தப்பனின் முகத்தில் இருந்த ஆச்சரியக் குறியைச் செங்கமலம் போக்கி விட்டாள். குழந்தை படும் அவஸ்தையைச் சகிக்க முடியாமல் செங்கமலம் தானே டாக்டர் வீட்டுக்கு ஓடி, தன் வெள்ளிக் காப்பை அடமானம் வைத்து நிதி திரட்டி, டாக்டருக்குக் கொடுக்க வேண்டிய பீஸ் முதலியவற்றைக் கொடுத்திருக்கிறாள் என்பது கந்தப்பனுக்கு எப்படித் தெரியும்?



காலக்ஷேபம்

போதும்!

டாக்டர்:—இந்தாருங்கள், தூக்க மருந்து! இதில் ஆறு நாட்களுக்கு வேண்டியதை வைத்திருக்கிறேன்!

நோயாளி:—அடேடே! ஆறு நாட்கள் என்னத்துக்குத் தூங்கணும்? ராத்திரியிலே மட்டும் தூங்கினால் போதுமே!

வாஸ்தவம்!

"டிரைவர், டிரைவர்! மோட்டாரை இப்படி வேகமாக ஓட்டாதே! எனக்குப் பயமாயிருக்கிறது!"

"நீங்கள்தானே சீக்கிரமாக ஆஸ்பத்திரியிலே கொண்டு போய் என்னைச் சேர்க்கணும்னு சொன்னீங்க?"

"அது சரி, டிரைவர்! ஆனால், அங்கேயே நான் தங்கிவிடப் போவதாகச் சொல்லவில்லையே!"

★

பயமுறுத்தல்

மனைவி:—குழந்தை ஏன் அழுகிறான்? அம்மா வந்து பாட்டுப் பாடித் தூங்கப் பண்ணுவாள் என்று சமாதானமாகச் சொல்லுங்கோ!

கணவன்:—அப்படிச் சொல்லிப் பயமுறுத்தியுங்கூட அவன் அழுகையை நிறுத்தமாட்டேன் என்கிறானே!

★

கஷ்டம்தான்!

மனைவி:—பள்ளிக்கூடத்திலே இடம் இல்லை என்பதற்காகச் சும்மாக் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தால் எப்படி? ஸ்கூலிலே பையனைச் சேர்க்க ஏதாவது வழி பண்ணுங்கள். இவனைச் சும்மா வீட்டிலே உட்காரவைத்துக் கொண்டிருந்தால் நாளைக்கு நாலு பேர் நம்மைப் பார்த்து என்ன சொல்லுவார்கள்?

கணவன்:—அந்த நாலு பேர் இப்பொழுது ஒன்றும் சொல்ல மாட்டார்கள்; அவர்களுக்கும் இதே கஷ்டம் இருக்கிறது!

Stanes

சிவப்பு லேபிள் கலப்பற்ற காப்பி

பிரசித்திபெற்ற ஸ்டேன்ஸ் கம்பெனியார்
தயாரிக்கும் ஓர் விலை குறைந்த ரகம்

1, 2, 3, 7, 14, 20 ராத்தல்
டின்களில் கிடைக்கும்



நற்செய்தி! ஸ்டேன்ஸ் கம்பெனியாரின் மனோகரமான சிவப்பு லேபிள் கலப்பற்ற காப்பி இப்பொழுது ஏராளமாக கிடைக்கிறது.

தாங்களே பொடி செய்ய விரும்புபவர்களுக்கு, மிகவும் ஜாக்கிரதையாக பொறுக்கி, வறுத்த ஸ்டேன்ஸ் காப்பிக் கொட்டைகளும் கிடைக்கின்றன.

தருவிக்கும் செலவின்றி இவைகளை பிரத்தியேகமாக பெறுங்கள்

சிறந்த ரக காப்பிக் கொட்டைகள், பீபெரி, தட்டை எக்ஸ்ட்ரா போல்டுகள் 10, 30 ராத்தல் பைகளில். விலை விகிதங்களுக்கும் விவரங்களுக்கும் டி. ஸ்டேன்ஸ் & கம்பெனி லிமிடெட், கோயம்புத்தூருக்கு எழுதுங்கள்.

தென் இந்தியாவின் சிறப்பு

THE PICK OF THE SOUTH

காக்கிநாடாவிற்கு ஏஜண்டு:
மிஸ்டர் கரணம் ஹனுமந்தராவ்
மெர்ச்சண்ட்

விஜயவாடாவிற்கு ஏஜண்டு:
மிஸ்டர் S. Ch. மல்லப்பராஜு
மேன்யுபாக்சரர்ஸ் ரெப்ரெஸென்டேட்டிவ்

தெய்வப் பிறவி

அம்மு

ஆபீஸில் வேலை செய்து கொண்டிருந்த பரமசிவத்தின் கைகள் பேனு பிடித்து எழுத மறுத்தன; மத்தியானம் சாப்பிடுவதற்காகக் கொண்டுவந்திருந்த பலகாரம் கேட்பாரற்று மேஜைக்கு அடியில் கிடந்தது. 'எப்பொழுது மணி ஐந்து அடிக்கும், கடையைக் கட்டிவிட்டு எழுந்திருக்கலாம்' என்று சிந்தித்த வண்ணம் அவர் கடிகாரத்தின் முட்கள் நகருவதை நிமிஷத்திற்கு நிமிஷம் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

"அந்தப் பாவி தபால்காரன் இந்தக் கடிதத்தை ஏன் கொணர்ந்து கொடுத்தான்? வழியிலேயே கிழித்துப் போட்டிருக்கக் கூடாதா......?" என்று தன்னைத்தானே பைத்தியம் பிடித்தவர் போல் அவர் கேட்டுக் கொண்டார். "எனக்கு இருக்கும் தொந்தரவு போதாது என்று இது வேறு வந்து சேர்ந்திருக்கிறதே!" என்று முணுமுணுத்தார்.

கடிதத்தின் மூலம் புதுப் பிடுங்கல் வந்திருந்தது என்றாலும் அது பழைய ஞாபகம் ஒன்றைக் கிளறி விட்டுவிட்டது. வாலிப மிடுக்கில் அதை ஒரு பாவமாகவோ, தவறாகவோ அவர் கருதா விட்டாலும் வயது செல்லச் செல்லத் தான் செய்தது சரியா, தவறா என்ற ஆராய்ச்சி அவருடைய இருதய அந்தரங்கத்தில் நடந்து கொண்டிருந்தது.

முன்னும் பின்னுமாகத் தன் உள்ளத்தில் ஊசலாடிக் கொண்டிருந்த அந்த விஷயத்தை நிலைநிறுத்த அவருக்குப் போதுமான திடபுத்தி இல்லை.

மணி ஐந்து அடித்தது. ஆபீஸ் கடையைக் கட்டி விட்டு வீட்டிற்குப் புறப்பட்டார். எங்கும் போகப் பிடிக்காமல் யாருடனும் பேசப் பிடிக்காமல் நேரே வீட்டை நோக்கி நடந்தார். வாயிற்படியில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன. தந்தையைக் கண்டதும், "அப்பா வந்துட்டா! அப்பா வந்துட்டா!" என்று அவை சந்தோஷத்துடன் கூவின. அதைக் கேட்ட பரமசிவத்துக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "சரி, நகருங்கள்!" என்று அவர்களை விலக்கிவிட்டு உள்ளே சென்றார். அங்கே அவருடைய மூத்த பெண் மீனு—அன்று வந்திருந்த கடிதத்திற்குக் காரணபூதமானவள்—கண்ணாடியின் முன்னால் நின்று பவுடர் பூசிக் கொண்டிருந்தாள். அவளைப் பார்த்து அநுதாபப்படுவதற்குப் பதிலாக ஆத்திரப்பட்டார் பரமசிவம். காரணம், அவருக்கிருந்த மனோவேதனைதான். தம் அறைக்குச் சென்று கோட்டுப் பித்தானைக் கழற்றிக் கொண்டே, "பவுடர் இருக்கட்டும்; இங்கே வா!" என்றார் அவர். மீனு திரும்பிப் பார்த்தாள். தந்தையின் கோபத்திற்கு அவள் எப்பொழுதுமே பயப்படும் வழக்கம் கிடையாது. ஆகவே, "சினிமாவுக்குப் போகப் போகிறேன்...அதுதான்......!" என்று 'கல கல' வென்று சிரித்துக் கொண்டே அவள் ஆரம்பித்தாள்.

"ஓஹோ! சினிமாவுக்குப் போகப்போகிறாயா? அதற்குப் பவுடர் டப்பாவை ஒரேயடியாகக் காலி பண்ண வேண்டுமாக்கும்! இந்தா, இந்தக் கடிதத்தைப் படித்துப் பார்! சினிமாவுக்குப் போகிறாயா, டிராமாவுக்குப் போகிறாயா என்று பார்க்கிறேன்...!" என்று சொல்லிக் கொண்டே தம் கையிலிருந்த கடிதத்தை அவர் வீசி எறிந்தார்.

மீனு தன் அறையை விட்டு வெளியே வந்து அந்தக் கடிதத்தை எடுத்தாள். அதற்குள் சமையலறையிலிருந்து வந்த மீனுவின் தாயார் முத்துலக்ஷ்மி, "வந்ததும் வராததுமாய் அப்பாவுக்கும் பெண்ணுக்கும் என்ன சண்டை?" என்று கேட்டாள்.

பரமசிவம் பெண்பிள்ளைகளிடம் தாராளமாகப் பேசும் சுபாவமுடையவர். இதனால் அவர் கோபித்துக் கொள்ளும்பொழுது குழந்தைகள் பயப்படுவதில்லை. தன் சகோதர சகோதரிகளிடம் சண்டை போடும் பொழுது எப்படி பதிலுக்குப் பதில் பேசுவார்களோ, அப்படியே தகப்பனாரிடமும் பேசுவார்கள். இம்மாதிரி சமயங்களில் முத்துலக்ஷ்மி சமயத்திற்குத் தக்கவாறு ஏதாவது ஒரு கட்சியை ஆதரித்துச் சண்டையைத் தீர்த்து வைப்பாள்.

இன்று அவ்விதம் நடக்கவில்லை. ஏனெனில், அதற்குள் கடிதத்தைப் படித்து முடித்துவிட்ட மீனு, "ஐயோ, அம்மா! இந்தக் கடிதத்தைப் படித்துப் பார்!" என்று கண்களில் நீர் வழியக் கதறினாள்.

முத்துலக்ஷ்மி திடுக்கிட்டு, "என்ன எழுதியிருக்குடி? யாரிடமிருந்து வந்தி

ருக்கு? கையெல்லாம் கரியா யிருக்கு; நீ தான் படித்துச் சொல்லேன்!" என்றான்.

"என்னாலே படித்துச் சொல்ல முடியாது, அம்மா! நீயே படித்துக் கொள்!" என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குச் சென்று விட்டான் சீனு.

முத்துலக்ஷ்மி அழாக்குறையாக அந்தக் கடிதத்தை எடுத்துப் படித்தாள். படித்து முடித்ததும், "அட பாவிகளா! பெரிய கல்லைத் தூக்கித் தலையில் போடுகிறீர்களே!" என்றாள் ஆத்திரத்துடன்.

நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்த பரமசிவம் பெருமூச்சுடன், "அவர்களா போடுகிறார்கள்! நான் செய்த பாவமல்லவா என் தலையில் கல்லைத் தூக்கிப் போடுகிறது!" என்றார்.

2

பரமசிவத்துக்குப் பத்தொன்பதாவது வயதில் கல்யாணம் நடந்தது. மகா குக்கிராம மொன்றில் படு கர்நாடகக் குடும்பத்தில் பிறந்தவர் அவர். அவருடைய தகப்பனார் எப்பொழுதும் கோபத்தில் கன்று யிருப்பார். தாயார் ஊர்ச் சண்டைகளை விலைக்கு வாங்குவாள். 'தான் வைத்ததே சட்டம்; இட்டதே கட்டளை!' என்று ராணிபோல் அவள் அந்த வீட்டை உலுக்கிவந்தாள்.

இந்த அதிகாரத்திலேயே வளர்ந்த பரமசிவம் வாயில்லாப் பூச்சியாக இருந்தார். பதினெட்டாவது வயதில் அவர் பி. ஏ. பாஸ் செய்ததும் அவருடைய தாயார் கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானாள். அந்த அம்மாளின் அரட்டைக்கல்லித்தனத்திற்கு ஏற்றாற்போல் ஒரு பெண்ணும் எளிதில் கிடைக்கவில்லை.

இப்படியாகத் தாயார் வரிவிருந்த பெண்களை யெல்லாம் சல்லடை போட்டுச் சலித்துக் கொண்டிருந்தபோது பரமசிவத்துக்குச் சென்னையில் வேலை யாயிற்று; அவர் போய் விட்டார். வேலை பார்க்க ஆரம்பித்த சில நாட்களுக்கெல்லாம் பெற்றோர் அவருக்குப் பெண்ணைத் தேர்ந்தெடுத்து விட்டனர். அந்தப் பெண்ணின் கழுத்தில் மூன்று முடிச்சுகளைப் போட்டுவிட்டுப் போகுமாறு அவரை அழைத்தனர். பரமசிவம் லீவு போட்டுவிட்டுப் பெண்ணுக்குத் தாலி கட்ட வந்து சேர்ந்தார். மற்றப்படி கல்யாண விஷயங்கள் ஒன்றும் அவருக்குத் தெரியாது. வரதட்சிணை எவ்வளவு, பெண் எப்படி? — ஊஹூம்; எதுவுமே அவருக்குத் தெரியவில்லை. அவற்றை யெல்லாம் தெரிந்துகொள்ள அவர் முயற்சி செய்யவுமில்லை. 'அம்மா செய்தால் சரி; அதில் தப்பு இருக்காது! இருந்தாலும் சொல்ல முடியாது!' என்ற தீர்மானத்துடன் அவர் ஒரு சுப யோக சுபதினத்தில் அந்த அப்பாவிப் பெண்ணின் கழுத்தில் மாலையிட்டார். கல்யாணம் முடிந்த மூன்றாம் நாளே லீவு கிடைக்காததால் சென்னைக்குப் புறப்பட்டுவிட்டார்.

தாயார் ஆறு மாதங்களுக்குக் காணும்படியாகக் கட்டிக் கொடுத்த பக்ஷணத்துடன், 'மாப்பிள்ளை' என்ற 'டிக்ரி'யையும் பெற்றுக் கொண்டு பரமசிவம் சென்னைக்கு வந்து சேர்ந்தார். இரண்டு மாதங்களுக்கெல்லாம் பரமசிவத்துக்குப் பெற்றோரிடமிருந்து சம்பந்தி வீட்டாரைப் பற்றிய புகார்கள் கடிதத்தின் மூலம் வரத் தொடங்கின. சம்பந்திகளின் நடத்தை ரொம்ப மோசமாயிருப்பதால் அவர்கள் வீட்டுப்



பெண்ணை அழைத்துக் கொள்வதில்லை யென்று தாங்கள் நிர்மானித்திருப்பதாக அவர்கள் எழுதியிருந்தார்கள். பரமசிவத்துக்கு ஒன்றும் புரியவில்லை. மீண்டும் மீண்டும் அதே தோரணையில் கடிதம் வந்து கொண்டிருக்கவே, பரமசிவம் அலுப் படைந்து பின்வருமாறு ஒரு கடிதம் எழுதினார் :—

அப்பாவுக்கு அநேக நமஸ்காரம்.

தங்கள் கடிதத்தைப் படிக்க மிகவும் கஷ்டமாக இருக்கிறது. நான் சிறுவன். எனக்கு உலகத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. ஏதோ நீங்களாகப் பார்த்து எனக்குக் கலியாணம் செய்து வைக்கவே செய்து கொண்டேன். மற்றபடி அந்தப் பெண் வீட்டாரைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆகவே, பெரியவர்கள் எது செய்தாலும் அது என்னுடைய நன்மைக்காகத்தான் இருக்கும் என்ற ஒரே நம்பிக்கையுடன் இருக்கிறேன். இந்த விஷயத்தில் உங்களுடைய அபிப்பிராயம் எப்படியோ அப்படிச் செய்யுங்கள். அதற்கு நான் கீழ்ப்படிகிறேன்.

அன்புள்ள,

பரமசிவம்.

இப்படியாகத்தானே சமர்த்தாக ஒரு கடிதம் எழுதித் தந்தைக்கு அனுப்பிவிட்டார் பரமசிவம். அதற்குப் பதிலும் வந்தது. 'நல்ல இடம்' என்று நினைத்து ஏமாந்து விட்டதாகவும், அவர்களைப் பற்றிப் பேசினால் நாவை அலம்ப வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் கண்டிருந்தது.

எல்லாவற்றிற்கும் ஒரே பதில்தான் எழுதினார் பரமசிவம். 'எனக்கு ஒன்றும் தெரியாது, உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்; எனக்கு ஒன்றும் தெரியாது, உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்......!'

3

இப்படியும் அப்படியுமாக ஒரு வருஷம் ஓடிவிட்டது. ஆடிப் பண்டிகை, தலை தீபாவளி போன்ற விசேஷ நாட்களை யெல்லாம் பரமசிவம் தன் பெற்றோர்களுடன் கொண்டாடினார்; வேட்டகத்துக்குச் செல்லவில்லை. தன்னையே பெற்றோரிடம் ஒப்படைத்திருந்த அவருக்கு இதெல்லாம் வருத்தக்கூடிய விஷயங்களாகவும் தோன்றவில்லை. எந்த விதமான வருத்தமுமில்லாமல் அவர் நிம்மதியாகவே இருந்தார். இந்தச் சமயத்தில்தான் அவருடைய தகப்பனாரிடமிருந்து பின்வரும் கடிதம் கிடைத்தது :




பரமசிவத்துக்கு அநேக ஆசீர்வாதம்.

நீ குடியும் குடித்தனமுமாக இருக்க வேண்டுமென்று விரும்பி நாங்கள் உனக்குக் கல்யாணம் செய்து வைத்தோம். எங்களுடைய ஆவல் ஈடேற வில்லை. அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டால் அது நம் குடும்பத்திற்கே அவமானமாகும். அதைப்பற்றி விவரிக்க எனக்குப் பிடிக்கவில்லை. எத்தனை நாட்கள்தான் நீ இப்படியே இருப்பது? எங்கள் மனம் இதனால் மிகவும் வேதனை யடைகிறது. ஆகவே, நாங்கள் ஒரு தீர்மானம் செய்திருக்கிறோம். அதாவது, அக்கா சாவித்திரியின் பெண் முத்துலக்ஷ்மியை உனக்குக் கலியாணம் செய்து வைத்துவிடுவது என்ற முடிவிற்கு நாங்கள் வந்திருக்கிறோம். வேறு வெளியிடத்திலிருந்து உனக்குப் பெண் கிடைக்கும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஏனெனில், 'அந்தச் சனியன்கள்' இல்லாததும் பொல்லாததும் சொல்லிக் கலைத்துவிடும். முத்துலக்ஷ்மி நம் வீட்டுக் குழந்தை. காதும் காதும் வைத்தாற்போல் கலியாணத்தை முடித்துவிடலாம். சாவித்திரி வயதுவந்த பெண்ணை வைத்துக்கொண்டு மிகவும் கஷ்டப்படுகிறாள். அவளுடைய பெண்ணை நீ கல்யாணம் பண்ணிக் கொண்டால் ஒரு பெரிய புண்ணியத்தைச் செய்தவனாவாய். நான் நிச்சயம் செய்துவிட்டேன். தேதியும் குறிப்பிட்டாகிவிட்டது. உடனே புறப்பட்டு வா!

உன் அப்பா,

கோமடீசுவரய்யர்.

இந்தக் கடிதத்தைப் படித்த பிறகு வழக்கம்போல் பரமசிவத்துக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அந்தப்



'' அடாடா! பாகவதர் ரொம்ப பாவமாகப் பாடுகிறாரே!''

''ஆமாம், பாவம்! பாட்டின் இரண்டாவது அடியை மறந்து விட்டு, முதல் அடியையே உருக்கமாகப் பாடிக் கொண்டிருக்கிறார்!''

பெண்ணை அழைத்துக்கொள்ள முடியாதபடி அவர்கள் குடும்பத்திற்கு என்ன வந்துவிட்டது என்றும் அவரால் கண்டு பிடிக்க முடியவில்லை. அதைப் பற்றிப் பெற்றோர்களைக் கேட்கவும் அவருக்குத் தைரியமில்லை. இப்படியும் அப்படியுமாகச் சில நாட்கள் தவித்து விட்டுக் கடைசியில் தப்பாவின் விருப்பப்படி அவர் முத்துலக்ஷ்மியை மணந்தார்.

பரமசிவத்தின் பெற்றோர்கள் எங்கே அந்தச் சனியன்கள்' வந்து சண்டை பிடிக்குமோ, அல்லது ஜீவனாம்சத்திற்கு இழுக்குமோ என்று உள்ளூற பயந்து கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் இந்த விவரங்களைக் கேட்டதும் தாங்களாகவே ஒதுங்கிவிட்டனர். ஏதோ ஒரு சுய காரியத்தை வைத்துக்கொண்டு பெண் வேண்டாமென்று தள்ளி வைப்பவர்களிடம் சண்டை போட்டுப் பெண்ணைக் கொண்டுபோய் விடுவதால் என்ன பயன்? அதனால் தங்கள் பெண்ணின் உயிருக்கே ஒருவேளை ஆபத்து வந்தாலும் வரலாம் என்று அவர்கள் அஞ்சினர். அதற்கேற்றாற்போல் தங்கள் குழந்தையைக் கடைசிவரை காப்பாற்றுவதற்கு வேண்டிய சக்தியும் அவர்களுக்கு இருந்தது. எப்படியாவது பெண் உயிருடன் இருந்தால் போதும் என்று பேசாமல் இருந்துவிட்டனர்.

பரமசிவத்தின் தாயார் ஒரே காரணத்தை வைத்துக் கொண்டு இந்த இரண்டாவது கலியாணத்திற்கு ஏற்பாடு செய்தாள். அவள் பேத்தி முத்துலக்ஷ்மிக்காகப் பார்க்காத வரன்கள் இல்லை. எதுவும் பிடிபடவில்லை. இதற்கு மத்தியில் பெண்ணுக்கு வயதாகி விட்டது. என்ன செய்வதென்று யோசித்த பரமசிவத்தின் பெற்றோருக்கு ஒரே வழி தான் தோன்றியது. ஏதாவது ஒரு காரணத்தை வியாஜமாக வைத்துக்கொண்டு பரமசிவத்தின் முதல் மனைவியைத் தள்ளி வைத்துவிட வேண்டும்; தன் பேத்தியை இரண்டாந்தாரமாகப் பிள்ளைக்குக் கல்யாணம் செய்து வைத்துவிட வேண்டும் என்பதுதான் அந்த வழி. பரமசிவமும் அதற்கு இணங்கிவிட்டார்.

ஆறுமாதங்களுக்கெல்லாம் முத்துலக்ஷ்மி பரமசிவத்துடன் குடித்தனம் செய்ய வந்தாள். வருஷங்கள் பல ஓடின. குழந்தைகள் பிறந்தன. இந்த நாட்களில் எங்கோ ஓர் ஊரில் கலியாணம் செய்தும் கன்னியாகவே இருக்கும் தன் முதல் மனைவியைப் பற்றிப் பரமசிவம் நினைப்பதுண்டா என்று கேட்டால், அதைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. அதுவும் முத்துலக்ஷ்மியின் அன்பில் வேறு எதையும் நினைப்பதற்கு அவருக்கு நேரமேயில்லை. எங்கே தன் புருஷன் 'அந்தச் சனியனை' நினைத்துக் கொண்டுவிடப் போகிறாரோ என்பதற்காகப் பயந்து பயந்து, விழுந்து விழுந்து அல்லவா அவள் உபசாரம் செய்துகொண்டிருந்தாள்?

ஆனாலும் காலமானது பல கஷ்டங்களைப் பரமசிவத்தின் தலையில் சுமத்தியது. நாளுக்கு நாள் எல்லோருடைய ஆதரவும் குறைந்துவந்தது. புருஷன் பெரிய உத்தியோகம் செய்யவில்லையென்று மனைவி முணுமுணுத்தாள். பேத்தி மாட்டுப்பெண் என்று ஆனதும் பரமசிவத்தின் தாயார் மாமியாருடைய அதிகாரத்தைப் பிள்ளையிடம் காண்பித்தாள். சகோதரி தன் குடும்பத்தைத் தம்பி ஆதரிக்கவில்லையென்பதற்காக மனத்தாங்கல் அடைந்தாள். குழந்தைகள் தாயாருடன் சேர்ந்து கொண்டு, 'அதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லை' என்று கண்ணீர் வடித்தன. சொற்ப சம்பளத்தில் குடும்பச் செலவு போக மீதமானதைப் பாங்கியில் போட்டு வைத்திருந்து, தன்னுடைய அந்தஸ்துக்கு மீறியே பெரிய பெண்ணுக்குக் கலியாணம் செய்து வைத்தார். இவ்வாறு கஷ்டம் அதிகரித்துக் கொண்டுவந்த காலத்தில்தான் தம்முடைய முதல் மனைவி மதுரத்தைப் பற்றிய ஞாபகம் அவருக்கு வந்தது. தனக்

குத் தெரிந்தவர்களிடமெல்லாம் அவளைப் பற்றி விசாரித்தார். அதிலிருந்து கிடைத்த தகவல் வருமாறு :—

மதுரத்தின் பெற்றோர்கள் ஒருவர் பின் ஒருவராக இறந்துவிட்டனர். அவர்களுக்குப் பிறகு அவள் தன் சகோதரர்களிடம் இருந்தாள். ஆனால், சகோதரர்களைப் போலவே சகோதரர்களின் மனைவிமார்களும் இருப்பார்களா? அவர்கள் தன்னிடம் சரியாக நடந்து கொள்ளாமற் போகவே அவள் மீண்டும் தான் பிறந்த கிராமத்திற்கே வந்து சேர்ந்தாள். அங்கே தன் தகப்பனார் தன்னுடைய செலவுக்காக எழுதி வைத்திருந்த பணத்தைக் கொண்டு அவள் காலம் தள்ளி வந்தாள். மனக்கஷ்டத்தினால் அடிக்கடி அவள் நோய்வாய்ப்பட நேர்ந்தது. இருந்தாலும் அவள் தன்னைத் தனியாகவே இருந்து வந்தாள்.

இந்த விவரங்களைக் கேட்டதும் பரமசிவத்தின் மனம் வெடித்து விடும்போலிருந்தது. அவளைப் போய்ப் பார்த்து அழைத்து வருவதா, அல்லது மாதா மாதம் கொஞ்சம் பணம் அனுப்புவதா என்று தான் கணக்காக யோசித்தார். எல்லாவற்றுக்கும் அவமானம் குறுக்கிட்டது. இத்தனை நாட்கள் எட்டிப் பார்க்காமல் இருந்துவிட்டு, ஒரு கடிதம் கூட எழுதாமலிருந்துவிட்டு, திடீரென்று போய் நின்றால் நன்றாயிருக்குமா? அவள் தான் தன்னை எப்படி வரவேற்பாள் ?


மேலும் இப்பொழுது அவளுக்குக் குறைந்த பட்சம் நாற்பது நாற்பத்திரண்டு வயதாவது இருக்கும். கவலையினால் தலை நரைத்து உடல் இளைத்துக் கிழவி போல் காணப்படுவாள். தன்னுடைய இளமையைப் பாழ்படுத்திய பாவியைக் கண்டால் அவள் சும்மா விடுவாளா ?

இதே யோசனையில் ஒன்றும் புரியாமல் பரமசிவம் தவித்துக் கொண்டிருந்தபோது தான் மீனுவின் கணவன் வீட்டிலிருந்து அந்த மிரட்டல் கடிதம் வந்தது. அவளுடைய கலியாணத்திற்காக வாங்கிய கடனே இன்னும் தீர்ந்தபாடில்லை. விஷயம் இப்படியிருக்க, சம்பந்தி வீட்டார் தங்கள் பிள்ளையின் மேற்படிப்புக்கான செலவை மாமனாராகிய பரமசிவம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், இல்லையென்றால் பெண் பிறந்த வீட்டிலேயே யிருக்க வேண்டியது தான் என்றும் எழுதி யிருந்தார்கள். இதைப் படித்த பரமசிவத்தின் மனோ நிலை எப்படி இருக்கும்? தான் செய்த பாவத்தின் பலன் தான் அந்த ரூபத்தில் வந்திருக்கிறது என்று அவர் கருதினார். அப்போது அகாரணமாக நாம் ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுத்தோம். இப்போதோ அவர்கள் நம் பெண்ணின் வாழ்க்கையைக் கெடுக்கப் பார்க்கிறார்கள். அவர்களுடைய இஷ்டப்படி மாப்பிள்ளையின் மேற்படிப்புக்கான செலவை மேற் கொண்டால் பெண் வாழ இடமுண்டு. இல்லாவிட்டால் இல்லை'

4

இதே கவலையுடன் பரமசிவம் மறுநாள் ஆபீஸுக்குக் கிளம்பியபோது, தபாற்காரன் அவரிடம் ஒரு கவரைக் கொண்டு வந்து கொடுத்தான். அதைப் பிரித்துப் படிக்கத் தொடங்கியதும் அவருடைய கண்கள் ஆச்சரியத்தினால் விரிந்தன; துக்கத்தினால் கண்ணீர் சொரிந்தன; அவமானத்தால் அவருடைய தலை தரையை நோக்கிற்று.

அந்தக் கடிதத்தை அவருடைய முதல் மனைவி மதுரம் எழுதி யிருந்தாள். என்ன எழுதி யிருந்தாள்? யாரும் எதிர்பாராத விதமாக ஒரு பெண்ணின் வாழ்க்கை



பையன் :—அப்பா, இந்தக் கணக்கைச் சொல்லிக் கொடு! ஒரு ஸ்திரீக்கு ஒரு படி உளுந்து அரைக்கக் கால் மணி நேரம் ஆனால் இரண்டு ஸ்திரீகள் அரைப் படி உளுந்து அரைக்க எவ்வளவு நேரம் ஆகும்?

தகப்பனார் :— ஏண்டா! இது கூடவா. தெரியாது? இரண்டு ஸ்திரீகள் சேர்ந்து அரைத்தால் கட்டாயம் பாதி நாளைக்குக் குறையாமல் ஆகும்!

விளக்கை அந்தக் கடிதத்தில் அவள் ஏற்றி வைத்திருந்தாள். கடிதம் வருமாறு:—

நமஸ்காரம். நான்தான் அபாக்கியவதி மதுரம். என்னைப் பற்றி ஒன்றும் சொல்லிக் கொள்ள நான் விரும்பவில்லை. ஏதோ இனம் தெரியாத நோயினால் பீடிக்கப் பட்டு இன்றோ நாளையோ என்று நான் இருக்கிறேன். தங்களுடைய சம்பந்திகள் என் மூத்த சகோதரனுக்குத் தெரிந்தவர்கள். அவன் மூலம் ஏதோ ஒரு காரணத்திற்காக அவர்கள் தங்கள் பெண்ணை அழைத்துக் கொள்ள மறுக்கிறார்கள் என்று அறிந்தேன். அந்தக் காரணமும் எனக்குத் தெரியும். என் தகப்பனார் என் பேரில் எழுதி வைத்திருக்கும் ரூபாய் பத்தாயிரம் பாங்கில் இருக்கிறது. அதை மீனுவின் வாழ்விற்காக உங்கள் பெயருக்கு மாற்றியிருக்கிறேன். அந்தப் பணத்தைக் கொண்டு நீங்கள் மாப்பிள்ளையைப் படிக்க வைக்கலாம். அதன் மூலம் என்னைப் போல் உங்கள் பெண்ணும் வாழா வெட்டியாகாமல் தடுக்கலாம். தயவு செய்து என்னுடைய உதவியை ஏற்றுக் கொள்ள வேணும்.

இப்படிக்கு,
மதுரம்.

இந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததும் பரமசிவத்தின் உடல் கிடுகிடு வென ஆடியது. பலவிதமான உணர்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக அவருடைய உள்ளத்தில் மோதி அவரை உலுக்கி எடுத்தன. யோசிக்கவும் திராணற்ற நிலையில் அவர் அப்படியே படுக்கையில் சாய்ந்தார்.


ஆஹா! நான் செய்த பாவம்தான் அவ்வளவு பெரியது! அதற்குப் பதில் இவ்வளவு தாராள மனப்பான்மையா? தன்னைப்போல இன்னொரு இளம் பெண்ணின் வாழ்க்கையும் பாழாகி விடக் கூடாதென்பதில் அவளுக்குத் தான் எவ்வளவு கவலை! சந்தேகமேயில்லை; அவள் தெய்வப் பிறவிதான்!

இப்படியெல்லாம் என்னவெல்லாமோ எண்ணிப் பொருமிக் கொண்டிருந்த பரமசிவம் அன்று பூராவும் படுக்கையை விட்டு எழுந்திருக்கவே இல்லை. அவருடைய நிலையும் உடலும் நிமிஷத்துக்கு நிமிஷம் கனத்தது. சுரம் வேறு வந்து விட்டது—மகாபாவியான நான் அந்தப் புண்ணியாத்மாவை எப்படிப் பார்ப்பது? — மீண்டும் அதே பிரச்னை. திரும்பத் திரும்ப அதே கேள்வியைக் கேட்டுக் கொண்டு, 'இன்று போவோம், நாளை போவோம்' என்று நாட்களைத் தள்ளிக் கொண்டே வந்தார்.

கடைசியில் ஒரு நாள் தந்தி — 'மதுரம் காலமானாள்!'

பரமசிவத்தின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகப் பெருகியது. பல வருஷங்களாகத் தன்னால் வதைக்கப்பட்ட ஆத்மா விடுதலை பெற்று விட்டதை எண்ணி எண்ணி அவர் வாய்விட்டுக் கதறினார். தகப்பனார் தந்தியைப் பார்த்து விட்டுக் கதறுவதைக் கண்டு தாயும் மகளும் 'என்ன, என்ன?' என்று கேட்டுக் கொண்டே ஓடி வந்தனர்.

அவர்களிடம் தந்தியைப் போட்டுவிட்டுப் பரமசிவம் ஸ்நானம் செய்வதற்காகக் கொல்லைப்புறம் சென்றார். தன்னுடைய வாழ்நாளில் மதுரத்துக்காக அவர் செய்த காரியம் இது ஒன்றே ஒன்றுதான்!



மாயப் பெண்

பி.எஸ். மணி

ஒரு காட்டில் மந்திரவாதி ஒருவன் இருந்தான். அவன் காட்டில் பல அக்கிரமங்களும், அட்டூழியங்களும் புரிந்து வந்தான். அவனை வனத்திலுள்ள வேடர்கள் அனைவரும் மிகவும் வெறுத்து வந்தனர். அக் காட்டுக்குப் புதிதாக ஒரு சாமியார் வந்து சேர்ந்தார். அவர் வேடர்கள் அனைவருக்கும் பேருதவி புரிந்து வந்தார். இதையறிந்த மந்திரவாதிக்குப் பொறாமைத் தீ கொழுந்துவிட்டு எரிந்தது.

ஒரு நாள் மந்திரவாதியும் சந்நியாசியும் காட்டில் பேசிக்கொண்டே சென்றனர். வழியில் கிடந்த ஒரு மாய மோதிரம் பளிச்சுப் பளிச் சென்று 'டால்' வீசி அவர்கள் கண்களை மயக்கியது. அந்த மோதிரத்தை மந்திரவாதி கையில் எடுத்துக் கொண்டான். சாமியார் அது தன்னுடையது என்று வாதாடினார். கடைசியில் இருவருக்கும் சண்டை வந்து அம் மோதிரத்தை யார் வைத்துக் கொள்ளுவது என்று தெரியாமல் போய்விட்டது. பிறகு இருவரும் அந்தத் தேசத்து இளவரசனிடம் சென்றார்கள்.

"நான் காட்டில் சாமியாருடன் செல்லுகையில் இந்த விலையுயர்ந்த மோதிரத்தைக் கண்டெடுத்தேன். இது எனக்குத்தானே சொந்தம்? இதை அவர் தனக்குத் தர வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கிறார்!" என்றான் மந்திரவாதி.

"நான் சில நாட்களுக்கு முன் காட்டில் செல்லுகையில் என்னுடைய மாய மோதிரத்தைத் தொலைத்துவிட்டேன். அதைக் கண்டெடுத்த மந்திரவாதி அது தன்னுடையது என்று அடம் பிடிக்கிறார்!" என்றார் சாமியார்.

பாலவர்மன், "மந்திரவாதியே! உனக்கு இந்த மோதிரத்தினால் ஏதாவது பயன் உண்டா?" என்று கேட்டான். மந்திரவாதி அந்த மோதிரத்தை வாங்கித் தேய்த்துப் பார்த்தான்; ஒரு அதிசயமும் நிகழவில்லை.

உடனே இளவரசன் மோதிரத்தை வாங்கிச் சாமியாரிடம் கொடுத்தான். பெரு மகிழ்ச்சியுடன் அந்த மோதிரத்தைப் பெற்றுக் கொண்ட சாமியார் அதைத் தடவி இளவரசனைத் தங்கச் சிம்மாசனத்தில் உட்கார வைத்தார். அப்புறம் அரசன் அடைந்த ஆனந்தத்துக்குக் கேட்கவா வேண்டும்?

இதைக் கண்ட மந்திரவாதிக்குக் கோபம் தாங்க முடியவில்லை. அவன் தனது மந்திரக் கோலினால் இளவரசனின் முகத்தைக் கோர வடிவமாக்கி விட்டு மறைந்து விட்டான். இதனால்



இளவரசன் அடைந்த வருத்தம் கொஞ்ச நஞ்சமல்ல. உடனே அருகிலிருந்த சந்நியாசி, "இளவரசே! உன்னை யார் அன்புடன் மணக்க முன் வருகிறார்களோ, அவர்களால் உன்னுடைய கோர வடிவம் நீங்கும்" என்று ஆறுதல் கூறிவிட்டுச் சென்றார்.

இளவரசனின் திருமணச் செய்தி நாடு பூராவும் ஒரு கண நேரத்தில் பரவியது. இளவரசனை மணக்கப் பல பெண்மணிகள் முன் வந்தனர். அவர்கள் அனைவரும் அரசகுமாரனின் கோர உருவத்தைக் கண்டதும் மூலைக்கொருவராகத் தலைதெறிக்க ஓட ஆரம்பித்தனர். ஒரே ஒரு பெண் மாத்திரம் அசையாது அங்கேயே நின்று கொண்டிருந்தாள். அவளைக் கண்ட இளவரசன் பெரு மகிழ்ச்சி எய்தினான். தனது கோர உருவம் நீங்கி விடும் என்ற சந்தோஷத்தில் அவன் அந்தப் பெண்ணை நோக்கி, "பெண்ணே! என்னை அன்புடன் மணக்க நீ சம்மதிக்கிறாயா?" என்று கேட்டான்.

அப்பெண் ஒன்றும் பதில் பேசாது நின்றாள். இளவரசன் நாணத்தினால் அவள் தன் விருப்பத்தை வெளியிடத் தயங்குகிறாள் என்று கருதிப் பணியாட்களை உடனே திருமண வைபவத்துக்கு ஏற்பாடு செய்ய உத்தரவிட்டான். அரசனுடைய உத்தரவை உடனே நிறைவேற்றத் தொடங்கி விட்டார்கள் அரண்மனைச் சேவகர்கள்.

இந்தச்சமயத்தில்தான் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. யாரோ ஒருவர் அரண்மனைக்குள் ஓடோடியும் வந்தார். அவர் வேறு யாருமல்ல; சாமியார்தான்! அவர் ஓர் அழகிய பெண்ணை அழைத்துக் கொண்டு அரண்மனைக்குள் விரைவாக வந்தார். இளவரசனின் அருகில் வந்து, "இளவலே! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? உன் கோர உருவம் என்றும் நிலைத்திருக்கவா இப்பெண்ணை மணக்க முற்பட்டாய்? இவள் யார் தெரியுமா?" என்று கூறிவிட்டுத் தமது மந்திர மோதிரத்தினால் அப் பெண்ணைத் தடவினார்.

என்ன அதிசயம்! அப்பெண்ணுக்குப் பதிலாக இளவரசனைச் சபித்த மந்திரவாதி அங்கே நின்றான்.

"அரசே! உன்னை என்றும் கோர உருவத்துடன் வாழ வைக்க இந்த மந்திரவாதி சதி செய்தான். அன்பில்லாமல் உன்னை அடைய முற்பட்ட மந்திரவாதியின் ஆசை இப்பொழுது நிராசையாய்ப் போய் விட்டது!" என்று சாமியார் கூறினார்.

இதைக்கேட்ட அனைவரும் ஆச்சரியத்தால் வாயடைத்துப் போய் விட்டனர். மந்திரவாதி வெட்கத்தால் அங்கிருந்து விரைவில் மாயமாய் மறைந்து விட்டான்.

பிறகு சாமியார் தாம் அழைத்து வந்த அழகியைக் காட்டி, "இப்பெண் உன்னை அன்புடன் மணக்க முன் வந்திருக்கிறாள். இவளை மணந்தால் உன் கோர உருவம் மறையும்" என்றார்.

அன்றே இளவரசனுடைய திருமணம் சிறப்பாக நடந்தேறியது. அவனுடைய கோர உருவமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. சாமியார் அவர்களை ஆசீர்வதித்துவிட்டுக் காட்டை நோக்கி நடந்தார்.


சிறந்த சலவை ...
இந்த
OK
கொண்டு தான்!
OK

உங்கள் (தேக) ஆரோக்கியத்தை

பருகுங்கள்



போர்ன்-வீடா பாலை விடச் சிறந்தது, அதில் சக்தி தரும் விடமின்களும், கால்ஷியமும் அடங்கியுள்ளன. விளையாட்டுக்காரருக்கும் பலஹீனருக்கும் ஒருங்கே இன்றியமையாதது. குழந்தைகள் அதன் சாக்லேட் மணத்தை விரும்புவர். காலையிலும் இரவிலும் சூடாகவோ அல்லது குளிர்ந்த பானமாகவோ, ஒரு கிளாஸ் பாலுடன் இரண்டு தேக்கரண்டியளவு சேர்த்துப் பருகவும்.

Cadbury
THE TREE OF HEALTH

—ஆரோக்ய விருக்ஷம்—



L. CFY 2 TAM

காட்பரீஸ்

போர்ன்-வீடா

கால்ஷியமும், ஏ & டி விடமின்களும் நிறைந்தது

காட்பரி-ப்ரை (இந்தியா) லிமிடெட்

த.பெட்டி நெ. 1417 பம்பாய்-தபால் பெட்டி நெ 251 கல்கத்தா-தபால் பெட்டி நெ. 1725 மதராஸ்

தோழியின் கடிதம்

துரோணன்

கும்பகோணம்,
ஆடி மீ 16வ

அன்புள்ள லலிதாவுக்கு,

வெகு நீண்ட நாட்களுக்குப் பின் இந்தக் கடிதத் தொடர்புகளாவது நம்மிடையே ஏற்பட்டது குறித்து மகிழ்கிறேன். இந்தக் கடிதம் எவ்வளவு ஆச்சரியத்துடனும், ஆனந்தத்துடனும் எழுதுகிறேன் என்பதை என்னால் விவரிக்க முடியவில்லையடி!

போனவாரம் உன்னையும் உன் தகப்பனாரையும் எழும்பூர் ஸ்டேஷனில் எதிர்பாராதவிதமாக மூன்று வருஷங்களுக்குப் பின் சந்தித்தேன் அல்லவா? அந்தச் சந்திப்பை யொட்டிய இந்தக் கடிதத்தை அன்றைய தினமே உனக்கும் எழுதிவிட வேண்டு மென்பது என் எண்ணம். ஆனால் ஏனோ நாலைந்து தினங்களாக அது முடியாமல் போய்விட்டது.

உன்னுடைய முழு வாழ்க்கையையும் பற்றி விசாரித்து அளவளாவ வேண்டுமென்பது என் ஆசை. பாழும் ரயில் சீக்கிரமாகவே வந்து உன்னையும் என்னையும் பிரித்துத் தொலைத்துவிட்டது. ஒவ்வொரு தினம் மணிக்கணக்கில் நத்தைபோல் ஊறிக்கொண்டு வந்து நம் கழுத்தை யறுக்குமே—அன்றைக்கென்று அதற்கென்ன அவ்வளவு அவசரம் வந்துவிட்டதோ?

போகட்டும், அப்பொழுதிருந்த அரைமணி சாவகாசத்திற்குள் உன்னுடன் சரியாகவாவது பேச முடிந்ததா? அதுவுமில்லை. 'தொண தொண' வென்று சுற்றிக்கொண்டு என் கணவரின் ஓயாப் படலம் வேறு! விஷமக் கள்ளியான உன்னிடம் என்னென்ன வெல்லாமோ கேட்க வேண்டுமென்று துடித்தேன். நாம் பள்ளியில் படித்தபொழுது இருந்த விஷமத்தனத்தில் அரைக்கால் பாகம் கூட உன்னிடம் குறையவில்லை யென்பதை மட்டும் கண்டேன்.

அதிருக்கட்டும், பல வருஷங்களாகப் பழகியதன் பலன் எனக்குக்கூடச் சொல்லாமல் கலியாணம் செய்துகொண்டாய். உன்னை மணந்த பொறுமைசாலி யார்; உன்னுடைய ஆக்ஞைகளுக்குத் தினமும் அவர் எவ்வளவு தோப்புக்கரணம் போடுகிறார்—இதையெல்லாம் நான் அரைமணி அவகாசத்தில் தெரிந்து கொள்ள முடியாமலே போய்விட்டது!

அது தான் போகட்டும்—இந்தப் புதுச் செய்தியொன்றை என் என்னிடம் சொல்லாமல் விட்டாய்? ஏ கள்ளி! அன்று ஸ்டேஷனில் 'ஏதோ' ஒருமாதிரியாக என்னைப் பார்த்துச் சிரித்துவிட்டு, 'ஒன்றுமில்லை' யென்று மழுப்பிவிட்டதன் பொருள் இப்பொழுதுதான் புரிகிறது! உன் தகப்பனார் மட்டும், பேப்பர் படிப்பதில் ஊக்கமில்லாமலிருந்திருந்தால் எல்லாம் அப்பொழுதே வெட்ட வெளிச்சமாகியிருக்கும்!

லலிதா! நம் கன்னி வாழ்க்கையில் எவ்வளவோ புருஷ ஜென்மங்களைக் காண்கிறோம். நமக்கென்று புருஷன் வாய்த்த பின் நாம் யாரையும் நிமிர்ந்து கூடப் பார்ப்பதில்லை; கூடவும் கூடாது—இது தான் ஸ்திரீ ஜென்மங்களுக்கு இட்ட கட்டளை. ஆனால் இந்தப் புருஷ ஜென்மங்களுக்குத்தான் எவ்வளவு கொடூர சித்தம்? அவர்களது விழிகள் மட்டும் எப்படித்தான் துணிந்து வட்டமிடுகின்றனவோ!

அன்றைக்கு நீ ரயிலேறியபின் 'இவர்' என்னிடம் வாயே திறக்கவில்லை. இவர் முகத்தில் அன்று வழிந்த எந்நாளுமிராத அசட்டுக் களையின் அர்த்தம் எனக்கு ஒன்றுமே பிடிபடவில்லை. அதன் பின்னர் தான் 'இவரது' பூர்வோத்திரம் தெரிந்தது! உன்னுடைய அந்த 'மழுப்ப'லின் அர்த்தமும் அப்பொழுதுதான் புரிந்தது!

நீ இருக்கவேண்டிய இந்த ஸ்தானத்தில் நானிருக்கிறேன். பாழும் 'செவ்வாய் தோஷம்' என்று ஒன்று இவருக்கு இல்லாமலிருந்தால் 'அன்றைய தினமே' உனக்கும் இவருக்கும் நிச்சயமாகியிருக்க வேண்டியதுதானே?—இதை ஒருவாறு இவர் தெரிவித்தார். நீ என்னுடைய அன்பார்ந்த தோழி யென்பதையறிந்ததில் இவருக்கு அசாத்திய மகிழ்ச்சிதான்.

லலி! உன்னிடம் சொல்லாமல் நான் வேறு யாரிடம் சொல்லப் போகிறேன்? 'இவரை'ப் பொறுத்த வரையில் எனக்கு யாதொரு விதமான குறைவுமில்லை; சந்தோஷமாகவே இருக்கிறேன்.

உன் க்ஷேமங்களுக்கும் நான் குறிப்பிட்டிருக்கும் கேள்விகளுக்கும் தகுந்த பதில் அளிப்பாயென்று எண்ணுகிறேன்.

உன் அன்புமிக்க தோழி, சரளா.

பம்பாய், ஆடி மீ 19உ

பிரியமுள்ள சரஸாவுக்கு,

உன் அன்பான கடிதம் கிடைத்தது. அத்துடன், பெரும் புரட்சியையும் உண்டாக்கி விட்டது! 'புரட்சி' யென்றதும் பிரமாதமாகப் பயப்பட்டு விடாதே!

நான் மாடியில் ஏதோ காரியமாக இருந்தேன். கீழே தபால்காரனிடமிருந்து 'இவரே' உன் கடிதத்தை வாங்கிக் கொண்டு பூனைபோல் வந்திருக்கிறார்.

சரசு! 'புருஷர்கள்' விஷயமாக நீ குறிப்பிட்டிருப்பதெல்லாம் சரிதான். ஆனாலும், நாம் எல்லாவற்றையுமே ஒரே நிலையில் வைத்துப் பார்க்கவும் கூடாது தான். உலகத்தில் எல்லாமிருக்கும். உன்னைப்போலவே உன் தோழியும் பாக்கியசாலிதான் என்பதைக் கேட்பதில் உனக்கு ஆனந்த முண்டாகிறதல்லவா? ஆனால், நீ குறிப்பிட்டிருப்பது போல், நான் விஷமக்காரிதான். ஆனால், அந்த விஷயத்தில் 'இவரும்' எனக்குக் கொஞ்சங்கூடச் சளைத்தவரில்லை! உனக்கென்ன தெரியும், இவர் இங்கே அடிக்கும் 'லூட்டி'? நீ யானால், 'எவ்வளவு தோப்புக்கரணம் போடுகிறார்' என்று கேட்கிறாய்? 'பொறுமை சாலி' யென்று வேறு நற்சாட்சிப் பத்திரம் கொடுக்கிறாய்! ஐந்து நாட்களுக்குமேல் பிறந்தகத்தில் இருந்து விட்டால் பொறுப்பதில்லை; சாயந்திரம் ஆபீஸ் விட்டதும் ஒரு பீச்சுக்கோ, அல்லது ஒரு கச்சேரிக்கோ போய்விட்டு வந்தாரென்பதில்லை. நாண் கயிற்றை விட்டு அம்பு கிளம்புவதுபோல் நேரே ஐந்து மணிக்கு ஆபீசை விட்டுக் கிளம்பி வீட்டில் வந்து நிற்கிறார். அக்கம் பக்கத்திலுள்ள தோழிகளிடம் ஒரு ஐந்து நிமிஷம் பேசிக் கொண்டிருப்பதுகூட இவருக்குப் பொறுக்கவில்லை. இவரா பொறுமைசாலி?

போனவாரம் நான் எழும்பூரில் ரயிலேறியபின், உன் கணவரின் 'அசட்டுக் களை'யான முகத்தைப் பற்றி விவரித்திருக்கிறாயல்லவா? அதை நான் எழுத்துருவத்தில் மாத்திரம் பார்த்து அனுபவிக்கவில்லை; மானசீகமாக நினைத்து மகிழவுமில்லை. நானும் இங்கே நேரே கண்டு அனுபவிக்கிறேன். இதை நீ யறியும்பொழுது உன் முகத்திலும் அசடு வழியும் என்பதில் சந்தேகமில்லை.


"கும்பகோணம் போஸ்ட்மாஸ்டர் சிவராமய்யர் பெண் 'சரஸா'தானே உன் தோழி?—" இந்த மாதிரி யொரு கேள்வியை முழு அசட்டுக் களையுடன் 'இந்த மனிதர்' புதிர் போட்டாற்போல் கேட்டபொழுது எனக்கு எப்படி யிருந்திருக்குமென்பதை நீயே ஊகித்துக்கொள்!

உன்னைப் பார்க்க வந்து, எல்லாமாகி, நிச்சயமாகும் தருணத்தில்தான் இவருக்கும், இவரது ஜனங்களுக்கும் உன்னுடைய அன்பான 'செவ்வாய் தோஷம்' ஞாபகம் வந்ததோ?

ஏ கள்ளி! இந்தப் 'புரட்சி'யினால் உனக்கொன்றும் அதிர்ச்சி யிருக்காதே?

உன் அன்பான தோழி, லலிதா.

கெட்டி மேளம்!



கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

263. இறந்த நாளே இருந்த நாள்!

விபீஷணனைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அனுமன் நன்றாய்ச் சொல்லி விட்டான்.

சேர்த்துக் கொள்ளத்தான் வேண்டும் என்று பட்டுவிட்டது ராமனுக்கும்.

'நீதியை விட்டு விலகக்கூடாது என்ற காரணத்தினால் அல்லவா இந்த நிர்கதியான நிலைக்கு வந்திருக்கிறான் விபீஷணன்' என்று இளகிவிட்டது ராமனுடைய மனசு.

இந்த இளகிய நிலையில் 'உலகத்தில் எங்கிருந்தால் என்ன,—அடைக்கலம் புகுகிறவர்கள் நிலை, அடடா! எவ்வளவு வருந்தத்தக்க நிலை' என்று விரிவாய்ப் பரந்தோடுகிறது உள்ளம்.

இன்றுவந் தானென்றுண் டோ,
  எந்தையை யாயைமுன் னைக்
கொன்றுவந் தானென்றுண் டோ,
  புகலது கூறுகின் றான்,—
தொன்றுவந் தன்புபே ணும்
  துணைவனும் அவனே,பின் னைப்
பின்றுமென் றாலும்நம் பாற்
  புகழன்றிப் பிறிதுண்டா மோ?

[இன்று வந்தான் என்று உண்டோ: முன் பின் தெரியாதவன் ஆயிற்றே இப்போது தானே நம்மிடம் வந்தான் என்று எண்ணலாமோ; எந்தையை யாயை முன்னை: நமக்குத் தந்தையானவனை, தாயானவனை, தமையன் ஆனவனை; கொன்று வந்தான் என்று உண்டோ: கொன்றுவிட்டு வந்திருக்கிறான் என்று எண்ணலாமா—யார் இப்படி வருகின்றான்—'நீ தான் அடைக்கலம்' என்று வருகிறவன் தான்— புகலது கூறுகின்றான்: தொன்று வந்து அன்பு பேணும் துணைவனும் அவனே: இந்த ஜன்மம் மாத்திரம் அல்ல ஏதோ பூர்வஜன்மத்தில் இருந்தே நம்மிடம் அன்பு பேணி வரும் துணைவன் என்று சொல்லக்கூடிய ஒருவனும் அவனேதான்—புகலது கூறுகிறவனே — பின்னைப் பின்றும் என்றாலும்: நம்மோடு இதயம் ஒட்டிச் சேர்ந்த பிறகு மாறுபட்டு எதிரியாய்ப் போய் விட்டான் என்று நேர்ந்தபோதிலும்; நம் பால்ப் புகழன்றிப் பிறிது உண்டாமோ: அது காரணமாகவே நம்மை உலகத்தார் புகழத்தான் செய்வார்கள், குற்றம் சொல்ல மாட்டார்கள்.]

குறிப்பு:— ராமன் என்ற பாத்திரத்தில் எவ்வளவு அரிய உணர்ச்சியைக் கம்பர் வைக்கிறார்!

* * *

சிபிச் சக்கரவர்த்தியின் வரலாற்றைக் குழந்தைப் பருவத்திலேயே கேட்டுவிடுகிறோம். பின்னர் என்றைக் காவது மறக்க முடிகிறதா அதை! ஏன் முடியவில்லை?

காட்டில் ஏதோ ஒரு புறா இருந்தது. அதை அம்பினால் ஒரு வேடன் எய்தான். காயம்பட்ட புறா அப்படியே பறந்தது. ஒரு ஜன்னலுக்குள் புகுந்தது. சிபிச்சக்கரவர்த்தியின் மடியில் விழுந்தது. அவ்வளவுதான்.

வேடன் வந்து புறாவைக் கேட்டான். வேட்டைத் தொழிலின் நீதிகளைச் சொன்னான். அதன்படி புறாவை வேடன் கையில் கொடுக்க வேண்டியதுதான்.

அந்த நியாயத்தை ஒப்புக் கொண்டான் சிபிச்சக்கரவர்த்தி. ஆனாலும் புறாவின் மேல் உண்டான அனுதாபத்தினால் புறாவைக் கொடுத்துவிட மனமில்லை. புறாவுக்குச் சமானமான எடையுள்ள தன் தசையை அறுத்துக் கொடுக்கச் சம்மதித்தான். மாயப் புறாவாய் இருந்த காரணத்தால் எவ்வளவு அறுத்துக் கொடுத்தும் போதவில்லை. அதன்மேல், தானே எதிர்த் தட்டில் ஏறி உட்கார்ந்தான் என்பது வழக்கிலுள்ள கதை.

"இதைச் சிறு பிள்ளைகள் மறக்குமா? வயசானவர்கள் மறப்பார்களா? யார்தான் மறப்பார்கள்!

பிறந்த நாள் முதல் நாம் மறப்ப தில்லைதானே !'' என்கிறான் ராமன்.

‘பிறந்தநாள் தொடங்கியா ரும்,—
துலைபுக்க பெரியோன்பெற் றி—
மறந்தநாள் உண்டோ, என் னைச்
சரண்என்று வாழ்கின்ற னைத்
துறந்தநாள் இறந்தநா ளாம்;
துன்னினன் சூழ்ச்சியா லே
இறந்தநாள் அன்றேஎன் றும்
இருந்தநாள் ஆவ’தென் றான்.

[துலைபுக்க பெரியோன் பெற்றி : புறவுக்குப் பதிலாகத் தராசின் எதிர்த் தட்டில் ஏறிய சிபிச் சக்கரவர்த்தியின் தன்மையை : என்னைச் சரண் என வாழ்கின்றானை : என்னை அடைக்கலமாக எண்ணி உடன் வாழ்பவனை ; துறந்த நாள் இறந்த நாளாம் : என்றைக்கு அகற்றுகிறேமோ அன்றுதான் நாம் மரணம் எய்திய நாள் ; துன்னினன் சூழ்ச்சியாலே இறந்த நாள் அன்றே : நம்மை அடைக்கலமாக வந்து சேர்ந்தவன் செய்த மோசடியால் நாம் இறப்போமே அந்த நாள்தான் ; என்றும் இருந்த நாள் ஆவதென்றான் : சிரஞ்சீவியாய், நித்தியமாய் நாம் வாழும் நாள் ஆவது, என்றான் ராமன்.]

சிபிச்சக்கரவர்த்தி கதை

ஒரு காலத்தில் ஒரு சக்கரவர்த்தி இருந்தான். மகா வீரன். எத்தனை எத்தனையோ எதிரிகளைப் போரில் வென்று வெற்றிபெற்றவன். அவனுடைய ஆளுகைக்குள் அடங்காத அரசர் இல்லை. அவ்வளவு கியாதி பெற்றவன்.

ஒரு நாள் சாயங்காலம் அரண்மனை மாளிகையின் மாடியில் சாளரத்தின் அடியில் உட்கார்ந்து கொண்டு, சூரிய அஸ்தமனக் காட்சியைப் பார்த்து அனுபவித்துக் கொண்டிருந்தான்.

அந்த வேளை சாளரத்தின் வழியாக ஒரு புறா பறந்து வந்து அப்படியே அவன் மடியில் படுத்துக் கொண்டது. அதன் இதயம் ஒரே துடிப்பாய்த் துடித்துக் கொண்டிருந்தது.

விஷயம் விளங்கவில்லை சக்கரவர்த்திக்கு. இதென்ன அதிசயமாய் இருக்கிறது! புறா என்றால் நம்மைக் கண்டால் பயப்பட அல்லவா செய்யும்? இதன் இதயமோ பயத்தினால் துடித்துக் கொண்டுதான் இருக்கிறது; ஆனாலும் தானாகவே எப்படி நம்முடைய மடியில் ஒரு செல்லக் குழந்தையைப் போல் வந்து படுத்தது! விஷயம் என்னவோ? பார்க்கலாம் என்று அமைதியாய் இருந்தான். கையினால் மெள்ளப் புறாவைத் தடவிக் கொடுத்தான்.


யாரோ ஒரு ஆள் வருகிற சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

வில்லும் கையுமாக வேடன் ஒருவன் வந்து முன்னால் நின்றான். அவனைப் பார்த்து "யாரப்பா நீ?" என்று கேட்டான் அரசன்.

"நான் ஒரு வேடன், தங்கள் மடியில் இருக்கும் புறா என்னுடையது. அதை என்னிடம் தரவேண்டும்'' என்றான் வேடன்.

"புறா எப்படி உன்னுடையது?'' என்று கேட்டான் அரசன்.

"அதை நான்தான் துரத்திவந்தேன். அம்புகொண்டு எய்து இறக்கையின் ஒரு பாகத்தைக் காயப்படுத்தியும் இருக்கிறேன்; அதைத் தாங்கள் பார்த்துக் கொள்ளலாம். இப்படிக் காயப்



படுத்தியும் பின் தொடர்ந்தும் ஒருவன் வருவானுனல் காட்டிலுள்ள புருவாக இருந்தாலும், வேறு பிராணியாக இருந்தாலும் அது அவனுடைய சொத்தாக ஆகிவிடுகிறது. இப்படித்தான் தர்மசாஸ்திரம் கூறுகிறது" என்று சொன்னுன் வேடன்.

அரசனுக்கு மறுத்துச் சொல்ல வழியே தெரியவில்லை.

"சாஸ்திரம் சொல்லுவது உண்மை தான். ஆனுலும் இந்த ஒரு புருவை விட்டு விட்டால் உனக்கு என்ன குறைந்து போகும்" என்று கேட்டான் சிபிச் சக்கரவர்த்தி.

"குறைந்து போகிறது என்பது அல்ல விஷயம். எங்கள் குலத்தவர்கள் என்னை இகழ்வார்கள். ஏமாளி, கோழை என்றெல்லாம் சொல்லுவார்கள். தனக்கான சொத்தைக் கைப்பற்றும் சக்தியில்லாதவன் என்று ரொம்ப ரொம்பப் பழிப்பார்கள். அதை என்னுல்த் தாங்க முடியாது, அரசே!" என்று சொன்னுன் வேடன்.

"அப்படியானல் ஒரு யுக்தி சொல்லுகிறேன்: இந்தப் புருவின் மாமிசம் எவ்வளவு நிறை இருக்குமோ அவ்வளவுக்கு என் மாமிசத்தை அறுத்துத் தருகிறேன், அதைக் கொண்டுபோய்க் காட்டி உன் இனத்தாரைத் திருப்தி செய்து கொள்ளலாம் அல்லவா?" என்ருன் அரசன்.

"அப்படியே செய்கிறேன்" என்று ஒத்துக் கொண்டான் வேடன்.

அரசனும் தராசு, படிக்கல், கத்தி எல்லாவற்றையும் கொண்டுவரச் சொன்னுன். எல்லாம் வந்துவிட்டன.

தராசின் ஒரு தட்டில், மடியில் பதுங்கிக் கிடந்த புருவை மெள்ளத் தூக்கி வைத்தான்.

தன் வேலையாளைக் கொண்டு தன் தொடையிலுள்ள தசையை அறுத்து அந்த மாமிசத்தை எதிர்த் தட்டில் வைக்கச் செய்தான். ஆனுல் எடை ஏறினதாகவே தெரியவில்லை. புரு இருந்த தட்டு அப்படியேதான் தரையைத் தொட்டுக் கொண்டிருந்தது.

'என்னவோ தெரியவில்லை, இருக்கட்டும்; அடுத்த தொடையின் தசையையும் வைப்போம்' என்றுஅதையும் அறுத்து வைத்தான். அதிலும் பிரயோஜனம் இல்லை. புருத்தட்டு மேலே எழவில்லை.

பிறகு இதர உறுப்புக்களையும் அறுத்து வைத்துப் பார்த்தான். பிரயோஜனம் இல்லை.

கடைசியில் வேறு வழியில்லாமல் தட்டில் அப்படியே ஏறி உட்கார்ந்து விட்டான் சிபிச்சக்கரவர்த்தி.

புருவும் வேடனும் மாயமாய் மறைந்து போய் விட்டார்கள். ஆனுல் சங்கு சக்ரதாரியான விஷ்ணுமூர்த்தியும், கங்கையோடு இளம்பிறை சூடிய சிவபெருமானும் வந்து முன் நின்ருர்கள். சிபிச் சக்கரவர்த்தியும் முன்னிலும் சிறந்த உடலும் களையும் பெற்று மூன்ருவது மூர்த்தியாக நின்ருன். தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.



ரொம்ப சரி!

எம். எல். ஏ. (சிபார்க்காக வந்திருப்பவரிடம்):—இந்த விஷயமாக இதற்கு முந்தி யாரையாவது பார்க்கப் போனீர்களா? அல்லது நேராக என்னிடமே வந்து விட்டீரா?

வந்திருப்பவர்:—முதலில் இந்த ஊர்க் கலெக்டரிடம் போனேன்......

எம். எல். ஏ.:— அந்த முட்டாள் என்ன சொன்னுன்?

வந்திருப்பவர்:— அவரை நீங்கள் 'முட்டாள்' என்றது ரொம்ப சரி; என்னை அவர் உங்களிடம் போகச் சொன்னுர்!

நமது இலங்கைக் கடிதம்


பிரிட்டனில் பாரதி விழா

ரஜனி

கொழும்பு, ஆகஸ்டு, 15

இந்தியாவும் பாகிஸ்தானும் சுதந்திரமடைந்த இரண்டாவது ஆண்டு நிறைவு விழா இலங்கையில் இவ்வருடம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீ வி. வி. கிரி தமது வாசஸ்தலத்தில் விசேஷமாக அமைக்கப்பட்டிருக்கும் கொடிமரத்தில் மூவர்ண இந்திய தேசியக் கொடியைக் கம்பீரமாகப் பறக்க விட்டார். பிறகு அவர் ரேடியோவில் சுதந்திர இந்தியாவின் சாதனைகளையும் இலங்கை—இந்தியா கலாசாரத் தொடர்புகளையும் பற்றி ஒரு அருமையான பிரசங்கம் செய்தார். இந்தப் பிரசங்கத்தைக் கொழும்பு ரேடியோ நிலையத்தார் ரிக்கார்டு எடுத்தனர்.

அணுகுண்டு தத்துவத்துக்குப் பதிலாக அஹிம்ஸைக் கொள்கையும் சத்திய நெறியும் தான் உலகத்தைக் கடைத்தேற்றத் தகுந்த சக்திகளென்றும், பகவான் புத்தர், ஏசுநாதர், மகாத்மா காந்தி முதலான பெரியார்கள் உலகத்துக்கு உன்னதமான உபதேசங்களைச் செய்திருக்கிறார்கள் என்றும் அவர்கள் ஜனித்த ஆசியாவிடம்தான் உலகிற்கு வழி காட்டும் சக்தியிருக்கிறதென்றும் ஸ்ரீ கிரி தமது பிரசங்கத்தில் சொன்னார். அன்று மாலை அவர் அளித்த விருந்துக்கு வெளிதேசப் பிரமுகர்களும் இலங்கைப் பிரபலஸ்தர்களும் வந்திருந்து அதைச் சிறப்பித்தார்கள். இரவில் இந்தியர்களுடைய கடைகளிலும் வீடுகளிலும் தீபாலங்காரங்கள் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன.



ஒரு விசேஷத்தை முக்கியமாக இங்கு குறிப்பிட வேண்டும். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் எவ்வளவு தகராறுகள் இருந்த பொழுதிலும் இலங்கையிலுள்ள இந்தியர்கள் தங்களுக்கிடையில் எவ்வித வேற்றுமையுமில்லாமல் ஒத்துழைத்து இரு சுதந்திர தினக் கொண்டாட்டங்களையும் சிறப்பித்தார்கள்.

கனவு பலிக்குமா ?

யாழ்ப்பாண தீபகற்பத்தின் நீண்ட காலக் கனவு பலிக்கும் காலம் வந்து கொண்டு இருக்கிறது. பொருளாதாரத் துறையிலே வட இலங்கையை நசுக்கித் தமிழர்களை அடக்கியாளும் கொள்கை நீண்ட காலத்துக்குப் பயனளிக்காதென்றும் வட இலங்கையில் வர்த்தகமும் கைத்தொழில்களும் ஒரு காலத்தில் செழித்திருந்ததற்குக் காரணமாயிருந்த துறைமுகங்களைத் தாமதமின்றி, உடனே மறுபடி திறக்க வேண்டுமென்றும் சில மாதங்களுக்கு முன் "கல்கி" இதழில் ஒரு கடிதம் வெளியாகியிருந்தது ஞாபகமிருக்கலாம். இதைப்பற்றி ஸ்ரீ எஸ். ஜே. வி. செல்வநாயகம் சந்தர்ப்பம் கிடைத்தபொழுதெல்லாம் பார்லிமெண்டில் இடித்துக் காட்டி வந்தார். இந்தக் கிளர்ச்சி ஒரு அரசியல் கிளர்ச்சியாகவும் உருவெடுத்து விட்டபடியால் இனியும் சும்மா இருப்பது புத்திசாலித்தனம் அல்ல என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது.

ஊர்காவற்றுறை அல்லது காங்கேசன்துறை ஆகிய இவ்விரண்டிலொன்றை வர்த்தகத் துறைமுகமாக மறுபடி திறக்க உத்தேசித்திருப்பதாயும் இதைப் பற்றி வட இலங்கைப் பார்லிமெண்டு அங்கத்தினர்களின் அபிப்பிராயங்களைக் கோருவதாயும் போக்குவரத்து மந்திரி ஸர் ஜான் கொத்தலாவலை ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்.

பி. பி. ஸி.யில் பாரதி தினம்

பிரிட்டனில் தயாரிக்கப்படும் ஆங்கில சினிமாப்படங்களுக்குத் தமிழ்

சிங்கள மொழிகளைப் பதிப்பிப்பதில் தீவிரமாக வேலை நடப்பதாயும், கூடிய சீக்கிரத்தில் இப்படங்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் திரையிடப் படுமென்றும் இன்று லண்டனிலிருந்து ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. இம் முயற்சியில் ஊக்கம் மிகுந்த இலங்கை இளைஞரான ஸ்ரீ எஸ். சிவபாதசுந்தரமும் அவரது மனைவி ஸ்ரீமதி ஞானதீபமும் முக்கியப் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிருவரும் இப்பொழுது பி. பி. ஸி. யில் "தமிழ் ஓசை" என்ற ஒரு தமிழ் நிகழ்ச்சியை வாரம் தோறும் செவ்வாய்க் கிழமை இரவு 7-30 மணிக்கு ஒலிபரப்புகின்றனர். அவர்களுடைய ஒலிபரப்பு அகில இலங்கையிலும் ஒரு முகமாகப் பாராட்டப் படுகிறது. பி. பி. ஸி. மூலம் அவர்கள் "தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்று பாரதியார் விரும்பியதை வாரந்தோறும் செய்து காட்டி வருகிறார்கள். பாரதி தினத்தை பி. பி. ஸி. யில் சிறப்பாகக் கொண்டாட அவர்கள் இப்பொழுதிலிருந்தே ஏற்பாடு செய்யத் தொடங்கி விட்டார்களாம்.

பாஸ்போர்ட் முறை போதும்

இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையில் பிரயாணம் செய்பவர்களுக்கு இது வரையில் பாஸ்போர்ட் தொந்தரவுகளெல்லாம் இல்லாமலிருந்தது. இலங்கை அரசாங்கத்தின் குடியேற்ற வெளியேற்றக் கட்டுப்பாடு சட்டத்தின் விளைவாக அக்டோபர் முதல் தேதிக்குப் பிறகு இலங்கையிலிருந்து போகிறவர்களிடமும் இலங்கைக்கு வருகிறவர்களிடமும் பாஸ்போர்ட் இருந்தாக வேண்டும். இங்குள்ள இந்திய ஹைகமிஷனர் காரியாலயத்துக்கு டில்லியிலிருந்து பாஸ்போர்ட்டுகள் இன்னும் அச்சடித்து வரவில்லை. இப்பொழுது இந்தியாவுக்கு ரஜாவில் போய் அக்டோபருக்குப் பின் திரும்புவோருக்குப் பாஸ்போர்ட் இல்லாமல் வீண் தொல்லைகள் ஏற்படுமென்பதை நினைத்து ஹைகமிஷனர் காரியாலயம் பாஸ்போர்ட்டுகளுக்குப் பதிலாக அடையாள சர்டிபிகேட்டுகளை இங்கேயே அச்சிட்டு வழங்குகிறது. இந்த சர்டிபிகேட்டு பாஸ்போர்ட்டுகளைப் போலப் போட்டோ பதிப்பித்ததாயிருக்கும்.

வட்ட மேஜை

★ விவசாயச் சீர்திருத்தம்

உண்மையில் நம் மாகாண விவசாய, மராமத்து, உணவு இலாகாக்கள் ஒருமித்து மனது வைத்தால் உணவுப் பஞ்சத்தை ஆறே மாதங்களில் போக்கிவிடலாம். விவசாய இலாகாவில் கணக்கிலடங்கா அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால் நம் பக்கத்து சாதாரண விவசாயிகள் பெறும் பலன் கூட ஆடுதுறை போன்ற விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகளுக்குக் கிடைப்பதில்லை என்பது கண்கூடு. ஆராய்ச்சி என்னும் பெயரால் செலவாகும் தொகை கொஞ்சநஞ்ச மல்ல. ஆராய்ச்சி தேவைதான். ஆனால் அதற்கு இது தருண மல்ல. தவிரவும் இவர்களின் ஆராய்ச்சி சாதாரண விவசாயிக்கு எட்டுவதில்லை. உண்மையில் நமது சர்க்கார் உணவுப் பிரச்னைக்கு ஏதாவது வழி தேடுவதா யிருந்தால் ஏற்கெனவே அல்லல்படும் விவசாயிகளை வெருட்டின மாத்திரத்தில் ஒன்றும் பயன்படாது.

1. விவசாய, மராமத்து உணவு இலாக்காக்கள் ஒருவர் வசமே யிருக்க வேண்டும்.

2. விவசாய இலாக்காவில் உள்ளவர்கள் ஆராய்ச்சி என்னும் மோன நிலையை விட்டு கிராமம் கிராமமாக அடிக்கடி சென்று கிராமத்தார்களுடன் நேரிடையாகச் சகஜமாகப் பழகி, விவசாயத்துக்கே மிகவும் அத்தியாவசியமான பாய்கால், வடிகால் வசதிகளை அறிந்து அவற்றின் விவரத்தைத் தங்கள் யோசனையுடன் மராமத்திலாக்காவுக்குத் தெரிவிக்க வேண்டும். மராமத்திலாக்காவும் அவர்களின் யோசனையைப் பேச்சளவில் நிறுத்திக் கொள்ளாமல் செயலளவில் நிறைவேற்ற வேண்டும். உதாரணமாகச் சென்ற சில வருஷங்களில் பருவ மழை தவறியதே தவிர மேற்கிலிருந்து தண்ணீர்த் தட்டு ஏற்பட்டதே இல்லை. அப்படியே முன்னும் கொஞ்சம் ஏற்பட்டாலும் பின்விட்டு நீர் மட்டம் உயர்ந்து தான் வந்திருக்கிறது. அப்படி யிருக்கும் பொழுது இந்த வருஷம் ஆடி மாத வாக்கில் ஆறுகளில் தண்ணீர் விட்டால் எப்போது குறுவை நடவாகிறது? எப்போது தாளடி நடவாகிறது? எப்படி நல்ல விளைவை எதிர்பார்ப்பது? அன்றி விவசாயிகளுக்குத்தான் எப்படி ஊக்கம் பிறக்கும்? தவிரவும் நல்ல மழைக் காலங்களில் இவர்களும் ஆறுகள் நிறையத் தண்ணீர் விட்டு விடுகிறார்கள். ஆரம்பத்தில் தண்ணீருக்காக ஏங்கியவர்கள் அப்போது வடிகால் வசதிகளுக்காகப் பரிதவிப்பதே வழக்கமாகி விட்டது. தண்ணீரை ஒழுங்காகக் கட்டுப்படுத்தி விடுவதினாலேயே குறைந்தது 25 சத விகிதம் அதிக மகசூலை எதிர்பார்க்கலாம்.

3. இவர்கள் ஆராய்ச்சிக்கும், நிர்வாகத்துக்கும் ஆகும் செலவின் ஒரு பகுதியைக் கொண்டு ஸல்பேட், பாஸ்பேட், கடலைப் பிண்ணாக்கு போன்ற உரங்களை வாங்கி, தாலூகாவுக்குத் தாலூகா நன்செய் பெருத்த கிராமங்களாக அடைத்தாற்போல் சில கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றில் சகல நிலங்களிலும் தெளித்து விடட்டும். அதன் பலன் சாமன்யமல்ல. இதைக் கண்ட விவசாயிகளின் ஊக்கத்தையும், உணர்ச்சியையும் அடுத்த ஆண்டிலேயே பிரத்தியட்சமாக நாம் தெரிந்து கொள்ளலாம்.

இவை போன்ற ஆக்க வேலைகளைச் செய்து ஏழை விவசாயிகளுக்கு ஊக்கம் உண்டாக்க வேண்டும். வேறு எந்தவித அதிகாரத்தினாலும் பலன் சித்திக்காது. அதற்குப் பதில் ஊழலும், அசிரத்தையுமேதான் பெருகும்.

நடுவக்கரை
21—7—49

ஆ. நாராயணசாமி

○●○

விவசாய சீர்திருத்த மசோதா

சென்னை சர்க்கார் தற்சமயம் விவசாய அபிவிருத்திக்காக ஒரு மசோதா தயார் செய்திருக்கிறார்கள். அதன் நோக்கங்கள் 1. தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வருவது 2. ஏற்கெனவே சாகுபடியிலுள்ள நிலங்களில் விவசாயத்தைத் திறம்பட நடத்துவது. 3. எந்தவிதமான பொருள்களை விளைவிக்க வேண்டும் என்று ஒழுங்கு படுத்துவது.

ஆனால் இந்த மூன்று நோக்கங்களும் எவ்வாறு நிறைவேற்றப்படும் என்று பார்க்கும் போது விசித்திரமாக இருக்கின்றது. இதன் மூலம் விவசாயிக்கு நிலம் சொந்தமானது என்றுகூட நினைக்க இடமில்லாமலிருக்கிறது. சரியாகச் சாகுபடி செய்யாம லிருந்தால் நிலத்தை சர்க்கார் 'ஆர்ஜிதம்' செய்து விடுவார்களாம் அல்லது வேறு ஒருவருக்கு மாற்றி விடுவார்களாம்.

நிலத்தை நம்பி வாழும் மக்கள் அதில் உழைத்துத்தான் தீரவேண்டும். அப்படி சாகுபடி ஏதாவது குறைந்தால் அதற்குக் கால நிலை சரியாக இல்லாததோ, அல்லது விவசாயிக்கு வேண்டிய உரம், விவசாயக் கருவிகள் முதலியன கிடைக்காததோதான் காரணமாக இருக்கும். நிலத்தை நன்கு பராமரித்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு விவசாயிக்கு உள்ள குறைகளைக் கவனித்து, அவைகளைத் தீர்க்க முயலவேண்டுமே ஒழிய சட்டத்தின் மூலம் பயமுறுத்துவதும், ஏட்டுச் சுரைக்காயான 'விவசாய சூபர்வைசர்கள்' என்னும் நாமம் பூண்ட அதிகாரவர்க்கத்தைக் கொண்டு மிரட்டுவதும் கூடாது.

திருச்சிராப்பள்ளி
26—7—49


என். ஸ்ரீநிவாசன்

○●○

போதும்! போதும்!

சென்னை ரேடியோ நிலையம் எவ்வளவு தூரம் முன்னேறி வருகிறது என்பது பற்றி அதிகாரிகள் கவனிக்க வேண்டியது அவசியம். முக்கியமாக ஞாயிற்றுக்கிழமை தோறும் 'நேயர் விருப்பம்' என்னும் நிகழ்ச்சி சென்னையிலும் 'நீங்கள் கேட்பவை' என்னும் நிகழ்ச்சி திருச்சியிலும் ஒலி பரப்பப் படுகிறது. டாக்கிப் பாட்டுக்களில் பெரும்பகுதி தெலுங்கும் ஹிந்தியும் தான் முக்கியத்துவம் பெறுகின்றன. "நீங்கள் கேட்டவை"களைக் காதுகொண்டு கேட்கச் சகிப்பதில்லை. காலம்

காரணம் தெரிந்தது!



"என்ன ஐயா இது? பஸ் ஸ்டாண்டு விழுந்து கிடக்கிறதே? யாராவது தள்ளிட்டாங்களோ?"

"யாரும் தள்ள வில்லை. இன்றைக்கு ஒன்பதரை மணிக்கு வர வேண்டிய சர்க்கார் பஸ் சரியாக ஒன்பதரை மணிக்கே வந்து விட்டதாம்! அதைப் பார்த்து இந்த பஸ் ஸ்டாண்டு மூர்ச்சையாகி விழுந்து விட்டது!"

சென்ற எஸ். ஜி. கிட்டப்பாவின் பாட்டுக்கள் அவர் ஆயுள் காலத்தில் எடுத்த இசைத் தட்டுகளிலேயேதான் இன்றும் ஒலி பரப்பப் படுகின்றன போலும்! இல்லாவிட்டால் அவை இவ்வளவு கர்ண கடூரமாய் இருப்பதற்கு வேறு காரணம் என்னவாக இருக்க முடியும்? நிற்க. வாய்ப்பாட்டை எடுத்துக் கொண்டால் கீழ்க்கண்ட பாட்டுக்களைத்தான் ஒலி பரப்பும் கருவி ஏற்கும் போல் தோன்றுகிறது.

1 இருபயா பாவையா 2 கருணையா 3 நீம கிரிதனயே. சென்ற ஒரு வருஷத்து வானொலியை எடுத்துப் பார்த்தால் இந்தப் பாட்டுக்களுக்கு முதல் வோட்டு கொடுத்திருப்பது தெரியவரும். நான் சொல்வதைப் பொய்யாக்காமல் ஜூலை 24ல் திருச்சியிலும் ஜூலை 26ல் மதராஸிலும் முதலில் சொன்ன பாட்டுக்கள் இருக்கின்றன. ஜூலை 24ல் இரண்டாவது பாட்டும் வந்திருக்கிறது. இவ்விரு பாட்டுக்களையும் உதாரணத்துக்குக் காட்டியிருக்கிறேன். இம்மாதிரி இன்னும் அநேகம் சுட்டிக்காட்டலாம். நமது பாட்டு அகராதி இவ்வளவு சிறியதாய் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஆகவே ரேடியோ நிலையத்தார் மனதுக்குகந்ததும் அடிக்கடி கேட்டுப் புளித்துப் போகாததுமான பாட்டுக்களாக கேட்கும்படி செய்தால் நன்றாக இருக்கும்.

தியாகராயநகர்
23—7—49 கல்யாணி

'இம்போஸிஷன்'

நான் இப்போது ஆறும் பாரம் படிக்கிறேன். என் வகுப்பில் என்னுடன் படிப்பவர்களில் ஒன்பது பேர் ஆறாவது பாரத்தில் மூன்றும் வருஷம் படிப்பவர்கள். முதல் வருஷம் பெயிலாகிப் போனவர்களின் தொகை வேறு! எஸ். எஸ். எல். ஸி. யில் தேறுபவர்கள் எல்லாரும் மந்திரி வேலை பார்க்கவேண்டியவர்கள் என்ற எண்ணத்தால்தானோ என்னவோ, நாற்றுக்கு முப்பது பேர்களைப் பாஸாக்கக்கூட நம் அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

சில நாட்களுக்கு முன் என் இங்கிலீஷ் உபாத்தியாயர் ஒரு நாள் வகுப்பில் நுழைந்ததும் 'ஸாம்ஹும்புலிஸம்' என்பதன் பொருள் என்னவென்று கேட்டார். அவர் முந்தின நாள் சொன்னதை மறுநாள் என்னிடம் மறக்காமல் கேட்டு விட்டார். நான் சும்மாவிருந்ததால் அவருக்கு வந்த கோபத்தில் 'இருநூறு தடவை' என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தார். மறுநாள் 200 தடவை 'இம்போஸிஷன்' எழுதிக் காட்ட வேண்டும். இதுமட்டுமா? தமிழ் வகுப்புக்குப்போனால் புணரியலைக் கேட்டு "எங்கே, சொல்லு 'குறில் வழி ளைத்தல் வலிவரினும்...' தெரியாதா சரி ஐம்பது தடவை" என்கிறார் பண்டிதர். அவருக்கு நன்னூல் சூத்திரம் என்றால் உயிர். ஆனால், கடவுளே! நான் படும்பாடு...! 'ஜாமட்ரி' சூத்திரத்துக்கு 'ப்ரூப்' தெரியாதா? இதோ முப்பது தடவை. 'நீயூடன்ஸ் லா படிக்கவில்லையோ? வாங்கிக் கொள் இருபது தடவை' என்கிறார். பௌதிக உபாத்தியார். ஹிந்தி வகுப்பில் ஒரே பிரளயம்தான். 'சொல்லு! விலாயத் புரா ஹை அவுர்... உம் சொல்லு, ரைட்! 15 தடவை' —இது ஹிந்தி பண்டிட்.

மொத்தத்தில் இவற்றுக்கெல்லாம் சேர்த்து நானூறு பக்கத்தில் 'இம்போஸிஷன்' என்ற 'இல்லாத பாட'த்துக்கு ஒரு நோட்டுப் புத்தகம் வாங்கி வைத்துக் கொள்ளலாமா என்று யோசிக்கிறேன். நான் படித்துப் பட்டம்பெற வேண்டுமென்பது என் வீட்டார் விருப்பம். எனக்கோ வருஷ ஆரம்பத்தில் 'தேறி விடலாம்' என்றிருந்த உறுதி நாளாக ஆகக் குறைந்துகொண்டே வருகிறது. இந்த நிலையில் மேற்படிப்பைப் பற்றி நினைக்கவும் எனக்கு விருப்பமில்லை.

கொல்லம்
26—7—49 சு. கிருஷ்ணன்

○●○

மரவள்ளியின் மகிமை

ஜூலை 31வ "கல்கி" இதழில் வெளியாகி விருந்த 'பஞ்சம் ஒலிக்கிறது! படையிலே சேருங்கள்!' என்ற கட்டுரையை ஆர்வத்துடன் படித்தேன். அதில் கிழங்கு வகைகளைப் பற்றிக் கூறியிருப்பது முற்றும் உண்மையே. கிழங்குகளை அதிகமாக உபயோகிப்பதால் அறிவு வலிமைக்கோ தேக வலிமைக்கோ ஒரு குறைவும் ஏற்படாது. நமது முன்னோர்கள் பல காலம் கிடசாலிகளாக வாழ்ந்திருந்தனர் என்று பல புத்தகங்கள் கூறுவதே இதற்குப் போதிய சான்றாகும். அதனால் இந்திய மக்கள் மரவள்ளிக் கிழங்கை உணவாக உபயோகித்து நாட்டுக்குச் சேவை செய்யவேண்டும். அப்படிச் செய்தால் அநேகக் கோடி ரூபாய் செலவு செய்து வெளி

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25ஐ 'விவசாயச் சீர்திருத்தம்' என்ற கடிதம் எழுதிய நடுவக்கரை ஸ்ரீ ஆ. நாராயணசாமிக்கும், 'தமிழாசிரியர்கள்' என்ற கடிதம் எழுதிய திருச்சி ஸ்ரீ எஸ். ராமசந்திரனுக்கும் ரூ. 12-8-0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.

நாடுகளிலிருந்து அரிசி தருவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது.

மேலும், இதனால் வேறொரு நன்மையும் ஏற்படுகிறது. அதாவது, அரிசி உணவுக்காக ஆகும் செலவைவிட மரவள்ளிக்குச் செலவு மிகக் குறைவு. கூலி வேலை செய்யும் ஏழைக் குடியானவர்களுக்கு இந்த உணவு மிகவும் ஏற்றது. ஏனென்றால், ஒரு வேளைக்குக் கால்படி அரிசிச் சாதம் சாப்பிட்டுவிட்டு வேலைக்குச் சென்றால் மூன்று மணி நேரத்துக்குள் அது ஜீரணமாகிவிடும்; பசியும் வந்துவிடும். ஆனால் மரவள்ளிக் கிழங்கைப் பாகஞ் செய்து உண்டால் ஆறு மணி நேரம் வரை பசி தாங்கும்.

நான்கு குழந்தைகளும் தாய் தந்தையருமாக ஆறு நபர்கள் கொண்ட ஒரு ஏழைக் குடும்பத்திற்கு அரிசி உணவு உட்கொள்ள குறைந்தது தினம் இரண்டு ரூபாயாகும். ஆனால், அதே குடும்பத்திற்குப் பாகஞ் செய்த நான்கு ராத்தல் மரவள்ளிக் கிழங்கும், கால்படி அரிசிக் கஞ்சியும் போதுமானதாகவும், ருசியுடையதாகவும், பசி தாங்குவதாகவும் இருக்கும்; செலவும் மிகக் குறைவு. சென்ற உலக மகாயுத்தம் காரணமாகப் பொருள்களின் விலை நான்கைந்து பங்காக ஏறியிருக்கும் இந்தக் காலத்திலேகூட மரவள்ளிக் கிழங்கு ராத்தல் இரண்டு அணா என்று தான் விற்கிறார்கள்.

இந்தச் செடி எவ்வகை மண்ணிலும் கால நிலையிலும் வளருவதால், பெரிய மாளிகைத் தோட்டங்களிலும் வரிசையாக நடலாம். தோட்டத்திற்கு அழகாகவும் உணவுக்கு உபயோகமான பொருளாகவும் உதவும்.

இங்ஙனம், தற்காலத்து இந்திய மக்களுக்கு பயன்படுவதற்காக, முற்காலத்திலேயே வெளி நாட்டிலிருந்து இக் கற்பகத் தருவைக் கோனத்திற்குத் தருவித்த புகழ் திருவிதாங்கூர் அரசராயிருந்த ஸ்ரீ விசாகம் திருநாள் மகாராஜா அவர்களைத்தான் சேரும். சாண் வயிற்றை வளர்ப்பதற்கான இந்த நூதன முறையை நமக்கறிவித்த அம்மகானின் புகழ் எங்கும் பரவுக! பசிநோய் நீக்கி உயிர் காக்க வந்த மரவள்ளி வாழ்க!!

திருவனந்தபுரம்
5—8—49

ஏ. ருக்மணி பாய்

○●○

★ ## தமிழாசிரியர்கள்

கடந்த ஏப்ரல் மாதம் நடந்த இண்டர் மீடியெட் பரீட்சையில் நன்றாகப் படிக்கும் மாணவர்களில் அநேகர் தமிழிலே தோல்வியுற்றுள்ளனர். கல்லூரியில் முதன்மை ஸ்தானம் வகிக்க வேண்டிய எனது நண்பர் ஒருவர் (தமிழில் நன்கு தேர்ச்சி பெற்றவரும் தமிழில் முதன்மை மார்க்கு வாங்குபவரும்) தமிழில் மார்க்குக் குறைந்ததினால், இரண்டாவது ஸ்தானத்தை அடைந்தார். முதன்மை ஸ்தானத்தை அடைந்தவர் சமஸ்கிருதத்தை எடுத்துக் கொண்ட மாணவர்களில் ஒருவர். கருணையுள்ளவர்களும் மொழியின் வளர்ச்சிக்கு உண்மையில் பாடுபடுவர்களுமான சமஸ்கிருத ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நியாயமான மார்க்குகள் போடுகின்றனர். இதனால் அவர்கள் மொத்த மார்க்கில் உயர்ந்து போவதில் என்ன ஆச்சரியம்? மற்ற பாடங்களில் அவரைவிட அதிக மார்க்குகள் வாங்கியும் தமிழின் காரணமாக முதன்மை ஸ்தானத்தைத் தவறிய மாணவரின் மனத்துயரம் சொல்லுதற்கரிது. சில மாணவர்கள் தங்கள் தமிழ் மார்க்குகளையும், ஆங்கில மார்க்குகளையும் பிறரிடம் சொல்ல நாணுகிறார்கள். காரணம், தமிழ் மார்க்கு ஆங்கிலத்தைவிட குறைவாக இருப்பதுதான்.

இதனால் தமிழ் மாணவர்களுக்குத் தமிழாசிரியர்கள் அதிக மார்க்குப் போட வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்கவில்லை. தமிழாசிரியர் தங்களுக்கு ¼, ⅛ முதலியவற்றில் உள்ள பற்றினைவிட்டு, சமஸ்கிருத ஆசிரியர்களைப் போலவும், மற்ற ஆசிரியர்களைப் போலவும் நியாயமான தகுந்த மார்க்குகளைப் போடவேண்டும் என்பதே மாணவர் உலகத்து விருப்பம். இதனைத் தமிழாசிரியர்கள் கவனித்துத் தமிழ் மாணவர்களின் உள்ளத்தைக் குளிரச் செய்து, தமிழின் பெருமையையும், தமிழ் நாட்டின் பெருமையையும் உயர்த்துவார்கள் என நம்புகிறேன்.

திருச்சி
31—7—49


எஸ். ராமச்சந்திரன்

○●○

வேற்றுமை வேண்டாம்!

நான் சட்டக் கல்லூரியில் படிக்கும் மாணவன். சென்னையில் பிறந்தவனுமல்ல; சென்னையில் வளர்ந்தவனும் அல்ல; வெளியூரிலிருந்து வந்தவன். ஆனால் இருப்பதற்கு இடம்—வசிப்பதற்கு விடுதி—தானில்லை. இவ்வளவு பெரிய கல்லூரிக்கு ஒரு தனி ஹாஸ்டல் இல்லையெனின் அது எவ்வளவு பெரிய கேவலம். ஹோட்டல்களில் தனியாக இருந்

கவலை எதற்கு?



ஒலிப்பதிவாளர் :—டைரக்டர் ஸார்! இன்னிக்குக் காட்டு மிருகங்களுடைய பயங்கர சப்தம் கொஞ்சம் பதிவு பண்ண வேண்டும். மிருகங்களுக்கு என்ன செய்கிறது?

டைரக்டர் (யோசித்து விட்டு) :— நம்ம கதாநாயகியைச் சொந்தக் குரலிலேயே ஒரு பாட்டுப் பாடச் சொல்லிப் பதிவு பண்ணுங்கள்!



தான் அவர்கள் கேட்கும் அநியாய வாடகை கொடுத்தாக வேண்டும். அதுவும் சௌகரியமானவைகளாக அமையா. எத்தனையோ மாணவர்கள் என் போன்று இடமின்றி தத்தளிக்கின்றனர். இவை அனைத்தையும் நினைக்குங்கால் படிப்பை விட்டு வீட்டுக்கே திரும்பிச் சென்று விடலாமா என்று தோன்றுகிறது.

இந் நகரில் திருவல்லிக்கேணியில் 'வெங்கடேசுவர ஹாஸ்டல்' என்று ஒன்று இருக்கிறது. அதில் மாணவர்களுக்கு இடம் உண்டு என்று கேள்வியுற்று நான் சென்றேன். அங்கே பலதிறப்பட்ட மாணவர்கள் இருக்கிறார்கள். அங்கு சென்று ஒரு மனுவைப் பெற்று பூர்த்தி செய்து கொடுத்தேன். சரி இங்கு இடம் கிடைக்கும் போலிருக்கிறது' என்று என்னுடன் வந்த அன்பரிடம் கூறி மகிழ்ச்சியுடன் நின்றேன். ஆனால், "ஏன் சார்! வீணாக ஓர் 'அப்ளிகேஷன் பாரத்தைக்' கெடுத்துவிட்டீர்களே! என்னிடம் முன்னமே கேட்டிருந்தால் சொல்லியிருப்பேனே" என்று கூறினதைக் கேட்டவுடனே, எனக்கிருந்த சிறு நம்பிக்கையும் பறந்துவிட்டது. காரணம் நான் ஒரு முஸ்லிம்; முஸ்லிம்களை அங்கே சேர்த்துக்கொள்வதில்லையாம். தலையைத் தொங்கவிட்டுப் பொறுக்க முடியாத அவமானத்துடன் கீழே இறங்கினேன். ஜாதியின் பெயரால், மதத்தின் பெயரால் மாணவ சமுதாயத்தை இரண்டாகப் பிரிப்பதை எண்ணுங்கால் நான் அடைந்த மனவருத்தத்தை என்னவென்று எழுதுவேன்.

கல்வி மந்திரி கனம் மாதவமேனன் அவர்களும் ஏனையோர்களும் இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்துத் தற்காலிகமாகவேனும் ஒரு கட்டடத்தை ஹாஸ்டலாக மாற்றினால் பெரும் புண்ணியம் உண்டு. சர்க்கார் நினைத்தால் இது பெரிய காரியமல்ல. டெல்லியிலிருக்கும் அகதிகளுக்கு சர்க்கார் இடங்களிலேயே தங்க வசதி அளிக்கும்பொழுது மாணவர்களாகிய எங்களுக்கு சர்க்கார் ஏதேனும் ஒரு வழி செய்யக் கூடாதா?

சைதாப்பேட்டை
3—8—49
அ. கன்னு

○●○

தமிழில் இல்லையா?

தமிழோங்க வேண்டுமெனத் தனியோசை கேட்கும் இந்நாளில் பி. ஏ. மாணவர்களுக்கும் உப பாடங்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் 'வாழ்க்கைச் சுழல்' 'கலா வல்லி' போன்ற தமிழ் நவீனங்களைக் கண்டோம். பொழுது போக்குக்காகத் தமிழன் அரைமணி நேரத்தில் வாசித்து முடிக்கும் இதுபோன்ற புத்தகங்களை இரண்டு வருடங்கள் பி. ஏ. மாணவர்கள் படித்தால் தமிழ் முன்னேற்றமடைவது எப்போது? ஆங்கிலத்தில் டிக்கன்ஸ், தாமஸ் ஹார்டி போன்றோரின் உயர்ந்த இலக்கியங்களைத் தேர்ந்தெடுக்கும் போது, உலகியல் ஞானத்தைப் பெருக்கும் மகாத்மா காந்தி, தாகூர் போன்றோரின் மொழிபெயர்ப்பு நூல்கள் இல்லையா? உயர்ந்த சிந்தனைக்குரிய இலக்கியங்கள், நவீனங்கள், தான் நந்தமிழில் இல்லையா? இதனைச் சென்னை சர்வகலாசாலையார் கவனிக்க வேண்டியது மிக மிக அவசியம்.


பாளையங்கோட்டை
25—7—49
சு. சரோஜா
சு. அனசூயாதேவி
அ. ப. ஜெயலக்ஷ்மி

சுந்தரி பாய்

லக்ஸ் டாய்லட் சோப்பின்

புதிய பரிமளத்தை விரும்பும்

இன்னுமொரு நட்சத்திரம்



சினிமா நட்சத்திரங்களின்
அழகு தரும் சோப்

LTS. 209-172 TM

இத்தகைய தோற்றத்தை அளிக்கவே
நீங்கள் செலவு
செய்கிறீர்கள்



நீங்கள் ஒரு வாரத்தில் மூன்று க்ஷவரங்களுக்கு மட்டுமே நாவிதனுக்கு ஆறு அணா செலவு செய்வீர்களேயானால், ஏழு நாட்களில் நான்கு நாட்கள் இத்தகைய — தைக்கக்கூடியதும், அசுத்தமானதுமான — தோற்றத்தையே அளிப்பீர்கள்.


இத்தகைய தோற்றத்தை அளிக்க
உங்களுக்கு
லாபத்தைக் கொடுக்கிறது



நீங்கள் "7 ஓ' க்ளாக்" பிளேடுகளால் தினசரி க்ஷவரம் செய்துகொள்ளுவீர்களேயானால், வெற்றியை அடைவதற்குக் காரணமான சீர்படுத்தப்பட்ட தோற்றத்தைப் பெறுவீர்கள். தவிர, நீங்கள் பணத்தையும் மிச்சப்படுத்துவீர்கள்—ஒரு பாக்கெட் பிளேடுகள் பல வாரங்களுக்கு வரும்.

மார்க்கட்டில் "7 ஓ' க்ளாக்" பிளேடுகள் தான் மிகச்சிறந்தவை. அவைகள் மிகவும் சுத்தமான எஃகினில் செய்யப்பட்டவை. அதிகக் கருக்கை அளிப்பதன் பொருட்டு மும்முறை சாணை தீட்டப்பெற்றவை.

தினசரி "7 ஓ' க்ளாக்" பிளேடால் க்ஷவரம் செய்துகொள்ளுங்கள்.



குறைந்த செலவில் அதிக க்ஷவரங்
களை அளிக்கும் பிளேடுகள்

5 பிளேடுகளடங்கிய ஒரு பாக்கெட்டுக்கு அணா 7

உங்களுக்கு
எடை குறைந்து தளர்ச்சி, அதைரியம், பலவீனம்
வெறுப்பு உணர்ச்சிகள் ஏற்பட்டால்

கீழுள்ள எச்சரிக்கைகளை கவனியுங்கள்!



இல்லையேல் ஏதேனும் விப ரீதம் ஏற்படும்!

இன்றே மருந்துகளை உபயோகிக்காமல் உடனடியாகவே உங்கள் ஆரோக்கியத்தையும் சரீரத்தையும் நீடப் பழித்துங்கள்

இயற்கையில் போதிய அளவில் தாதுப் பொருள்களும் விடாமின்களும் இல்லை என்பதை எச்சரிக்கத்தான் "தாதுவும் விடாமினும்" குறைந்து விட்டது என்று வைத்தியர்களும் கூறுகிறார்கள். சமைத்த உணவுப் பதார்த்தங்கள் உங்களுக்குப் போதிய தாதுக்களை அளிக்கின்றன என்று கூற முடியாது.

இந்த விஷயத்தில் நீங்கள் வெகுவாய் சிரத்தை எடுத்துக் கொள்ளாவிட்டால்— உங்கள் தேகத்தின் வியூக சக்தி குறைந்து, துன்பமளிக்கும் வியாதிகள் வெகு சுலபமாக உண்டாகும். பிற்பாடு வாரக் கணக்கில் வைத்தியமும் மருந்தும்தான்.

யோசனை செய்யாமல் விகெல்ப் சாப்பிடுங்கள். மனித வளர்ச்சி வியூகத்திற்கு, இன்றியமையாத அத்யாவசியமான தாதுக்களில்— கால்ஷியம், பாஸ்பரஸ், கந்தகம், இரும்பு, மக்னீஷியம், அயோடின் ஆகாரம் போன்ற 9 தாதுக்கள் அடங்கி யிருக்கின்றன.

விகெல்ப் ஒரு சாதாரண முறையில், தாதுப் பொருள்கள் அனைத்துக்கும் இருப்பிடமான கடல் மூலிகையிலிருந்து தயாரிக்கப் பட்டது தான்.— தயாரிப்பில் விடமின் B 1, D 2 வும் கொஞ்சம், இரும்பும் சேர்க்கப் பட்டிருப் பதைத் தவிர வேறு மருந்து எதுவும் சேர்க்கப் படவில்லை. இன்றே விகெல்ப் உபயோகியுங்கள். எவ்வளவு விறுவிறுப்பாகவும், ஆரோக்யத் துடனும், ஆவலுடனும் வேலை செய்ய முடி கிறது என்பதை உணர்வீர்கள். விகெல்ப் ஒரு டானிக்குடன் ஆகாரமும்கூட.

VIKELP டானிக் ஆகாரம்
விகெல்ப்

V. 22

ஜலதோஷம், மார்-சளி உடம்பு வலிக்ளுக்கு நிவாரணமளிக்கிறது



'ஜீவான்ஜன்'

சரீரத்தின் மேல் தடவி தேய்ப்பதற்கும் ஆவியாக சுவாசிப்பதற்கும் உபயோகரமானது ரஸாயனக் களிம்பு, மிருக கொழுப்பு சேராதது


தயாரிப்பவர்கள்
ஜீவான்ஜன் லாபொரட்டரீஸ் லிட்
மதராஸ்-14



ஸோல் ஏஜன்டுகள்
கே.கே.பிள்ளை & கோ
ராயப்பேட்டை, மதராஸ்-14

ஜீவான்ஜன்

இந்தப் புதிய "குறைவான-பிரஷர்" டயர்களுடன்



உங்கள் காரைக் கண்டு குதூகல மடைவீர்கள்

உங்கள் காரின் உழைப்புக்கு புதிய சூபர் - குஷன் டயர்கள் வெகு பிரமாதம்!

ஏனென்றால், அவை பெரியவை, மிருதுவானவை; அதிக அளவு காற்று பிடிக்கும். இருந்தாலும் 24 பவுண்டு பிரஷர்தான்.

உங்கள் கார் — புதியதோ பழயதோ — போட்டுப் பாருங்கள். சவாரி வெகு விசித்திரமாக இருக்கும்.

- எவ்வித ரஸ்தாவிலும் மென்மையாகவும் மிருதுவாகவும் போகும்
- அதிகப் பாதுகாப்புடன் அதிக பளு இழுக்கும் சக்தி
- உங்கள் காருக்கு மிகவும் குறைந்த தேய்மானம்
- அதிக சப்தமின்மை பழுதுச் செலவும் குறைவு
- அதிக மைல்கள் மேலும் சிக்கனம்
- மிகவும் அழுத்தம் வாய்ந்தது

The new Super Cushion

by GOODYEAR

உலகமெங்கும் ஏராளமான ஜனங்கள் வேறெதையும்விட குட்இயர் டயர்களையே உபயோகிக்கின்றனர்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk. Madras

கல்கி



KALKI ஆகஸ்டு 28, 1949

4 அணா

கிளைகள் ஆபீஸ்கள் :
எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்ட் ரோடு
சாயப்பேட்டை, மயிலாப்பூர், தியாகராயநகர்,
புரசவாக்கம், எழும்பூர், சௌகார்பேட்டை, ராயபுரம்

•

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும்
பம்பாயிலும் பிராஞ்சுகளும் ஆபீஸ்களும் உள்ளன

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 53,00,000
ரிஸர்வ் நிதி	ரூ. 62,00,000

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்

என். கோபால ஐயர், செக்ரடரி



தி இந்தியன் பாங்க் லிமிடெட்

மார்ச்சளி, இரவில் இருமல் இன்னும் சுவாசப் பை, மார்புக் கோளாறுகளுக்கு

பெப்ஸ்

உங்களுக்குத் தேவை



ருசியுள்ள பெப்ஸ் மாத்திரை ஒன்றை உட்கொள்ளுங்கள். அது கரையும் போதே அதன் மிகச் சிறந்த மருந்து சத்துக்கள் உங்களது சுவாசத்துடன் சேர்ந்து சுவாசப் பைக்குள் சென்று, துரிதமாக ஆறுதலளிக்கிறது. பெப்ஸ் இருமலை நிறுத்தி, புண்பட்டு வெந்த மென்தோல்களுக்கு இதமளித்து கோழையைத் தளர்த்தி அகற்றிவிடுகிறது.



PEPS

சுவாச, நிருதய
கிரீம் நாரண
மாத்திரைகள்

தொண்டை, சுவாசாசயம், மார்பு நோய்களுக்கு அதிக சக்தி வாய்ந்த பரம ஔஷதம்

ஏஜண்டுகள் : மெஸர்ஸ். தாதா & கோ., பி. டி. மதராஸ்

No. 4

REGD. NO. M. 4392



½ கப் கோதுமைமாவு, 1 கப் மைதாமாவு, ருசிக்குத் தகுந்தபடி உப்பு இவைகளை கலக்கவும். 3 தேக்கரண்டி டால்டாவை மாவுக்கலவையில் தேய்த்து, பூரிக்கு தயாரிப்பதுபோல் பிசைந்தமா செய்து சிறிய பந்துகளாக உருட்டிக் கொள்ளவும். பந்துகளை 3 அங்குலம் குறுக்களவுள்ள வட்டவடிவமாக பரத்தி இருபாதியாக துண்டிக்கவும். ஒவ்வொரு பாதியையும், விளிம்புகளை தண்ணீரால் நனைத்து ஒன்றோடொன்று பொருத்தி திரிகோணமாகச் செய்து கொள்ளவும். மசாலா சேர்த்து பொடிசெய்த உருளைக்கிழங்கும் பயறுமோ அல்லது சிறு மாமிசத்துண்டுகளோ, இந்த திரிகோணத்திலுட் திணித்துமூடி பொருத்தவும். சூடான டால்டாவில் சமோசாக்களை சிறு சிவப்பாகும் வரை நன்கு பொரித்து எடுக்கவும்.

வடித்த கஞ்சி ஒரு உணவா?

இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே— அல்லது என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்!

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353,
பம்பாய் 1



HVM. 96-172 TM